பக்கங்கள்: 40
விலை: 40

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 20 கார்த்திகை 30ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 16 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## அவதானம்!

### காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ. 16
வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் » 05

# கூட்டமைப்பின் பணய கைதியாக ஐ.தே.க.

- கூட்டமைப்பின் யோசனையை ஏற்காவிட்டால் ஐ.தே.கவுக்கு அதிகாரம் இல்லை
- கூட்டாட்சி அரசமைப்பின் ஊடாக நாடு 9 துண்டுகளாகப் பிளவடையப்போகிறது
- சந்திரிகாவுக்கு தெரியாமல் புலிகளுடன் ஒப்பந்தம் செய்தவர் ரணில் விக்கிரமசிங்க
- எவரும் எதிர்பாராத பேரெழுச்சி பெற்ற அணியாக நாங்கள் மீண்டும் வருவோம்

## பதவிதுறந்த மகிந்த இனவாதப் பேச்சு



கொழும்பு, டிசெம்பர் 16
நாடாளுமன்றத்தில் 103 ஆசனங்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியை 14 ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருக்கிறது என்று இனவாதப் பேச்சைக் கக்கினார் மகிந்த ராஜபக்ச.
கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச, டிசெம்பர் 3ஆம் திகதி வரையில் அந்தப் பதவியில் இருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம், டிசெம்பர் 3ஆம் திகதி வழங்கிய இடைக்காலக் கட்டளையில், மகிந்த தலைமை அமைச்சராகச் செயற்படத் தடைவிதித்திருந்தது. அந்தத் » 37

## கொண்டாட்டமாக பதவி விலகிய மகிந்த ராஜபக்ச



கொழும்பு, டிசெ. 16
தலைமை அமைச்சர் பதவியில் மகிந்த செயற்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், அந்தப் பதவியிலிருந்து விலகும் நிகழ்வை மகிந்த » 37

## கூட்டு அரசுக்குச் சாத்தியமில்லை: ஐ.தே.மு. 30 பேரே அமைச்சர்கள்

*ஐ.தே.க. செயலர் அகிலவிராஜ் திட்டவட்டம்*

கொழும்பு, டிசெ. 16
ஐக்கிய தேசிய முன்னணியின் அரசே அமையும். அதில் 30 அமைச்சர்கள் மாத்திரமே இருப்பார்கள். கூட்டு அரசு தொடர்பில் எவ்வித பேச்சுகளையும் நாங்கள் நடத்தவில்லை. ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச் » 37

## கூட்டமைப்புக்குக் கோடி நன்றி தமிழ் மக்களுக்குத் தீர்வு உறுதி

*ரணிலின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை*
*அலரிமாளிகையில் சஜித் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 16
எதேச்சதிகாரத்துக்கு எதிரான எமது ஜனநாயகப் போராட்டம் நீதித்துறையின் ஊடாக வென்றுள்ளது. ஐக்கியதேசிய முன்னணி மீண்டும் அரியணை ஏறுகின்றது. இதற்கு ஒத்துழைத்த வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாம் மறந்திடலாகாது. அவர்களுக்குக் கோடான நன்றிகளைத் தெரிவித் » 37

## வரலாற்றுக்கால படையெடுப்புகளைவிட வெளிநாடுகளின் ஆக்கிரமிப்பு மோசம்

*கொதிக்கிறார் மைத்திரிபால*

கொழும்பு, டிசெ. 16
வரலாற்றுக் காலங்களில் எமது நாடு முகம் கொடுக்க நேர்ந்த படையெடுப்புகளை விட முற்றிலும் வேறுபட்ட அந்நிய நாடுகளின் செல்வாக்கு தற்போது எமது நாட்டின் மீது செலுத்தப்படுகின்றது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
தியத்தலாவை » 37



## ரணில் சுப நேரத்தில் இன்று பதவியேற்பு

கொழும்பு, டிசெ. 16
நாட்டின் தலைமை அமைச்சராக ஐக்கியதேசியக்கட்சியின்தலைவர்ரணில் விக்கிரமசிங்க இன்று காலை 10.30 மணிக்குப் பதவியேற்கவுள்ளார். அவரது பதவியேற்புக்கான ஏற்பாடுகள் நேற்று மாலையே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய » 37

## அந்தரத்தில் தொங்குகின்றது எதிர்க்கட்சித் தலைவர் பதவி

கொழும்பு, டிசெ. 16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடர்வாரா? இல்லையா? என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. » 04

## மீள்குடியேற்ற அமைச்சராக சமரவிக்கிரம?

கொழும்பு, டிசெ. 16
ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் அமைச்சர்கள் நாளை திங்கட் கிழமை மாலை பதவியேற்கவுள்ளார்கள். அமைச்சர் பட்டியலைத் தயாரிக்கும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க, தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்கள் நேற்றைய » 04




SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி.
12.60% வ.வ.
வ.தே.வ. 13.14%
4 மாதங்கள்
அழையுங்கள்: 0115 411 411
011 5 411 411
SDB வங்கி
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

# மைத்திரிபால முன்பாக பதவியேற்பதை நினைக்கவே வெட்கமாக இருக்கின்றது

## சரத் பொன்சேகா மீண்டும் சாடல்

கொழும்பு, டிசெ. 16

எந்த அமைச்சையும் ஏற்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன். ஆனால், அரச தலைவர் மைத்திரியின் முன் மீண்டும் அமைச்சராகப் பதவியேற்கவுள்ளமையை நினைத்து வெட்கப்படுகின்றேன். இவ்வாறு சிரித்தவாறு தெரிவித்தார் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான 'பீல்ட் மார்ஷல்' சரத் பொன்சேகா.



கோப்புப்படம்

புதிய அமைச்சரவையில் சட்டம், ஒழுங்கு அமைச்சை சரத் பொன்சேகா விடமும் ஒப்படைக்குமாறு ஐக்கியதேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என்று வெளியான செய்தி தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாட்டில்ஏற்பட்ட அரசியல்நெருக்கடிக்கு மைத்திரியே பிரதான காரணம் என்று அனைவரும் தெரிந்த விடயம். அவர் செய்த கேவலமான நடவடிக்கைகளை நாம் மறக்கவே மாட்டோம். நாட்டின் நற்பெயரை அவர் கெடுத்துவிட்டார். நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்புஎம்மிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் திறம்படச் செய்வோம்" என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகா உரையாற்றும்போது, மைத்திரிபால சிறிசேனவை 'பைத்தியக்காரன்' 'மன நோயாளி' என்று விளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டு அரசின் ஆட்சிக் காலத்தில் சட்டம் ஒழுங்கு அமைச்சுக்கு சரத் பொன்சேகாவை நியமிக்காமல் தடுத்தவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன என்பது நினைவில் கொள்ளத்தக்கது . (5)

# மகிந்தவின்பதவிவிலகல்ஜனநாயக போராட்டங்களுக்குகிடைத்தவெற்றி

## சமந்தா பவர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 16

பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சுதந்திர ஊடக நிறுவனங்கள் மற்றும் சுயாதீன நீதித்துறை ஆகிய அனைத்தும் இணைந்துஇலங்கையில் ஜனநாயகம் தலை தூக்குவதைச் சாத்தியமாக்கியுள்ளன என்று ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள்தூதுவர்சமந்தாபவர் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரியால்,தலைமைஅமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்துகருத்துவெளியிடுகையிலேயே சமந்தா பவர்மேற்கண்டவாறுகூறியுள்ளார்.

'அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனநாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட அரசிதழ் தவறானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தமையானது இலங்கையின் ஜனநாயகத்துக்கு கிடைக்கப்பெற்ற மிகப் பெரியதொரு வெற்றியாகும். உயர்நீதிமன்றத் தின்தீர்ப்புக்குமதிப்பளித்து, அரசியல் நெருக்கடியைத் தணிப்பதற்கு அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேன நடவடிக்கைஎடுக்கவேண்டும். அத்தோடு மகிந்த தலைமைஅமைச்சர்பதவியைத் துறந்துள்ளார். நாட்டின் பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சுதந்திர ஊடக நிறுவனங்கள் மற்றும் சுயாதீன நீதித் துறை ஆகிய அனைத்தும் இணைந்து இந்த நிலையை ஏற்படுத்தி, நாட்டின் ஜனநாயகம் தலை நிமிர்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார். (5,61)

# மகிந்தவுக்கு வெட்கக்கேடு! ரணிலுக்கு மக்கள் புகழாரம்!!

## 'அரசியல் சதி' முடிவுக்கு வந்தமை தொடர்பில் சம்பிக்க எம்.பி. கருத்து

கொழும்பு, டிசெ. 16

சுமார் 50 நாள்களாக நாட்டைஉலுக்கியஅரசியல் சதித் திட்ட நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன. தலைமை அமைச்சர் பதவி ஆசை பிடித்த மகிந்த ராஜபக்ச, அந்தப் பதவியைத் துறந்துள்ளார். இதை நினைத்துஅவர்வெட்கப்படவேண்டும்.இவ்வாறுஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராஜதந்திர ரீதியில் ஜனநாயக வழியில் போராடிய ஐக்கிய தேசிய முன்னணிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. அதன் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு மக்கள் புகழாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. நீதியின் வழியில் தலைமை அமைச்சர் கதிரையில் அவர் மீண்டும் அமரவுள்ளார்.

நாட்டில் மீண்டும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசு இன்று முதல் மீண்டும் மலர்கின்றது. மீண்டும்தலைமைஅமைச்சராகரணில்விக்கிரமசிங்க இன்று ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கவுள்ளார். நாளைதிங்கட்கிழமைபுதிய அமைச்சரவை பதவியேற்கும். ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் ஒற்றுமையாக ஓரணியில் நின்றுநல்லாட்சிதொடர்ந்து தங்கள் பங்களிப்புகளை வழங்குவார்கள். கடந்த காலத்தில் நாம் விட்ட தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கிப் பயணிப்போம். அரசியல்சதித்திட்டத்துக்கு சர்வாதிகார ஆட்சிக்கு இனிமேல் இடமளியோம் - என்றார். (5)

# மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பினார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 16

உடல்நலக்குறைவால்கடந்தஇரு தினங்களாக கொழும்பு 'லங்கா' (அப்பலோ) தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வந்த எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் நேற்று வீடுதிரும்பினார்.

கொழும்பிலுள்ள தனது வீட்டில் தங்கியிருக்கும் அவர், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தற்போதைய அரசியல்நிலைவரம்தொடர்பில்முக்கிய பேச்சுநடத்தவுள்ளார். நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல்ஒருமணிக்குநாடாளுமன்றம் கூடவுள்ளதால் அதற்கு முன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அவர் பேசவுள்ளார். (5)

# இருந்ததையும் கெடுத்தார் மகிந்த

## இப்படிச் சொல்கிறார் மனுஷ நாணயக்கார எம்.பி.



கொழும்பு, டிசெ. 16

மகிந்த ராஜபக்ச சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் மற்றும் அதிகாரஆசைகளுக்கு ஆதரவளித்து, தற்போது அவருக்கு மக்கள் மத்தியில் காணப்பட்ட நற்பெயரையும் மதிப்பையும் இல்லாமலாக்கிக் கொண்டார்.

இவ்வாறுஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த தலைமை அமைச்சராகச் செயற்பட முடியாது என்பதே நீதிமன்றத்தின் தீர்ப்பு. ஆனால் முன்னாள் அரச தலைவர் மகிந்த தன் பதவியை, தானே துறந்து கொள்வதாகத் தெரிவித்துள்ளதானது நகைச்சுவையானது. எவ்வாறிருப்பினும் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துநாடகங்களும்தற்போது நிறைவடைந்துள்ளன். மீண்டும் அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதை விடுத்து அடுத்தகட்டநடவடிக்கைகளைமுன்னெடுப்பதே சிறந்ததாகும் - என்றார். (5,61)

# மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.16

மீசாலைஉடமாதவாகல்விநிலையத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரிட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில்இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

கல்வி நிலைய இயக்குநர் க.தவயோகராசா தலைமையில்நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் குணசிங்கம் மிகுந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட விவசாய பொறியியல் துறை பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-159)

# திறப்பு நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ.16

மட்டுவில் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட மதில் திறப்பும், மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.

நிலையத் தலைவர் கு. சுரேஸ்குமார் தலைமையில்நடைபெறும்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாணசபையின்முன்னாள் உறுப்பினர்களான ச. சுகிர்தன், கேசவன் சயந்தன்,சிறப்புவிருந்தினராகசாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன்ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-159)

# தேசியநத்தார்தினவிழாமன்னாரில்இன்று

## மைத்திரி தலைமையில் இன்று நடைபெறும்

மன்னார்,டிசெ.16

வருடா வருடம் தேசிய ரீதியில் கொண்டாடப்படும்கிறிஸ்துபிறப்பு நிகழ்வு மற்றும் ஒளிவிழா நிகழ்வானது இந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று இடம்பெறவுள்ளன.

வடக்கில் அதிக கிறிஸ்தவ சமயத்தைச்சார்ந்தமக்களைக்கொண்ட மாவட்டங்களில்மன்னார்மாவட்டமும் ஒன்று. அந்த வகையில் இலங்கையில்உள்ளஅனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 2018ஆம்ஆண்டுக்கானதேசிய நத்தார் தின விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும்இணைந்துஏற்பாடுசெய்யும்அரசநத்தார்கொண்டாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மன்னார் நகர சபை விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

வர்த்தகம், நுகர்வோர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்துவ மத அலுவல்கள் அமைச்சின் அழைப்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர், ஆயர்வின்ஸ்டன்பர்னாந்து, மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர். இம்மானுவல் பர்னாந்து, ஆகியோரின் பங்கு பற்றுதலில் அரசதலைவர், தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ,இலங்கை முழுவதிலும் இருந்து சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (56)

முச்சக்கர வண்டிகளுக்கு

# கட்டணக் கணிப்புப் பொறி பொருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்குக் கட்டணக் கணிப்புப் பொறி பொருத்தும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டமாகயாழ்ப்பாணம்நகரப்பகுதியில் சேவையில் ஈடுபடும் 15 முச்சக்கரவண்டிகளுக்கு நேற்று கட்டணக் கணிப்புப் பொறி பொருத்தப்பட்டது. இந்தநிகழ்வுயாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்துக்கு முன்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணக் கணிப்புப் பொறி பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்ட மக்களின் இரண்டு ஆண்டுகாலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளமை நிறைவு தருகின்றதுஎன்றுநிகழ்வில்கலந்துகொண்டயாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கணிப்புப் பொறியைப் பெருத்துவதற்கு எந்தச் சாரதியும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. கணிப்புப்பொறியைப்பொருத்தியபின்னர்முச்சக்கரவண்டிச்சேவையைநாடுவோர்தொகை அதிகரிக்கும். மாவட்டத்தின் நற்பெயரும் உயரும். இந்தநடவடிக்கையை2016ஆம்ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைமுறைப்படுத்த முயன்றோம். தவிர்க்கமுடியாதகாரணங்களால்அது நிறைவேறவில்லை.தற்போதுநிறைவேறுவது மனநிறைவைத்தருகின்றதுஎன்றும்மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

மாவட்டச் செயலரால் இந்தச் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளமையும், மாநகரசபை எல்லைக்குள் இந்த முறைமை அறிமுகமாவதும் மகிழ்ச்சியளிக்கின்றது என்று நிகழ்வில் உரையாற்றிய யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

கட்டணக் கணிப்புப் பொறி பொருத்துவதன் மூலம் முச்சக்கர வண்டிச் சாரதிகளது தனி மனித வாழ்வு மேம்படும். அடுத்த கட்டமாக மாநகர சபை எல்லைக்குள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு அடையாள அட்டையும், அவர்கள் தெரிவு செய்யும் நிறத்தில் சீருடையும் வழங்கப்படவுள்ளது என்றும் மாநாகர முதல்வர் தெரிவித்தார்.

இந்த கட்டணப் பொறி முறையை 2016ஆம் ஆண்டுநடைமுறைப்படுத்தமாவட்டச்செயலர் முயன்றார். தவிர்க்க முடியாத காரணத்தால் அது முடியாது போனது -என்றார். நான் கூறுகின்றேன் மாகாண சபையே அதை எழுத்தில் தடுத்தது என்று தெரிவித்தார் நிகழ்வில் உரையாற்றியவடக்குமாகாணமுன்னாள்எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

இந்த முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரைப்பலமுறைகோரினேன். அது நடக்கவில்லை. தற்போது மாவட்டச் செயலர் அதைவிரைவாகநடைமுறைப்படுத்தியுள்ளார் என்றும்முன்னாள்எதிர்க்கட்சித்தலைவர்தெரிவித்தார். (ற-105)

# இனவாதத்தை கையில் எடுக்க மகிந்த முயற்சி!

## சாடுகின்றார் சுனந்த

**கொழும்பு, டிசெ.16**

**மகிந்தராஜபக்சதனது பதவி விலகல்தொடர்பாக தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் காணப்படும் கருத்துக்கள் அவர் தீவிர சிங்கள பௌத்தப் பரப்புரைக்குத் தயாராகின்றார் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.**



இவ்வாறு மனித உரிமை செயற்பட்டாளரும் மூத்த ஊடகவியலாளருமான சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மகிந்தராஜபக்சதனதுஅறிக்கையில்103ஆசனங்களை மாத்திரமே கொண்டுள்ள ஐக்கியதேசிய கட்சியை தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது. பணயக்கைதியாக்கியுள்ளது என்றுகுறிப்பிட்டுள்ளார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு சொல்வதை ஐக்கியதேசிய கட்சி செவிமடுக்காவிட்டால் ஐக்கியதேசியகட்சிநாடாளுமன்றப்பெரும்பான்மையை இழக்கவேண்டிவரும்.நாடாளுமன்றத்தை இயக்கும் கருவி தமிழ் தேசிய கூட்டமைப்பிடமே உள்ளது என்றும்மகிந்தராஜபக்சதெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனது கீச்சக் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவிலேயே சுனந்த தேசப்பிரிய இவ்வாறுபதிவிட்டுள்ளார்.மகிந்த ராஜபக்சவின் இந்த அறிக்கையில்உள்ளஆபத்துஎன்னவென்றால் இது தமிழ் எதிர்ப்பு இனவாதத்தை கொண்டிருக்கின்றது என்று சுனந்த குறிப் பிட்டுள்ளார். மகிந்தராஜபக்சதீவிரசிங்கள பௌத்த பரப்புரைக்குத் தயராகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# அரச தலைவர் தேர்தலில் மகிந்தவை நிறுத்துவோம்

## குமார வெல்கம தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.16**

**மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மகிந்தராஜபக்சவைமீண்டும்அரசதலைவர் தேர்தலில் போட்டியிடும் நிலைமையை ஏற்படுத்துவோம்.**



இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமதெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவின் விஜேராம இல்லத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தராஜபக்சபதவியில் இருந்து விலகியமை சிறந்த விடயம். அதை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன். பெரும்பான்மைக்கு நாம் தலைவணங்க வேண்டும். எதிர்க்கட்சியாகச் செயற்பட்டுநாடளாவியரீதியில் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மகிந்த ராஜபக்சவை மீண்டும் அரச தலைவர் வேட்பாளராக்க முடியும். யார் மகிந்தராஜபக்சவைவிட்டுச் சென்றாலும் நான் ஒருபோதும் விலகிச் செல்ல மாட்டேன் - என்றார். (ற)

# தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்

*ரோஹிதஎம்.பி.கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ.16



எதிர்க்கட்சியின் கடமைகளைச் செய்து கொண்டு எதிர்காலத்தில்விரைவாகத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிதஅபேகுணவர்த்தனதெரிவித்துள்ளார்.

கொழும்பு, பத்திரமுல்லவில் அமைந்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

4 ஆண்டுகளாக அரசு அமைத்துச் செய்ய முடியாதுபோன பொருளாதார நிவாரணத்தை மிகக் குறுகிய காலத்தில்மகிந்தராஜபக்சவால்வழங்கமுடிந்தது. நாடாளுமன்றில் காணப்பட்ட மிகப்பயங்கரமானமூன்றில்இரண்டு பெரும்பான்மையையும் இல்லாது செய்துள்ளார்.

எதிர்க்கட்சியில்இருந்துமக்களின்வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக முடிந்தளவு முயற்சி செய்வோம் - என்றார். (ற)

# தென்மராட்சியில் மீள தலைதூக்கும் டெங்கு

சாவகச்சேரி, டிசெ.16

கடந்த மாதம் பெய்த மழையின் பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்றுஅதிகரித்துள்ளதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது. டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீரேந்து பொருள்களைப் துப்புரவாக்கிப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சியில்கடந்தமார்ச்மாதம்முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் மிகக் குறைந்தளவானோரே டெங்குத் தொற்றுக்குள்ளாகியிருந்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தெற்குக்குச் சென்று திரும்பியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த மாதம் பெய்த கடும் மழையால் பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது. நவம்பர்மாதம்31பேரும், டிசெம்பர் மாதத்தில்நேற்றுவரை20பேரும்டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டெங்குத்தொற்றைக்கட்டுப்படுத்தபொதுமக்கள் குடியிருப்புக்களில் டெங்கு உற்பத்தியாகக் கூடிய நீரேந்து பொருள்களை அப்புறப்படுத்தி டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சுகாதாரப் பகுதியினரால் கோயில்குடியிருப்புமற்றும்மட்டுவில்தெற்கு ஆகியபிரதேசங்களில்டிசெம்பர்மாதம்நடத்தப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனைகளில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்ட 8 பேருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ற9)

# தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்



யாழ்ப்பாணம், டிசெ.16


யாழ்ப்பாணம் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில்தரம்7 இல் கற்கும் செல்வி கனிஸ்ரா சிவகுமார் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப் பேட்டியில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தையும், மறைமாவட்ட ரீதியில் நடைபெற்ற திருவிவிலியப் பேச்சுப் போட்டியில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். இவர் கடந்த முதலாம் திகதி சிங்கப்பூரில் நடைபெற்ற 2018ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு மாணவர் முழக்கத்தில் இலங்கை நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பங்குக் கொண்டு பன்னாட்டு ரீதியில் 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். (ற)


**Winstar International Learning Centre இன்**

**புதிய சலுகைகளுடன் புதிய பிரிவு ஆரம்பம்**

| | Starting Date | Duration | Course Fee |
|---|---|---|---|
| Spoken English | 20.12.2018 & 01.01.2019 | 2 Months | ~~25,000~~ 18,000 |
| IELTS | 14.12.2018 & 01.01.2019 | 3 Months | ~~25,000~~ 18,000 |
| Life Skill (A1 BI) | 14.12.2018 & 20.12.2019 | 2 Months | ~~25,000~~ 15,000 |
| English Grammar For Beginners | 20.12.2018 & 01.01.2019 | 2 Months | ~~25,000~~ 12,500 |

**Winstar Consultants (Pvt)Ltd.**
45, Vembadi Street, Jaffna.
076 136 8544



நன்றி சஜித் பண்டார

# மைத்திரி, மகிந்த பயணம் தடைகளின்றித் தொடரும்

## மகிந்தானந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ச கூட்டணியின் அரசியல் பயணம் எந்தத் தடைகளும் இன்றித் தொடரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் விஜேராம இல்லத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு அராஜக நிலைக்குச் செல்வதைத் தவிர்க்கும் வகையில் நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளித்து மகிந்த ராஜபக்ச தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். நாம் பிரிவினைக்கு எதிராகக் குரல் கொடுத்தபோது சில தரப்பினர் ஜனநாயகத்துக்காகப் போராடிக்கொண்டு வீதியில் இறங்கினர். ஜனநாயகம் கிடைக்கும் வரை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவும், மகிந்த ராஜபக்சவும் இணைந்து செயற்பட்டுவருகின்றனர்.

அதன்மூலம் நாம் 85 வீத மக்களின் ஆணையைப் பெற்றுள்ளோம். அதை அனைவரும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும் - என்றார். (ற)

# முரட்டு ஆலோசகர்களை மகிந்த மாற்றுவார் என்று நம்புவோம்!

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

அவமானத்துக்குட்பட்டு பதவியில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்படாமல் தானாகவே மகிந்த ராஜபக்ச விலகிச்சென்றமையை வரவேற்கின்றேன்.

தவறான பாதையில் தன்னை வழிநடத்திய முரட்டுத்தனமான ஆலோசகர்களை அவர் மாற்றுவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன்.

தலைமை அமைச்சர் பதவிக்கு அரச தலைவரால் நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச நேற்றுத் தனது பதவியில் இருந்து விலகியிருந்தார்.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டு வந்திருந்தார். ஆனால் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்தத் தவறியமையால் போரை வெற்றிகொண்ட உண்மையான "ஹீரோவாக" அவரால் மாற முடியாது போனது. தவறான பாதையில் தன்னை வழிநடத்திய முரட்டுத்தனமான ஆலோசகர்களை அவர் மாற்றுவார் என்று எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ற)

**ஸ்ரீலங்கா புத்தகசாலையின் மாபெரும் மலிவு விற்பனை**

- அனைத்து தமிழ் பயிற்சிப் புத்தகங்களுக்கும் **20 %** விசேட விலைக்கழிவும்
- ஏனைய புத்தகங்களுக்கு **15%** விசேட விலைக்கழிவும் ***(1000/= மேற்பட்ட கொள்வனவுகளுக்கு மட்டும்)***
- அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கு **15%** முதல் **40%** வரையான விசேட விலைக்கழிவுகளும் வழங்கப்படும்.

இச்சலுகை 15.01.2019 வரை மட்டுமே!
**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.**

ஸ்ரீலங்கா புத்தகசாலை
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 0212222573

ஸ்ரீலங்கா புத்தகசாலை
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்:3122 திகதி: 2018.12.15 சனிக்கிழமை
SATURDAY FORTUNE
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 12 15 23 52 E
போனஸ் இலக்கம்: 28
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 54,909,865/-
Web: www.dlb.lk
0114 824 824, 0112 333 776

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 465
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.15
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 51,281,480/-
வெற்றி இலக்கங்கள்: 17 43 62 69
ஆங்கில எழுத்து: Y
Web: www.dlb.lk
0114 824 824, 0112 333 778

**සංවර්ධන වාසනාව**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 204
சீட்டிழுப்பு திகதி ▸ 15.12.2018 சிவப்பு
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 42 63 65
விதி எண்: 03
அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,273,108 /=
2018.12.20 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமும் ஈடுபட்டார்கள். கூட்டமைப்பின் அழுத்தம் காரணமாக, மீள்குடியேற்ற அமைச்சராக மலிக் சமரவிக்கிரம நியமிக்கப்படக் கூடும் என்று தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஐக்கிய தேசிய முன்னணியுடன் எட்டுபேர் இணையக் கூடும் என்று நேற்றுக் காலை தகவல்கள் வெளியாகியிருந்தன. துமிந்த திசாநாயக்கா, லசந்த அழகியவண்ண, வீரகுமார திஸாநாயக்க, மகிந்த சமரசிங்க, விஜித் விஜேமுனி சொய்சா, பைசர் முஸ்தபா, லக்ஸ்மன் செனவிரத்ன ஆகியோரே ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்வார்கள் என்று கூறப்பட்டது. இது தொடர்பில் இரண்டு தரப்பும் உத்தியோகபூர்வமாக எதையும் தெரிவிக்கவில்லை.

இருப்பினும் ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் மாத்திரமே அமைச்சர்களாகப் பதவியேற்பார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியினுள்ளும் அமைச்சுப் பதவி பங்கீடு தொடர்பில் பெரும் குழப்பம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ரவி கருணாநாயக்க நிதி அமைச்சுப் பதவியைக் கோரியுள்ளார். இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன் வசம் எந்தெந்த அமைச்சுப் பதவிகளை தொடர்ந்தும் வைத்திருக்கப் போகின்றார் என்பதும் இதுவரை வெளியாகவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுடன் தொடர்புடைய அமைச்சுக்களுக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன், ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தியுள்ளார். அமைச்சுச் செயலர்களாக யாரை நியமிப்பது என்பது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான விவகாரங்களைக் கையாள்வதற்கு தலைமை அமைச்சர் அலுவலகத்தின் கீழ், மூத்த செயலர் மற்றும் திறைசேரியின் பணிப்பாளர் ஒருவரையும் உள்ளடக்கிய அலுவலகம் இயங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுடன் தொடர்புடைய மீள்குடியேற்ற அமைச்சுப் பதவிக்கு மலிக் சமரவிக்கிரமவை நியமிப்பதற்கு கூட்டமைப்பு சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த அமைச்சின் செயலராக வே. சிவஞான சோதியே தொடர்வார் என்று தெரியவருகின்றது. (5,105)

**காணி விற்பனைக்கு**
யாழ் அரியாலை மாம்பழம் சந்திக்கு பின்புறமாக கனகரட்ணம் சந்தியில் உள்ள மலர்மகள் வீதியில் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு சற்சதுர காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. நேரில் தொடர்பு கொள்ள
**077 607 8888**

**காணி விற்பனைக்கு**
யாழ்.நல்லூர் குறொஸ் றோட்டில் 2 நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
**077 801 5156**

**விற்பனைக்கு உண்டு**
1. Sharp Photocopy Machine - Model No:- AR 5516
2. Computers 3. Printers
இத்துடன் 10 மூடை ஆட்டக்காரி நெல்லும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு Ph: 077 607 8888

## அந்தரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எந்தவொரு தரப்பும் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து கூட்டு அரசை அமைத்தன. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அதிகூடிய ஆசனங்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி கூட்டு அரசிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விலகியது. மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவரால் பெரும்பான்மை நிரூபிக்க முடியாமல், பெரும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு தற்போது அது முடிவுக்கு வந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக இன்று பதவியேற்கவுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைவதற்குப் பேச்சு நடத்தியுள்ளனர். ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே அமைச்சர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைந்தாலும் அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

அதற்கு அமைவாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இணைத்துக் கொள்ளப்படாவிட்டால், சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே செல்லும். ஐக்கிய தேசிய முன்னணி அரசில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இணைத்துக் கொள்ளப்பட்டால், சம்பந்தன் தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடருவார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (5,105)

## அவதானம்!...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.
வங்கக் கடலில் உருவாகிய காற்றழுத்தத் தாழ்வு நிலை திருகோணமலைக் கடற்பரப்பிலிருந்து 540 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று மாலை நிலைகொண்டிருந்தது. அது தமிழகத்தின் வடக்கு மற்றும் ஆந்திராவை நோக்கி நகர்கிறது.
வடக்கு, வட மத்திய மாகாணங்கள் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அடுத்த 24 மணித்தியாலயங்களுக்கு காற்றின் வேகம் மணிக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றராக அதிகரித்துக் காணப்படும். அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (5)

**காணி விற்பனை**
இராசபாதை வீதி, கோப்பாயில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு - 077 773 0567**

**வீட்டு மின்இணைப்பு வேலை**
உங்கள் வீடுகளுக்கு வந்து மின் இணைப்பு வேலைகள் தரமான முறையில் செய்து தரப்படும். ஒரு பொயின் வேலைக்கு ரூபா 350/= மட்டும்
**தொடர்பு - 077 743 4230**

**விற்பனைக்கு**
நகைக்கடைக்குரிய 16 அடி நீளமும், 7 அடி உயரமும் மற்றும் 3 அடி நீளமும், 7 அடி உயரமும் கொண்ட கண்ணாடி அலுமினிய அலுமாரிகள் விற்பனைக்குண்டு
**தொடர்பு - 076 618 0144**

**காணி /வாடகைக்கு வீடு தேவை**
கே.கே.எஸ் வீதியில் இருந்து 1 km தூரத்திற்குள் இணுவில், மருதனார்மடம், சுன்னாகம், தெல்லிப்பளை ஆகிய இடங்களில் வீடு அமைப்பதற்கு பொருத்தமான காணி / வாடகைக்கு வீடு தேவை
**தொடர்பு - 077 350 1371**

**IPS** O/L, A/L மாணவர்களுக்கான இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
ஆரம்பம் - 22,23 /12/2018
**தொடர்பு - 077 602 1794**

**வாடகைக்குண்டு**
யாழ். நகர மையப்பகுதியில் கட்டடத்தொகுதி வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. **தொடர்பு - 077 4676 243**
யாழ்.நகர மத்தியில் வீடு வாடகைக்குண்டு.
**தொடர்பு - 077 955 4276**

**சிறுநீரகம் தேவை**
கொழும்பைச் சேர்ந்த 66 வயதுடைய **AB⁺** குருதி வகையைச் சேர்ந்த நபருக்கு **A,B,AB,O** குருதிவகை சிறுநீரகம் தேவை.
**072 474 9490, 077 011 3583**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.08.1962
மறைவு
27.12.2017

அமரர் **கந்தையா சிறிகாந்தன்**

ஓராண்டு நினைவிலும்
பல்லாண்டுக் கனவுகளை நனவாக்கி
உருகிய மெழுகாய் எம்முள் ஒளிரும் தீபமே !
இவ்வாண்டில் உமது உறவுகள்
உமக்காய் தீபமேற்றி உமது ஆன்ம சாந்திக்காய்
இறைபதம் வேண்டி நிற்கின்றோம்

பிள்ளையார் கோயிலடி,
தாவடி.

குடும்பத்தினர்
077 172 6655

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா திருநாவுக்கரசு
(மண்கும்பான்)



பிறப்பு 15.07.1934
இறப்பு 10.12.2018

எமது ஆலய பரிபாலன சபை முன்னாள் உறுப்பினரும் ஆலயவளர்ச்சிக்கு அயராது தொண்டு செய்பவரும் ஆகிய **திரு.தி.சந்திரன்** அவர்களின் அன்பு தந்தையாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
மண்கும்பான் தேவஸ்தானம்.

(CS 21833) (14.17)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பு கந்தையா

கலையாபரணன் கோட்டை கைதடி நாவற்குழி கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பு கந்தையா கடந்த வெள்ளிக்கிழமை இரவு (14.12.2018) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பு பறுபதம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சீதேவி தம்பதிகளின் மருமகனும், வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றமுத்தாச்சி, மற்றும்கதிரவேலுஆகியோரின்சகோதரனும் காலஞ்சென்ற வீரகத்தி, தேவி, மற்றும் சின்னத்தங்கம், கந்தசாமி, அரியபுத்திரன் ஆகியோரின் மைத்துனரும், மகேஸ்வரி, கமலாதேவி, கமலநாதன், தவமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜங்கரன், கந்தசாமி, லலிதாம்பிகை, விஜயகுமார், ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற செந்தூரன், மற்றும் சுதர்சன் - சிந்து, செந்தூர்வேல், வினோத், சிந்துஜா - சத்தியராஜ், மிதுனன் - பிரவீனா, தனுசன்- வைசாலி, விஜிந், தர்மிலா ஆகியோரின் பேரனும், சஹானா, சாரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (17.12.2018) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப. 10.30 மணியளவில் காந்தாளம் பிட்டி (கொல்லங்கிராய்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

0094 776496012

தகவல் :
குடும்பத்தினர்.

### பாலசுப்பிரமணியம் பாலநேசன்
(மாப்பாணவூரி காரைநகர்)



தோற்றம் 21.05.1961
மறைவு 13.12.2018

காரைநகர் மாப்பாணவூரியைப்பிறப்பிடமாகவும், தறபோது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான பா. பாலநேசன் கடந்த (13.12.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் நேசரத்தினம் தம்பதியரின் அன்பு புதல்வனும் அன்பழகி (கனடா), உமாசுசி, ரோகினி (கனடா), ஆகியோரின் அன்புச்சகோதரரும் கணேசலிங்கம் (கணேசு கனடா), காலஞ்சென்ற இந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும் சுசீந்திரன் ஜனனி (கனடா), ஆகாஷ் (கனடா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்பத்திரி வீதி, களுபோவிலவில் உள்ள பீரிஸ் மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 666 5651

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலேஸ்வரி நவரத்தினம்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி நவரத்தினம் கடந்த (14.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அன்னமுத்து தம்பதியரின் அன்புமகளும் வைத்திலிங்கம் வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் கதிர்காம நாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்புத் தங்கையும் கீதறஞ்சினி, காலஞ்சென்ற கீதறஞ்சன் மற்றும் ஞானறஞ்சன் காலஞ்சென்ற சாந்தி மற்றும் தீபறஞ்சன், நித்தியானந்தன், வசந்தி ஆகியோரின் அன்புத்தாயும் சிவறஞ்சினி, காந்தமலர், கயந்தா, சிவசங்கர், ஆகியோரின் மாமியும் துர்ஷாணியா, யவர்ணிகா, அஸ்வந்னா, ஆதிரை, ஹம்சன், சஞ்ஜனா, ஹரீஸ், அனுஸ்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் செல்லம்மா, செல்லத்துரை, இராசமணி, துரைராசா, கணேசலிங்கம், பாலசிங்கம், ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தி தச்சுத் தொழிலகம்,
சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

தகவல் :
குடும்பத்தினர்.



### கணபதிப்பிள்ளை சிவகுருநாதன்

கூட்டுறவுத்திணைக்கள ஓய்வு பெற்ற மாவட்ட அலுவலரும் கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தாவுமான கணபதிப்பிள்ளை சிவகுருநாதன் தனது எண்பத்தைந்தாவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் மூத்தமகனும் சின்னத்தம்பி இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை ( புலோலி மெ.மி. த.க. ) ஈஸ்வரியின் அன்புக்கணவரும் கருணாகரன் (கணிய அளவையாளர், இடைக்காடு), திருவாகரன் (செயலாளர், சுகாதார அமைச்சு வட. மா), Dr.வசீகரன், (மாகாணப்பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வட.மா), ரகுகரன் (இயக்குநர், தூரிகை, நெல்லியடி), மாலினி (கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சபாநாதன் (கரவெட்டி), காலஞ்சென்ற கமலாம்பிகை (வதிரி), மங்கையற்கரசி (லண்டன்), பாலாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும் கோமளா (ஆசிரியை, அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), சசிகலா, ரேணுகா (ஆசிரியை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி) ஆகியோரின் மாமனும் ஆருரன், ஆரணியன் , மிருதுளன், கேதாரினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

11/ 2 , பொன்கந்தையா வீதி,
நெல்லியடி

தகவல் : குடும்பத்தினர்.

தோற்றம்
16 . 05 . 1939



மறைவு
15 . 12 . 2018

### திருமதி மனோன்மணி சோமசுந்தரம்
(மாவிட்டபுரம்)

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், மாவிட்ட புரத்தை வசிப்பிடமாகவும் தற்போது இணுவிலில் வாழ்ந்தவருமாகிய திருமதி சோமசுந்தரம் மனோன்மணி நேற்று (15.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னராசா தில்லைக்கண்ணு தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்புச்சகோதரியும் மகேந்திரராஜா (ஆசிரியர், வெஸ்லிக் கல்லூரி, கொழும்பு), வத்சலா (கனடா), இராமநாதன் (அதிபர், யா/ வீமன்காமம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயும் சசிகலா (ஆசிரியை, கொழும்பு மத்திய மகாவித்தியாலயம் கொட்டாஞ்சேனை), ஜீவதயாள் (கனடா), கௌசலா (ஆசிரியை, யா / மயிலிட்டி வடக்கு, கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் சாரங்கி, சாகித்தியன், கோபிநாத், துஷி, ஹோமதன், கௌதமன், திலோத்தமன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

செட்டிவளவு,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் : சோ. இராமநாதன் (மகன் அதிபர், 077 589 0019)
சோ. மகேந்திரராஜா (மகன், ஆசிரியர் 0771513729)

## Spoken English With Grammar

எளிய முறையில் தமிழ் விளக்கத்துடன்
வவுனியா நகரில்
Spoken English With Grammar Group Classes and Personal Classes

**02.01.2019 முதல் ஆரம்பம்**

**தொடர்பு - 077 428 0702**

## வேலைவாய்ப்பு

Construction Company வவுனியா

Management Assistant (Accounts )
**முகாமைத்துவ உதவியாளர் (கணக்காளர்)**

*விண்ணப்பதாரி கணக்கியல் தொடர்பான பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருத்தல் அதற்கு சமமான அங்கீகாரம் பெற்ற பயிற்சி
*3 வருடங்களுக்கு மேற்பட்ட முன் அனுபவம்
*35 வயதிற்குட்பட்டவர்

Assistant Accountant / **உதவிக்கணக்காளர்**

*உயர் தரத்தில் வர்த்தகம் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தல்
*26 வயதிற்குட்பட்டவர்.

T. P : 024 222 4621, 076 248 0319


## கண்ணீர் அஞ்சலி



யா /வீமன்காமம்
மகாவித்தியாலயத்தின்
அதிபர் திரு. சோ. இராமநாதன்
அவர்களின் அன்புத்தாயார்.

திருமதி
**மனோன்மணி**
**சோமசுந்தரம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரது ஆத்மா மாவைக்கந்தனின் பாதங்களைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச்சமூகம்,**
**யா /வீமன்காமம் ம.வி, மாவிட்டபுரம்.**


## விற்பனைக்கு

**மொரட்டுவ Printers Kors Auto Platon 10'' x 15'' Rayobi N480 Plate Maker**

உடனடி விற்பனைக்கு. (CS2186)(11,17)

**மகேஸ் - 077 920 2226**

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L பொருளியல்
O/L குடியியற்கல்வி

தனியாகவும். குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

T. P : 077 900 7597, 077 9064 595

## புதிய தையல் வகுப்பு ஆரம்பம்

(01.01.2019) 14A. அம்மன் வீதி. தம்புரோவுக்கு அருகாமை

+ திறமை வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். (சனி. ஞாயிறு)
+ முற்பதிவுகள் செய்து அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொள்ளவும். (CS 21842)(14.17)

**தொடர்பு: 077 673 1981**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் (யூனியன் லேன்) 1 பரப்பும் 3.63 குளியும் உடைய காணி விற்பனைக்கு உண்டு. கூடிய விலை கோருபவருக்கு முன்னுரிமை.

**077 949 3023** (CS/20680)(11,17)

## தேவை

கொழும்பு, தெஹிவளை வங்கி ஒன்றில் வேலை செய்யும் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல், குழந்தை பராமரிப்பு செய்வதற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பெண் ஒருவர் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**077 772 6738**

## வீடு வாடகைக்குத் தேவை

நான்குபேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை.
**(கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர், யாழ்ப்பாணம்.)**

**தொடர்பு - 075 546 2940**

## நண்பர்கள் தேவை

**பெயர்:-** நந்தன் **இடம் :-** Toronto, Ontario, Canada
**வயது :-** 33 **தொழில்:-** Psychology / Economics
**ஆர்வங்கள்** :- இலக்கியம். ஆன்மீகம், வரலாறு. அரசியல். மொழி. சமூகவியல். உளவியல். பொருளாதாரம்.Astrology
**தொடர்பு மொழி** :- தமிழ் / English
**மின்னஞ்சல்** :- Soul-with-souls@hotmail.com
**முகவரி (இலங்கை)** :- 16, 3/2 Frazer Avenue, Dehiwala
**ஆரம்ப தொடர்புகளின் பின் :-**
இணையம். Canadian Address, Face book, Skype, Viber, Whatsup ஊடாக தொடர்புகள் பேணப்படும்.முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். (PS/11031)(11,17)

## வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பின்வரும் பணி நிலைகளுக்கு நிரந்தர வேலையாள்கள் தேவை.
***கணினி இயக்குநர்கள் (ஆண்)***
***இருப்புக் கணக்கெடுப்பாளர்***
**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் நேரில் சமுகம் தரவும்.**

தேனு களஞ்சியம் (நெஸ்லே விநியோகஸ்தர்)
இல. 54 /2, பலாலி வீதி, கோண்டாவில்
(பழைய சேவா லங்கா கட்டடம்)
T. P : 021 492 1258, 075 6420 131


**கிளி /கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தின்**

## துயர் பகிர்வு



எமது பாடசாலை ஆசிரியை திருமதி
**விஜயாநிதி செல்வானந்தன்**
அவர்களின் அன்புத்தந்தை
**இராஜசேகரம்**
**இராஜேந்திரம்**
அவர்கள் (14.12.2018) அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் அடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**துயர் பகிரும் : நலன்புரிச்சங்கம்**
**கிளி /கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்**


19 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான **BCAS Campus** உடன் இணைந்து **UGC** அங்கீகாரம் கொண்ட **UK** பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

UTP University Transfer Program

Degree Progression to 339 universities in UK, USA, Australia etc.

Pearson BTEC · University of Wolverhampton · RICS

HND BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BSc (Hons) from the UK Universities
HND QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities
HND COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities
HND BIO-MEDICAL SCIENCE — Leading to BSc (Hons) from the UK Universities
HND CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB LAW — Leading to LLB (Hons) from the UK Universities

UGC Recognized TVEC

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318
INTAKE NOW ON

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna
BCAS Corporate Office, #. 32, Dharmarama Road, Colombo - 06

Best Employer Brand Award 2017 · No.1 BTEC Centre in Sri Lanka 2016 · Best Academic & Industry Interface 2016 · Academic Impact Winner 2016 · No.1 Higher Education Provider 2014 · BTEC Gold Partner 2013 · Performance Excellence Award 2011 · Fastest Growing BTEC Centre 2010 · 19 YEARS of Trust & Excellence in Higher Education

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk


ACER மடிக்கணினிகள்
i5 | 6GB | 1TB | WIN 10 | 2GB VGA
2-Year Warranty
ரூ.105,990 இலிருந்து
HP மடிக்கணினிகள்
i3 | 4GB | 1TB | WIN 10
2-Year Warranty
ரூ.82,490 இலிருந்து
43"
தள்ளுபடி ரூ.40,000
LG LED தொலைக்காட்சி
43LJ523T
ரூ.109,999
விசேட விலை ரூ.69,999
32"
TOSHIBA LED தொலைக்காட்சி
32L2800
ரூ.49,999
தள்ளுபடி ரூ.5,000
iPad 2018
9.7inch / 32GB
ரூ.99,999
விசேட விலை ரூ.94,999
ரூ.9,000
இலவசம்
iPHONE
Xs, Xs Max & XR
ரூ.169,999
இலிருந்து
தள்ளுபடி ரூ.11,000
LENOVO K6 Power SMARTPHONE
ரூ.25,999
விசேட விலை ரூ.14,999
ரூ.10,000
இலவசம்
LG Hi-Fi சிஸ்டம்
DM5540
ரூ.52,999
விசேட விலை ரூ.45,999
LG OJ 98
ரூ.69,999
விசேட விலை ரூ.64,999
JBL XTREME
ரூ.56,999
விசேட விலை ரூ.50,999
Authorized Reseller
LG
Electrolux
vivo
JBL
pyrex
CORNINGWARE
harman/kardon
acer
hp
AKG
PHILIPS
SKECHERS
MITSUBISHI ELECTRIC
Changes for the Better
TOSHIBA
ELBA
TITAN
mistral
morphy richards
Haier
Lenovo
oppo
Hero
Vespa
aprilia
Panasonic
பெறுமதியான பரிசுகள்
ரூ.10,000
பெறுமதியான அன்பளிப்பு வவுச்சர் இலவசம்
மாற்றீடு சலுகைகள்
நீடித்த உத்தரவாதம் இலவசம்!
அபான்ஸ் பிரம்மாண்ட நத்தார் சேல்
மிகப்பெரிய பிராண்டுகளில் அதிகூடிய சேமிப்புகள்
50% வரை தள்ளுபடி
60 மாதங்கள் வரை வட்டியில்லை
LG டுவல்கூல் இன்வெர்ட்டர் வளிச்சீராக்கிகள்
12000btu - 24000btu
2 வருட உத்தரவாதம் இலவசம்
ரூ.123,990 இலிருந்து
விசேட விலை ரூ.102,990 இலிருந்து
மிக்ஷர் கிரைண்டர்
ரூ.8,600 இலிருந்து
பேக்வேயார்
ரூ.320 இலிருந்து
pyrex
பேக்கிங் மற்றும் களஞ்சியத்தை ஒரே பாத்திரத்தில் செய்திடக்கூடிய பைரெக்ஸ் பாத்திரங்கள்
ரூ.970 இலிருந்து
ரைஸ் குக்கர்
ARC28TR3
ரூ.5,700
விசேட விலை ரூ.4,600
டேபல் ஃபேன்
FT40-814
ரூ.4,990
விசேட விலை ரூ.3,700
இலவச பரிசுகள்
மாற்றீடு சலுகைகள்
தள்ளுபடி ரூ.18,000
7kg
இலவசம்!
இலெக்ட்ரிக் அவன்
GT42R-S1
ரூ.17,020
விசேட விலை ரூ.13,000
வட்டியில்லா 18
வட்டியில்லா 12
வட்டியில்லா 18
LG குளிரூட்டி
ரூ.72,999 இலிருந்து
எல்பா குக்கர்
N55X340E
ரூ.107,900
விசேட விலை ரூ.89,900
HAIER டொப் லோடிங் சலவை இயந்திரம்
HWM70-918NZPE
ரூ.49,990
பொலிஷர்
HFB1V1
ரூ.20,230
விசேட விலை ரூ.16,900
எயார்கூலர்
CL30XC
ரூ.36,999
விசேட விலை ரூ.34,999
LG NeoChef இன்வெர்ட்டர்
MS2595DIS
ரூ.27,100
விசேட விலை ரூ.23,990
Sampath Cards
HSBC
PAN ASIA BANK
HNB
NDB bank
UNION BANK
011 5 999 000
BuyAbans.com
Abans

# கண்ணீரில் கரைந்த ஓர் ஆண்டு

மண்ணில்
17 . 03 . 1939



விண்ணில்
27 . 12 . 2017

## திருமதி அரியநாயகம் சேதுப்பிள்ளை

**(உடுப்பிட்டி - யாழ்ப்பாணம்)**

**திதி : 16.12.2018**

அம்மா என்ற சொல்லின் சூட்சுமம் நீ,
குடும்பத் தலைவியாய் எங்கள் வழிகாட்டியாய்
நீ இருந்தாய் அம்மா...
நாங்கள் எங்கே எப்படி வாழ்ந்தாலும் - நீயே
எங்கள் வாழ்வின் ஒளி விளக்கு...
பாசத்தின் உறைவிடம் அம்மா நீ, நல்ல நேசத்தின்
இருப்பிடமும் நீ, கருணையின் பிறப்பிடம் நீ,
எம்மை அன்பாய் ஆட்சி செய்தவள் நீ.
ஓராண்டு ஓடி ஒழிந்தது அம்மா,
நித்தமும் உம் நினைவுகள் எம் மனதில் அம்மா...
ஆறுதல் கூற ஆயிரம் வார்த்தைகள் இருந்தும் என்ன அம்மா,
பரிவுடன் நீ காட்டிய அன்பினை இனி எவர்தான்
எமக்கு கொடுப்பார் அம்மா...
உம் ஆத்மா சாந்தியடைய, எம்மை என்றும் வழிநடத்த
அனுதினமும் இறையருள் வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்தி பூஜையும், மதியபோசனமும் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெற இருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

aprilia

#be a racer

இத்தாலி

தொழில்நுட்பம் மற்றும் நிறைவு

## ஸ்கூட்டர் அணிவகுப்பின் RACING ஸ்கூட்டர்

## அபான்ஸ் ஓட்டோ அறிமுகம் செய்யும் Aprilia ஸ்கூட்டர்கள்

Aprilia நிறுவனம் இத்தாலியின் முன்னணி RACING மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்வதோடு, 125cc முதல் 1000cc வரையான மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் உலகளாவிய ரீதியில் பல்வேறு விருதுகளை வென்றுள்ளது. மேலும் Aprilia ஸ்கூட்டர்கள் அனைத்தும் சிறப்புவாய்ந்த இத்தாலி தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்படுகின்றன.



- 14" அங்குல அலோய் வீல்
- டியூப்லெஸ் டயர்கள்
- 6.5 லீட்டர்கள் கொள்ளளவுடைய எரிபொருள் தாங்கி
- கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதி
- CVT தன்னியக்க கியர் அமைப்பு
- 125cc / 150cc, 4 ஸ்ட்ரோக் என்ஜின், 3 வேல்வுகள்
- MAP sensing மற்றும் Variable Spark Timing Management
- டுவின் பிஸ்டன் கெலிப்பருடன் வரும் முன்புற ஹைட்ரோலிக் 220mm டிஸ்க் பிரேக்
- முன்புறம் - டெலஸ்கொபிக் சஸ்பென்ஷன் பின்புற ஹைட்ரோலிக் ஷொக் அப்சோபர்

எப்ரிலியா SR 125

ரூ.~~359,990/-~~

விசேட விலை ரூ.309,990/-

ரூ.50,000/- தள்ளுபடி

0115 777 000

அபான்ஸ் ஓட்டோ மோட்டார் சைக்கிள் காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட விற்பனை முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

Abans AUTO

# Chandanalepa®

## WHITENING CREAM

## வயிட்னிங் கிறீம்

## பிளீச்சிங் இன்றி

## சிவப்பழகை பெற்றுக்கொள்வோம்

பாதரசம் அற்றது | பரபன் அற்றது

ஒரேன்ஜ் பீல் உடன் | ஹயிட்ரொக்வீனொன் அற்றது

100% இயற்கை எண்ணெய் உள்ளடங்குகின்றது

பிளீச்சிங் அற்றது






பிளீச்சிங் அற்ற சிவப்பழகின் இரகசியம்

# பன்னாட்டுத் தேயிலை தின நிகழ்வுகள் நேற்று








கொழும்பு, டிசெ.16

பெருந்தோட்ட மக்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் பன்னாட்டுத் தேயிலை தினம் நேற்றும் பொகவந்தலாவவையில் நடைபெற்றது.

பொகவந்தலாவ பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து பொகவந்தலாவ புனித செபமாலை கிறிஸ்த்தவ ஆலயம் வரை ஊர்வலம் ஒன்றும் இடம் பெற்றது.

நிகழ்வில் சிலாபம் மறைமாவட்டக் கரித்தாஸ், நிறுவனத்தின் இயக்குநர் அருட் தந்தை என்டன் வயமன் பீரிஸ், குருநாகல் மாவட்ட கரித்தாஸ் இயக்குநர் அருட்தந்தை டெஸ்மன் பெரேரா, நுவரெலியா மாவட்ட இயக்குநர் அருட்தந்தை நியூமன்பீரிஸ் மாத்தளை மாவட்ட இயக்குநர் அருட்தந்தை மரியதாஸ் அடியார்கள், வைத்தியர் கிஸான் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ற)

## ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது

கொழும்பு, டிசெ.16

ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் உட்பட இருவர் அங்குலன மற்றும் வெல்லம்பிட்டி பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

15 கிராமும் 740 மில்லிகிராம் ஹெரோனை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் அங்குலான சயுரபுர அடுக்குமாடி வீட்டுத் தொகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், வெல்லம்பிட்டிய, வதுல்லவத்தை பிரதேசத்தில் 15 கிராமும் 120 மில்லி கிராம் ஹெரோயினை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)





விசேட
அறிமுக விலை
ரூ.6,500/-
நிலையான இதமான காற்றோட்டத்துடன்
KELANI BREEZER
தென்றலைப்போன்ற இதமான காற்றலைகளை என்றும் நிலையாக அனுபவித்திட இப்போதே இந்தியாவின் HAVELLS நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு KELANI CABLES இனால் பிரத்தியேகமாக சந்தைப்படுத்தப்படும் KELANI BREEZER FAN ற்கு மாறிடுங்கள்.
SAFETY CHAIN
HIGHER PROTECTION
DUAL BEARING
SMOOTH MOTOR
BEST PERFORMANCE EVEN AT LOW VOLTAGE
PERFORMANCE
2 YEARS*
WARRANTY
AIR DELIVERY*
BEST IN CLASS
நவீன கலையம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.
BIANCO
BROWN
WHITE
இனால் உற்பத்தி செய்யப்படுகின்றது.
HAVELLS INDIA
இடமிருந்து தரமான உற்பத்தி
KELANI CABLES
Media Vision
தொடர்புகளுக்கு : அரவிந்த நாதன் 0777 583687 | வினோத் 0773 754467

# கூட்டமைப்பின் ஆதிக்கத்தை உடைக்க மைத்திரி திட்டம்

## ஐ.தே.மு. அரசில் சு.கவினரை இணைப்பதற்கு முயற்சி

**கொழும்பு, டிசெ.16**
**ஐக்கிய தேசிய முன்னணி அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று புதிய அரசுடன் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டு வைத்துக் கொள்ளாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோது கூறியிருந்தார். ஆனால் புதிய அரசுடன் இணைந்து கொள்பவர்களைத் தடுக்க மாட்டேன் என்றும், அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க மாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு இயங்குவதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரும்பவில்லை என்றும், சிறிலங்காசுதந்திரக்கட்சியைக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதிக்கதை முறியடிக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும் அரசியல் நோக்கர்கள் கூறகின்றனர். அந்த நடவடிக்கையின் ஒரு அங்கமாக ஐக்கிய தேசிய முன்னணி அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை இணைந்து முக்கிய அமைச்சுப் பதவிகள் சிலவற்றைக் கொடுக்க அவர் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமது பிரதிநிதிகளாகப் புதிய அரசில் வைத்திருக்க விரும்பினால் அவ்வாறு செயற்படத் தயராக இருக்கின்றோம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மீதான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதிக்கத்தை முறியடிக்க முடியும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையற்ற ஆதரவு நல்லதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# ராஜிதவுக்கு அமைச்சு வழங்குவதற்கு எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.16
நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மீண்டும் சுகாதார அமைச்சராகப் பதவியேற்றால் மருத்துவத் துறையில் பெரும் நெருக்கடி ஏற்படும் என்று அரச மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் செயலாளர் நளிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த சில ஆண்டுகளாகச் சுகாதார அமைச்சராக இருந்த ராஜித சுகாதாரத் துறையை முற்றாகச் சீர்க்குலைத் துள்ளார்.

மீண்டும் ராஜிதவிடம் அந்தப் பதவியைக் கையளித்தால் மருத்துவத்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறும் - என்றார்.

அதேவேளை, ராஜித சேனாரத்னவுக்கு சுகாதார அமைச்சோ, வேறு எந்த அமைச்சுப் பொறுப்புக்களோ வழங்கக் கூடாது என்று அரச மருத்துவ அலுவலர்கள் சங்கம் போராட்டம் ஒன்றையும் அண்மையில் கொழும்பில் நடத்தியிருந்தது. (ற)

# மைத்திரி, மகிந்தவின் கனவுகள் கலைந்தன!

## அவர்கள் விலகியிருப்பதே நல்லது என்கிறார் அஜித் பி பெரேரா

கொழும்பு, டிசெ.16
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் கனவுகள் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளால் கலைந்து போயுள்ளன.



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவைக்கு எதிராக உயர்நீதிமன்று விதித்திருந்த இடைக்காலத் தடையைச் சவாலுக்குட்படுத்தி மகிந்த ராஜபக்ச தாக்கல் செய்திருந்த மனு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இடைக்காலத் தடையை உயர்நீதிமன்று நீடித்தது. நீதிமன்ற உத்தரவு வெளியான பின்னர் நீதிமன்ற வளாகத்தில் கருத்துத் தெரிவித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:
சட்டத்தை மீறுகின்றோம் என்று தெரிந்துகொண்டே அரச தலைவரும், மகிந்த ராஜபக்சவும் சட்டத்தை மீறினர். அவர்களின் இறுதிக் கனவும் தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக அவர்கள் விலகி இருக்க வேண்டும். ரணில் தலைமையில் அரசு அமைத்து ஆட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்வோம் - என்றார். (ற-10)

# மகிந்ததான் வேண்டும் எனில் வெளிப்படையாகக் கூறுங்கள்

## சாடுகின்றார் சிவமோகன் எம்.பி.

வவுனியா, டிசெ.16
ரணிலுக்கு ஆதரவளிக்கக் கூடாது என்று கூறும் சில தமிழ்க்கட்சிகள்மகிந்தவே ஆட்சியில் அமர வேண்டும், மகிந்தவுக்கு ஆதரவாக வாக்களித்து அவரை ஆட்சியில் அமர்த்துங்கள் என்று வெளிப்படையாகக் கூற வேண்டும்.



இவ்வாறு தெரிவித்துள்ளார்வன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்.

வவுனியாவில்உள்ளதனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம்மாலைநடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அரசியல் செய்வதற்காகவே ரணிலை ஆதரித்தோம் என்றுபலர்கூறுகின்றனர். தமிழ்க் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அரசியல் நெருக்கடி விடயங்களில் மிகவும் நேர்த்தியாகவும், ஆழ்ந்துசிந்தித்துமேமுடிவுகள் எடுக்கப்படுகின்றன. மகிந்த காலத்தில்நடந்தவை அனைவருக்கும்தெரியும். இங்குயாரைஆதரிப்பதுஎன்பதை விட, யார் மீண்டும் பதவிக்கு வரக்கூடாது என்பது பற்றிச்சிந்தித்தே முடிவுகள் எடுக்க வேண்டியவர்களாகநாம்இருந்தோம்.

நடுநிலமை வகிக்க வேண்டும் என்று சில கட்சிகள் கூறுகின்றன. அது மீண்டும் மகிந்தவை ஆட்சியில் அமர்த்தவே வழிவகுக்கும். நடுநிலைமை வகிக்கக்கோரும் கட்சிகள் மகிந்ததான் ஆட்சியில் அமர வேண்டும், அவருக்கு வாக்களியுங்கள் என்று வெளிப்படையாகக் கூற வேண்டும்.

ரணில்விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கில் பரவலாக அபிவிருத்திகள் நடைபெறவில்லை. ஆனால் கடந்த காலங்களில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரால் 5 மில்லியன் ரூபா நிதியே செலவிட முடியும். இந்த ஆண்டு நான் 200 மில்லியன் ரூபாபெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை வன்னிமாவட்டத்தில்மேற்கொண்டுள்ளேன். இப்படிச் சில உரித்துக்களை நாம் பெற்றுள்ளோம்.

எமது நாடாளுமன்றக் குழுக்கலந்துரையாடலில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. நாம் ஒன்றுமையாக முடிவெடுத்தே ரணில் மீதான நம்பிக்கைத்தீர்மானத்துக்கு ஆதரவளித்தோம். எங்களில் ஒருவர் பணத்தைப் பெற்றுச் சென்றிருந்தார். மற்றொருவர்நடுநிலமைவகித்தார். நடுநிலமை வகித்தவர்களுக்குஎன்னநடந்தது என்று எனக்கு தெரியாது - என்றார். (ற-110)

# இல்லாத பதவியில் இருந்து எப்படி விலகுவார் மகிந்த?

## கேள்வி எழுப்புகிறார் சாகல

கொழும்பு, டிசெ.16
மகிந்த ராஜபக்சவின் தலைமை அமைச்சர் பதவி சட்டபூர்வமற்ற நிலையில் அவர் எவ்வாறு பதவி விலகுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தனது கீச்சகப் பக்கத்தில் நேற்றுப் பதிவிட்ட பதிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் முடிவு தமக்குப் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட அரசிதழ் அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது. மகிந்த ராஜபக்ச தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவைக்கான இடைக்காலத் தடையையும் உயர் நீதிமன்று நீடித்துள்ளது.

இந்தநிலையில் மகிந்த ராஜபக்ச தனது பதவியில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார். (ற)



சூரியகாந்தி
உதயன்



கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# பொன் முட்டையிடும் நாமல் குமார





வறுமையில் வாடிய நல்ல குணமும், பரோபகார சிந்தையும் உள்ள ஒருவருக்குப் பெரியவர் ஒருவரால் வாத்து ஒன்று பரிசாக வழங்கப்பட்டதாம். அந்த வாத்து ஒவ்வொரு நாளும் ஒரு பொன் முட்டையை இடுமாம். வாத்தின் வயிற்றுக்குள் உள்ள , எல்லா முட்டைகளையும் ஒரே நாளில் எடுத்துவிடலாம் என்று எண்ணிப் பேராசைப் பட்ட அந்த மனிதர் வாத்தின் வயிற்றை வெட்டினாராம். அதன் பலனாக வாத்தையும் இழந்து, முட்டைகளையும் இழந்து பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டாராம். ஊழல் மோசடிக்கு எதிரான அமைப்பின் தலைவர் எனவும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் ஊளவாளியாகவும் கூறப்படும் நாமல் குமார என்பவரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது பொன் முட்டையிடும் வாத்துக் கதை நினைவுக்கு வருவதைத் தவிர்க்கமுடியவில்லை.

➡ 14





**மறைந்திருந்து செயலாற்றுகின்ற இனவாதம்**

இலங்கையில் மிகவும் வலிமை வாய்ந்த சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் செயற்பட்டு வருகின்றன. இது காலத்துக்குக் காலம் வெவ்வேறு அரசியலாளர்கள், மத வாதிகள் மூலமும் பல்வேறு நிறுவனங்கள் மூலமும், அரச அதிகாரிகள் மூலமும் வெவ்வேறு வடிவில் வெளிப்பட்டாலும் இதன் முக்கிய மையம் அரூபமானதானவே அமைந்து வருகிறது. எந்த ஒரு திட்டமிட்ட நடவடிக்கைக்கும் நீண்டகால இலக்கு என்றும் உடனடிச் செயற்பாடு எனவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த இரண்டு போக்குகள் காணப்படுகிறது. பேரினவாத மேலாதிக்கத்தை நோக்கிய இந்த நடவடிக்கைக்கும் ஒரு நீண்டகால இலக்கு உண்டு. அது நீண்டகால அடிப்படையில் இலங்கையைச் சிங்கள பௌத்தமயப்படுத்துவது. அரசியல் வாதிகள், மதவாதிகள், அரச அதிகாரிகள் ஆகியோரின் நடவடிக்கைகள், பரப்புரைகள் என்பன அந்த நீண்ட கால இலக்குக்கு வலுச்சேர்க்கும் உடனடிச் செயற்பாடுகளே.

**நாமல் குமாராவின் செயற்பாட்டுத் தன்மை**

நாமல் குமாரவின் நடவடிக்கைகள் கூட இந்த நீண்டகால இலக்குக்கு வலுச்சேர்க்கும் உடனடிச் செயற்பாடுகளே ஆனால் ஏனைய சக்திகளின் நடவடிக்கைகளை விட இவரின் செயற்பாடுகள் பெறுமதிமிக்கவையாக அதாவது பொன் முட்டைகளாக விளங்கி வருகின்றன என்பதுதான் முக்கிய விடயமாகும். இவர் போட்ட முட்டைகள் வெளிப்படையில் ஒரு விடயம் சம்பந்தமானது போலத் தோன்றினாலும் பேரினவாத நீண்ட இலக்குக்கு வலுச் சேர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.





**நாமல் இட்ட பொன்முட்டை - 1**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவையும் படுகொலை செய்யச் சதி மேற்கொள்ளப்படுவதாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பதில் பொலிஸ்மா அதிபர் நாளந்த சில்வா தன்னிடம் தொலைபேசியில் உரையாடினார் என்று ஊடகச் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து அதில் தெரிவித்திருந்தார் நாமல் குமார. மேலும் அரச தலைவர் கிழக்கு மாகாணத்துக்குச் செல்லும்போது அங்கு வைத்து அவரைக் கொலை செய்துவிட்டு, அரசியல் நீரோட்டத்தில் கலந்துவிட்ட ஒரு முன்னால் போராளியின் தலையில் அந்தப் பழியைச் சுமத்தி விடத் திட்டமிடப்பட்டிருந்த தாகவும் அவர் தெரிவித்தார். இது அவர் போட்ட ஒரு பொன்முட்டை. அதாவது முன்னாள் போராளிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்துவிட்டதாக வெளியில் காட்டிக் கொண்டாலும் அவர்கள் ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடு கின்றனர் என்ற கருத்தை வலுவாகப் பதிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நயவஞ்சக முயற்சியா கும். இதன் மூலம் முன்னாள் போராளிகளுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தவும் ஒடுக்குமுறைகளை வலுப்படுத்தவும் வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.

**நாமல் இட்ட பொன்முட்டை - 2**

இந்த விடயத்தில் நாமல் குமார இட்ட அடுத்த பொன் முட்டை பொலிஸ் மா அதிபரை இதில் தொடர்புபடுத்திய போது நிகழ்ந்தது.. அதாவது இந்தச் சதியில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டில் வசிக்கும் ஒருவரைப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தனக்கு அறிமுகப்படுத்தியாக நாமல் தெரிவித்திருந்தார். அதாவது இப்படியான கொலை முயற்சிகளை வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்களே திட்டமிட்டு வழிநடத்துகின்றனர் என்ற வகையில் நம்ப வைப்பதற்கு முயற்சிக்கும் அடுத்த பொன் முட்டை இது. காரணம் இதனுடனும் தமிழர்கள் தொடர்புபடுத்தப்படுவதாலேயே. எனினும் பொலிஸ் மா அதிபர் நேரடியாகவே சென்று குற்றப்புல னாய்வுப் பிரிவில் வாக்குமூலம் வழங்கியமையை அடுத்து அது பற்றிய சர்ச்சை காணாமல் போய்விட்டது. ஆனால் நாமல்குமார இப்போது அந்தக் கருத்தோட்டத்தை வலுப்படுத்தும் வகையில் அடுத்த பொன்முட்டையை இட்டுள்ளார்.

**நாமல் இட்ட பொன்முட்டை - 3**

அரச தலைவர் கொலை முயற்சியில் தொடர்புபட்டவர் முன்னாள் போராளியாக இருந்து தற்சமயம் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினராக உள்ள ஒருவர் என்றும் வெளிநாட்டவர்களின் அனுசரணையுடன் சம்பந்தப்பட்ட விடயத்தை 48 மணிநேரத்தில் ஊடகங்களுக்கு வெளியிடப் போவதாகவும் ஓர் அதிரடி அறிவிப்பை நாமல் குமார விடுத்திருந்தார். அந்த 48 மணிநேரம் கழிந்த பின்பும் மர்மங்கள் எதுவும் அவரால் கொட்டப்படவில்லை. ஆனால், அவரின் அந்த அதிரடி அறிவிப்பு நிச்சயமாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நீண்டகால இலக்குக்குக் கிடைத்த ஒரு பொன்முட்டை என்பதில் சந்தேகமில்லை.

**அரச தலைவர் கொலை முயற்சியில் தொடர்புபட்டவர் முன்னாள் போராளியாக இருந்து தற்சமயம் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினராக உள்ள ஒருவர் என்றும் வெளிநாட்டவர்களின் அனுசரணையுடன் சம்பந்தப்பட்ட விடயத்தை 48 மணிநேரத்தில் ஊடகங்களுக்கு வெளியிடப் போவதாகவும் ஓர் அதிரடி அறிவிப்பை நாமல் குமார விடுத்திருந்தார். அந்த 48 மணிநேரம் கழிந்த பின்பும் மர்மங்கள் எதுவும் அவரால் கொட்டப்படவில்லை. ஆனால், அவரின் அந்த அதி ரடி அறிவிப்பு நிச்சயமாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நீண்டகால இலக்குக்குக் கிடைத்த ஒரு பொன்முட்டை என்பதில் சந்தேகமில்லை.**





**கொலைச் சதி அலட்சியப்படுத்தப்படுவதற்கான காரணம்?**

அடிப்படையில் நாட்டின் தலைவரையோ அல்லது முன்னாள் பாதுகாப்புச் செயலரையோ கொலை செய்வதற்கான சதித்திட்டம் மேற்கொள்ளப்படுவதை நாமல்குமார அறிந்திருந்தால் அவர் உடனடியாகவே உரிய இடங்களுக்கும் இலக்கு வைக்கப்பட்டவர்களுக்கும் அறிவித்திருக்க வேண்டும். அப்படி அறிவிக்கப்படவுடனேயே உடனடியாகவே சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருப்பர். நாட்டில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் அப்படி எதுவுமே நடைபெறவில்லை.

நாமல் குமார ஊடகவியலாளர்கள் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து அதன்போதே இந்தத் தகவலை வெளியிட்டார். அவரால் முதன்மைச் சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பதில் பொலிஸ்மா அதிபர் பல நாள்களின் பின்பே கைது செய்யப்பட்டார். அடுத்த சந்தேகநபரான பொலிஸ்மா அதிபர் குற்றப்புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலம் வழங்கிவிட்டு வெளியேறிவிட்டது மட்டுமன்றி இன்றுவரை அவர் தனது பதவியை வகித்து வருகிறார். நாட்டையே புரட்டிப் போடக் கூடிய ஒரு சதிப்புரட்சியில் காட்டப்படும் அக்கறை இவ்வளவு அலட்சியமாகவும் மென்மையாகவும் இருக்கும் போது உண்மையில் இப்படி ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாது.

**அடுத்த பொன் முட்டைக்குத் தயார்**

1963ஆம் ஆண்டு இலங்கையில் இப்படி ஒரு சதிமுயற்சி மேற்கொள்ளப்பட்ட போது உடனடியாகவே இரவோடிரவாகச் சம்பந்தபட்டவர்கள் கைது செய்யப்பட்டு இரகசியமான இடத்தில் அடைத்து வைக்கப்பட்டதும், அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதும், வீதிகளில் இராணுவம் இறக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதும் மறந்து விட முடியாது.

அப்போது முதன்மைச் சந்தேக நபர்களில் ஒருவராக அன்றைய பொலிஸ்மா அதிபர் கைது செய்யப்பட்டார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இப்போது நாளந்த டி சில்வா ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதிலும் அவர் நாமல் குமாரவிடம் உரையாடியதாகச் சொல்லும் குரல் பதிவின் உண்மைத் தன்மையை அறிய நாமல் குமாரவின் தொலைபேசி ஹொங்கொங்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்படியான நிலையில் அடுத்த பொன்முட்டையை இடுவதற்கு நாமல் குமார தயாராகிவிட்டார். அதாவது புலம்பெயர் தமிழர்களின் வழிகாட்டலில் முன்னாள் போராளி இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருந்தார் என்பது தான் அந்தப் பொன் முட்டை.

இதுவரை நாமல்குமார போட்ட பொன்முட்டைகளால் பெரும் தாக்கங்களோ மாற்றங்களோ ஏற்படவில்லை. ஆனால் பௌத்த சிங்கள பேரினவாதிகளில் நீண்டகால நோக்கை நிறைவேற்றும் வகையில் அவை காத்திரமான பங்களிப்பை வழங்கும்.

அதாவது புலம் பெயர் தமிழர்களின் ஆனுசரணையுடன் விடுதலைப்புலிகள் மீளெழுச்சி பெறுகின்றனர் என்ற கருத்தோட்டத்தை வலுப்படுத்தி அதன் மூலம் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை மேலும் வலுப்படுத்தும். சிங்களக் குடியேற்றங்கள், வடக்குக் கிழக்கில் விகாரைகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் எழுச்சி பெறும்போது அவற்றுக்குப் புலிச் சாயம் பூசி புலிகளின் மீளெழுச்சி என்று பெயர் சூட்டி அடங்குவதான புறச்சூழல் உருவாக்கப்படுகின்றது. அவ் வகையில் இப்போது நாமல்குமார பொன்முட்டையிடும் ஒரு வாத்துத்தான். பேராசையால் வாத்தை அறுப்பதற்குப் பேரினவாதம் முற்படும்போது நாமல் குமார என்கிற பொன்வாத்தின் நிலை பரிதாபத்துக்குரியதாகத்தான் இருக்கும்.

# எபோலாவின் பிடியில் இறுகியது காங்கோ!!



உயிர்கொல்லி நோயான எபோலாவின் பிடியில் காங்கோ மிகவும் இறுகியுள்ளது. நாளுக்கு நாள் எபோலா அங்கு தீவிரமடைந்து வருகிறது. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் 2013ஆம் ஆண்டு 'எபோலா' நோய் பரவியது. முதலில் கினியா நாட்டில் பரவிய நோய் பின்னர் சியாரா லியோன், லைபிரியா, காங்கோ குடியரசு உள்ளிட்ட நாடுகளிலும் பரவியது. 2016ஆம் ஆண்டு வரை இந்த நோய் தொடர்ந்து பரவி வந்தது. இதில் 28 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 11 ஆயிரத்து 310 பேர் உயிரிழந்தனர். 2016ஆம் ஆண்டு பிற்பகுதியில் எபோலா ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனால் காங்கோவில் ஏபோலாவின் தாக்கம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவதானிக்கப்பட்டது. காங்கோவில் கடந்த மூன்று மாதங்களில் சுமார் 100 பேர் எபோலாவால் சாவடைந்துள்ளனர். எபோலாவில் சாவடைந்தவரின் சடலம் வைக்கப்பட்டுள்ள சவப்பெட்டிகூட மிகவும் நுணுக்கமான முறையில் துப்புரவு செய்யப்படுகின்றது. அந்த அளவுக்கு அந்த நோய் அங்கு தீவிரம் பெற்றுள்ளது.

**'எபோலா எனும் பேரரக்கன்...'**

## தப்பினார் மே




தன் மீதான நம்பிக்கை இல்லாத தீர்மானத்தைத் தோற்கடித்தார் பிரிட்டனின் தலைமை அமைச்சர் திரேசா மே. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலக பிரிட்டன் நாடாளுமன்றம் எடுத்த முடிவு தொடர்பாக கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற பொது வாக்கெடுப்பில் விலகும் தீர்மானத்தை ஆதரித்து அதிகமானவர்கள் வாக்களித்தனர். இதையடுத்து, ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிந்துவிட்ட பிரிட்டன் தனிநாடாகவே பார்க்கப்படுகிறது.

ஆனால், ஐரோப்பிய யூனியனில் இணைந்துள்ள 27 நாடுகளுடனான நிதி கொடுக்கல் வாங்கல், எதிர்கால பரிவர்த்தனை, நுழைவிசைவு மற்றும் குடியுரிமை தொடர்பாக இரு தரப்பினரும் செய்துகொள்ள வேண்டிய எதிர்கால உடன்படிக்கையை பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசா மே தயாரித்து வந்தார். இந்தத் திட்டங்களுக்கு அதிருப்தி தெரிவித்தே திரேசா மேவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத தீர்மான வரைவு கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மான வரைவைத் தோற்கடித்தார் மே.

**'மேவுக்கு இது புதிதல்ல...'**

தொகுப்பு
பிரகாஸ்



## நாடு கடத்தப்படவுள்ளார் விஜய் மல்லையா

பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா விரைவில் இந்தியாவுக்கு நாடுகடத்தப்படவுள்ளார்.

இந்திய வங்கிகளில் சுமார் 27 ஆயிரம் கோடி ரூபா (இலங்கை மதிப்பில்) அளவுக்குக் கடன்பட்ட விஜய் மல்லையா 'அதைத் திருப்பிச் செலுத்தாமல் இங்கிலாந்துக்குச் சென்று அங்கு தலைமறைவாகினர். அவரை இந்தியாவுக்கு நாடுகடத்துவதற்கு இந்திய அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டது. மல்லையாவுக்கு எதிரான வழக்கு இங்கிலாந்தின் வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு இந்த வாரம் வெளியானது. விஜய் மல்லையாவை இங்கிலாந்துக்கு நாடு கடத்துவதற்கு உத்தரவிட்டது வெஸ்ட் மினிஸ்டர் நீதமன்றம்.

**'27 ஆயிரம் கோடி ரூபா மீட்கப்படுமா...?'**

## வைரங்களால் ஜொலித்தது வானூர்தி!




ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த எமிரேட்ஸ் வானூர்தியொன்று வைரங்களால் ஜொலிப்பது போன்ற ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த ஒளிப்படத்தைப் பார்த்த சிலர் "எமிரேட்ஸிடம் இது சாத்தியமா?" என்று கேள்வி எழுப்பினார்கள். இந்த நிலையில் இந்த ஒளிப்படம் வானூர்தியின் உண்மையான ஒளிப்படம் இல்லை என்று தெரிய வந்துள்ளது. எமிரேட்ஸ் வானூர்தி நிறுவனமே அதைத் தெரிவித்துள்ளது. 'அது உண்மையான வானூர்தி கிடையாது. சாரா ஷகீல் என்ற கலைஞரின் கற்பனையில் உதித்த ஒளிப்படத்தை அவரின் அனுமதியோடு நாங்கள் பயன்படுத்தினோம்' என்று எமிரேட்ஸ் விளக்கமளித்துள்ளது.

**'கற்பனைகளுக்குப் பஞ்சமில்லை...'**

## ஐ.எஸ்.ஐ.எஸ். தோற்கடிக்கப்பட்டதை கொண்டாடியது ஈராக்



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்ட தன் ஓராண்டு நிறைவைக் கொண்டாடியுள்ளது ஈராக்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிரான போர் ஈராக்கால் கடும் முனைப்பில் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த வருடம் இதே காலப்பகுதிகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் ஈராக்கில் இருந்து முழுமையாக விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்த இமாலய வெற்றியின் ஓர் ஆண்டு நிறைவு ஈராக்கில் இந்த வாரம் இடம்பெற்று வருகிறது. தலைநகர் பக்தாத் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இந்த வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

**'இமாலய வெற்றியல்லவா அது...'**

தொடர்

தாஸ் மாஸ்ரர்



# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

28

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்திக் கைது செய்யப்பட்டவர்களின் விடயத்தில் திட்டமிடப்பட்ட தாக்குதல் ஒன்று நடைபெறுவதற்கு முன் அந்த நபர் கைது செய்யப்பட்டு விட்டால் அதன் மூலமான அழிவைத் தடுத்துவிட்டார்கள் பதவி உயர்வுகளும், சன்மானமும் வழங்கப்படுவதால் கைது செய்யப்பட்ட நபர் உடனடியாகப் பெரும் சித்திரவதைகளுக்கு இரவு பகலாக உட்படுத்தப்படுகிறார்.**

இலங்கைப் புலனாய்வுத் துறையில் பல பிரிவுகள் இருந்தன. பயங்கரவாதக் குற்றப்புல னாய்வுத் திணைக்களம் (ரி.ஐ.டி), சி.டி.பி, கல்கிசைப் புலனாய்வுப் பிரிவு இது நிலாப்தீன் என்ற பொலிஸ் அதிகாரியின் கண்காணிப்பில் இயங்கியது, விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு (இதன் தலைமையகம் கண்டியில் இயங்கியது), சி.எஸ்.யு, என்.ஐ.பி. (தேசிய புலனாய்வு மையம்) இவற்றில் விசேட குற்றப்புலனாய்வு தவிந்த அனைத்துப் புலனாய்வுத் துறையின் தலைமையகங்களும் கொழும்பில் உள்ளன. விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவு இலங்கை முழுவதும் தனது நடவடிக்கையை மேற்கொள்ளும் வல்லமையைப் பெற்றிருந்தபோதும் மத்திய மாகாணத்துக்கெனச் சிறப்பான வேலைத் திட்டங்களைக் கொண்டிருந்தது. முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த முன்னிலையிலும், முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவின் அனுசரணையின் கீழும் நடத்தப்பட்டு வந்த ஒரு புலனாய்வுப் பிரிவு அது. இந்தப் பிரிவினூடாகக் கைது செய்யப்படும் பெரும்பாலானவர்கள் மீது அனுருத்த ரத்வத்தையைக் கொல்வதற்கு உளவு பார்த்தார் என்ற குற்றம் சுமத்தப்பட்டிருக்கும். இதன் மூலம் ரத்வத்தைக்கு விசுவாசமாகச் செயற்படுத்துவது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி, அவரது பாதுகாப்பு எந்த நேரமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுமாக அவருக்குச் செயற்கையான ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ரத்வத்தையைக் கொல்லவந்தவரைக் கைது செய்து விட்டோம் என்ற செய்தியை ஊடகங்கள் ஊடாகக் கூறுவதன் மூலம் ரத்வத்தை சிங்கள மக்கள் மத்தியில் ஒரு காவிய நாயகனாகக் காட்டப்பட்டார்.

• • • • • •

இலங்கையின் புலனாய்வுத் துறையினருக்குள் கடுமையான போட்டி நிலவியது. ஒரு முக்கிய நபரை அல்லது ஆயுதங்களை, தாக்குதல் திட்டங்களைக் கண்டுபிடித்துவிட்டால் கண்டுபிடிப்பவர்களுக்குப் பதவி உயர்வுகளும், சலுகைகளும் கிடைக்கும் என்பதே இந்தப் போட்டிக்கான காரணமாகும். இதற்கான போட்டி பல மட்டங்களிலும் காணப்பட்டது. உயர் அதிகாரிகள் பலர் தாம் தேடிக் களைத்து இத்தகைய விவகாரங்கள் எதையும் கண்டுபிடிப்பதில்லை. வேறு யாராவது கண்டுபிடித்த விடயங்களில் துப்புத் துலக்கு வார்கள். ஒரு நபரை ஒரு குறிப்பிட்ட புலனாய்வுத் துறையினர் கைது செய்து விசாரித்த பின் அவர் தொடர்பான ஏதாவது விவரங்களைச் சேகரிக்கின்ற நோக்கில் வேறு பகுதிப் புலனாய்வுத் துறையினர் வந்தால், கைதிகளை விசாரிப்பதற்கு அவர்களை அனுமதிக்கப்பார்கள். அவ்வாறு அனுமதித்தாலும் முன்பு தாம் விசாரித்த போது தமக்குச் சொன்னதை விடப் புதிதாக எந்தத் தகவல்களையும் மற்றவர்களிடம் சொல்லக்கூடாது. அவ்வாறு ஏதாவது சொல்ல வேண்டுமானால் தம்மிடமே சொல்ல வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பர். இத்தகைய துன்பத்தைப் பொதுவாக எல்லாப் புலனாய்வுப் பிரிவிலும் கைதாகி இருந்தவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின்படி விசாரணையாளர்களுக்குத் தம்மை நியாயப்படுத்துவதற்குரிய வழிவகைகள் உள்ளன. நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் வரை கைது செய்யப்பட்டவர் பற்றி எதுவும் சொல்லத்தேவையில்லை. 'சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளோம்' என்பதே போதுமானது. கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணையாளர்கள் எதிர்பார்த்த தகவல்கள் எதுவும் கிடைக்காவிட்டால், அந்த நபர் ஒரு முக்கிய தாக்குதலுக்கு உளவு வேலை பார்த்தார் என்று குற்றம் சாட்டிவிட முடியும். இதற்கு எந்த ஆதாரமும் தேவையில்லை. கைது செய்யப்பட்டவர் அதை ஏற்றுக் கையெழுத்திட்டிருக்கிறார் என்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் போதுமானது. ஏற்படவிருந்த ஒரு பெரிய அழிவைப் புத்திசாதுரியமாகத் தடுத்து வைத்த திறனாக இதைக் கருதி அந்தப் பொய்க்குற்றச்சாட்டுப் பல அதிகாரிகளுக்குப் புதிய சலுகைகளையும் பதவி உயர்வுகளையும் வழங்கிவிடுகிறது. ஒரு நபர் கைது செய்யப்பட்டது கைது செய்யப்பட்டவருக்கும், கைது செய்தவருக்கு ஒரு விபத்துப் போன்று அமைந்திருந்தாலும், அதுவே பலருக்கு வாழ்வாதாரமாகவும், மதிப்பாகவும் மாறிவிடுகிறது.

• • • • • •

இது ஒரு கைதி தனது கைது பற்றிச் சொன்னது.

கொழும்பில் செட்டித்தெருவில் ஓர் இடத்தைக் காட்டும்படி வான் ஒன்றில் அவரை ஏற்றிச் சென்றார்களாம். வானின் பின்புற ஆசனத்தில் கைவிலங்குடன் இருத்தப்பட்டதாகவும் இரு மருங்கிலும் இரண்டு பொலிஸார் இருந்ததாகவும் கூறினார். தன்னை ஏற்றிச் சென்ற வானைத் தொடர்ந்து ஒரு கார் வந்துகொண்டிருப்பதைப் பின்புறம் இருந்த பொலிஸார் கண்டுவிட அவர் உடனே முன்னுக்கி ருந்த தனது அதிகாரிக்கு சொன்னாராம் 'வேறோர் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கார் வானைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது' என்று. அந்த அதிகாரி உடனடியாகச் சாரதியிடம் வானை வேறொரு பகுதியூடாகச் செலுத்தும்படி கூறினாராம். அவர்கள் துப்புத் துலாவப்போகின்ற இடத்தை ஏனைய புலனாய்வுத் துறையினர் அறிந்து விட்டால் தமது பிழைப்புக்கு இடையூறு ஏற்பட்டுவிடும் என்றே அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்றார். இதிலிருந்து இலங்கையின் புலனாய்வுத் துறையினர் தமது தனிப்பட்ட நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்படுபவார்களே தவிர, சிங்கள மக்களுக்கோ அல்லது அரசுக்கோ விசுவாசமாக இருப்பதில்லை என்பது தெளிவாகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்திக் கைது செய்யப்பட்டவர்களின் விடயத்தில் திட்டமிடப்பட்ட தாக்குதல் ஒன்று நடைபெறுவதற்கு முன் அந்த நபர் கைது செய்துவிட்டால் அதன் மூலமான அழிவைத் தடுத்துவிட்டால் பதவி உயர்வுகளும் சன்மானமும் வழங்கப்படும். இதனால் கைது செய்யப்பட்ட நபர் உடனடியாகப் பெரும் சித்திர வதை களுக்கு இரவு பகலாக உட்படுத்தப்படுகிறார். இப்படிப்பட்ட துன்புறுத்தலில் தான் இலங்கைப் புலனாய்வுத் துறையினர் அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றனர். சித்திரவதையின் அவஸ்தை தாங்க முடியாமல் அந்தக் கைதி வழங்குகின்ற தகவல்களின் மூலம் வேறு சிலரைக் கைது செய்யவும், ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கு இடங்களைக் கண்டுபிடிக்கவும் முடிகிறது.

ஒருவர் கைது செய்யப்பட்ட விடயத்தை மிக இரகசியமாக வைத்திருப்பதையே புலனாய்வுத் துறையினர் விரும்புகின்றனர். ஏனெனில் தம்மில் ஒருவர் கைது செய்யப்பட்டதை அவருடன் தொடர்புபட்டவர்கள் அறிந்தால் அவர்கள் உடனடியாகவே தாம் தப்புவதற்கான மாற்றுத் திட்டங்களை வகுத்துவிட வாய்ப்புண்டு.

சில தாக்குதல் விடயங்களைக் குழப்புவதற்காக சில எழுமாற்றான விடயங்களைக் கொழும்பு புலனாய்வுத் துறையினர் மேற்கொள்வதுண்டு. ஒரு நாளுக்கு கொழும்பின் பொலிஸ் பிரிவுகளின் எல்லைக்குள் குறைந்தது 10 பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்வது.

இப்படியாக மட்டக்குழி, கொட்டாஞ்சேனை, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை, கறுவாத்தோட்டம் போன்ற எல்லா இடங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படும்போது அவர்களில் ஒரு சிலராவது புலிகளின் உறுப்பினர்களாக இருக்கக்கூடும் என்பதும், இவ்வாறான எழுமாற்றான நடவடிக்கைகளால் புலி உறுப்பினர் அல்லது ஆதரவாளர் ஒருவர் கைதானால் அன்று நடைபெறத் திட்டமிட்டிருந்த தாக்குதல் தவிர்க்கப்படும் என்பதுமே அதற்கான காரணங்கள்.



(தொடரும்)



# அதியயர் காண்டத்து மேடைகள்

மேடை - 10

தையிட்டி அ.இராசதுரை

வீட்டு முற்றம் வரை அந்தப் பொல்லாத கச இருட்டில் திடுதிப்பென்றுதான் வந்தும் விட்ட அந்த மூன்று உருவங்களும் நினைத்து வந்த கருமம் பிழைத்துப் போனதாலோ என்னவோ அழிந்து குலைந்து பாய்ந்தடித்துக் கொண்டே, ஓடிப்போய் விட்ட பின்னாலும்தான் அந்த ரைகர் நாயின் அட்டகாசமான குரைப்புச் சத்தமானது சற்றும்தான் ஓய்ந்த பாடில்லை. ஊரில் ஆட்கள் பன்பலாயிருந்த காலத்தில் இந்த ரைகர் ஒரு பனையிலுள்ள காவோலை காற்றுக்குச் சரசரத்தாலும் கூட விடியவிடயவாயிருந்தது.

குரைத்துச் சத்தம்போட்டு சுற்றம் சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களை இராயிருட்டி நேரத்தை நினைத்துச் சிந்திக்கவும் வைத்து அருமந்த நித்திரை மண்ணாய்ப் போகின்ற தேயென்றும் அலுக்கச் சினக்கவும்தான் வைத்துவிடும்.

"என்னவும் கரடியண்ணையர் எங்கட திணியனொண்டு நல்லாச் சப்பெண்டு சப்பித்தள்ளிப் போட்டு விடிய விடியவாய் நல்ல நித்திரையடிக்கும் கெட்ட நரகாலி கள்ளன் வந்து அதுக்குமேலைதான் தடக்குப்பட்டு விழுந்தெழும்பினாலும்தான் கண்டிரோ அது கள்ளனைக் கண்டுவிட்ட சந்தோஷத்திலை நல்லாய் வாலாட்டும் உங்கடை ரைகர் என்ன விண்ணனாய் கிடக்கப்பா ஒரு சருகு சரசரத்தாலும்தான் விடிய விடியவாயிருந்து உதயதானம் போட்டு பெரிய அடைவு கடைக்காரனெண்ட லேபலோடையிருக்கிற எங்களையும் நல்ல நிம்மதியா நித்திரை கொள்ளவும் வைக்குதப்பா..."

இப்படிக்கு அடிக்கடி கரடியார் வீட்டோடு முட்டியபடியேயிருக்கும் தினசரியாய் திருடர் பயத்தோடு கலங்கி வாழும், அடைவு கடைச்செட்டியார் செல்லப்பா ரைகருக்குக் குளிர்த்திப்போட்டுக் காவல் பூஷணம், விருது கொடுத்து முடிக்கும் போதெல்லாம் திருஷ்டி கழிப்பதுபோல் கரடியார் காறித் துப்பி விட்டு... " என்னவும் செட்டியார் எங்கடை ரைகர் ஒரு புலி நாயல்லோ பேந்தென்னவும் கதை" என்று வெட்டி முழக்கி பத்மபூஷணம் விருதே கொடுத்தும் விட்டாற்போல் கொஞ்சம் மேலாலும் கதைத்தும் காட்டி விடுவார்.

அந்தநேர காலத்தில் அம்மா வாயில் வந்த பாட்டுக்கு ரைகர் என்னும் அழகான ஆங்கிலப் பெயரை வைத்துத் தம்முடைய ரைகர் நாய்க்கு ஒரு கியாதியைத் தேடிக் கொண்டு தாமும் அதனாலொரு பெரிய வளர்த்தியும் வளர்ந்து கொண்டு விட்ட கரடியார் எல்லாமோர் அப்செற்றாய் போயும் விட்ட இன்றைய ஓர் இருள் சூழ்ந்ததொரு இக்கட்டான காலச் சூழ்நிலையில் இந்த நாய்க்கு அந்த நேரமே ரைகரென்ற பெயரை வைக்காமலுக்குச் சும்மாவொரு சிம்பிளாய் 'பண்டா', 'குண்டா', 'போண்டா' என்றாவது வைத்திருந்தாலுரும் தான் எவ்வளவு பெற்றராய் இருந்திருக்குமென்றெல்லாம் படு சத்தியமாய்த் தமது சீவனையும் கலைத்து துரத்திப் பிடிக்கவும்தான் வந்தவர்கள் போனவர்கள்போல் காட்டிவிட்டு ஓர் அதிரடி அற்றாய்க்காக மீண்டும்தான் கோடிவாடிக்குள் ஒளித்துக் கிளித்திருந்து வந்தாலும் தான் என்ற அதிரடிப் பயக் கெடுதியில் கரடியாரும் மனைவியாரும் மிகமிகப் பேணமாய் காற்றுக்கூட உள்வர முடியாத அந்தப் படுக்கையறைக்குள் முகம்குப்புற விழுந்து படுத்துப் பதுங்குழிப் பாஷனில் பதுங்கியிருக்க குந்தியிருந்தபடியே தினசரியாய்த் தனக்கு உண்டி கொடுத்த உயிர் கொடுத்து ஆதரவளிக்குமிந்த இனத்தின் காவல் போராளியாய் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்த ரைகர்......

தன்னுடைய, வொய்சை ஒரு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் குறைத்துக் கொண்டு வந்து இப்பொழுது தற்காலிக போர் நிறுத்தம் போல் எந்தச் சத்தம் சாடியுமில்லாமல் அந்த அறைக் கதவோடையே முட்டிக் கொண்டு படுத்தும் விடுகின்றது.... மணப்புப் பிடித்து வேலை கொண்டு போவதிலொரு படு சுட்டிக் கெட்டிக்கார வம்சத்து இந்த ரைகருக்கு ரைகர்களுக்கு இன்றைக்கு எதற்குமிந்தப் பொல்லில்லாமலுக்கு நடக்க முடியாதென்ற மாதிரியாய் சகலமும் நுட்பக்கருவிகளின் துணை கொண்டே என்றுதான் வாழுமிந்த மனிதங்கள் வகை சொல்ல முடியுமா?

++++

கரடியார் பயக்குளிரில் விறைத்துப் போய் சரியாகவாய்கூடத்திறக்கமுடியாமலிருக்க அத்தோடு அந்த நேரம் தொட்டு யூறின் பிளாடரே வெடித்துப் பறந்திடுமளவுக்ன மூத்திர அடக்கிவைப்பு உபாதை நேரம் காலத்தையே சரியாகக் கண்டு பிடிக்க முடியாததொரு அப்செற் மயக்க மாயை நிலை மனோன்மணியாருக்கு மனத்தென்பு அருண்டு புரண்டு ஆர்ப்பரிக்கத் தொடங்கியும் விடுகின்றது.

இந்தச் சின்னவீடு நாச்சியாரின் சினத்தில் கரடியாரின் செல்போன் கதைப்புக்குத் தடைபோட இயக்ககாரையிழுத்து 'படுபொய்' சொல்லிவிட்ட அந்தக் குறிப்பிட்ட விடயமானது அப்படிச் சொல்லிவிட்ட வாய் மூடுது மூடமுன்னமே 'படுமெய்' யாகிவிட்ட இந்தப் படுபுதினத்தை நேரமும் பிற்சாமத்தை அண்டி விடுகின்றது. விடியிற சாடையெதுவும் தெரிகிறதோவென்று மனோன்மணியார் இறுகிப் பூட்டியிருந்த ஜன்னலின் ஒரு சிறகை மெல்ல நீக்கிப் பார்க்கக் கரடியாருக்குச் சீவன் அங்காலே போய் இங்காலே வருவது மாதிரி.... இந்த விடியப் போகின்ற நேரத்திலும்தான் அமெரிக்கன் மூனுக்கு றொக்கற் அனுப்பின கணக்காய் வெளிச்சக்குண்டுகள்... வண் வண்ணாக வெளிக்கிடும் காட்சியமைப்பு றொம்ப றொம்ப பிரமாதம்தான்.... அந்த அவர்களுக்கும் தானிந்தப் பயமெண்ட நல்ல ஓவராய்த்தான் போச்சு இந்த இவர்களுக்கும் சேர்த்துத்தான்....

++++


நேரம், விடிஞ்சுதான் போச்சுதென்று அனைவரையும் அழகாய்க் கூவி எழுப்பும் கொக்கரக்கோகோ சேவல் வம்சங்கள் ஒக்கம எவராய்? இந்த இரவையும் தான் பக லாக்கிவைத்த மின்சார வெளிச்சங்களும்தான் ஒரேவாகாய் அப்பன், வீட்டுக்குப் போய்விட்டதாம்.? உயிர் போனாலும் தான் இந்தராவிலை டோச் அடிக்க பேபடாதாம்?? இந்த மின்சாரத்தாலைக் கண்டுவிட்ட, மேட்டைமையில் அரசனை நம்பிப் புருஷனைக் கை விட்ட கே சாய் உன்னையினி வேணாமென்று, வீட்டுக்கோடி வாடிக்குள், தூக்கிவீசிவிட்ட அந்தச் சுட்டிநாக விளக்குத்தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தே விட்டதாம் நேரமும் பலர் பற்றி விடிந்து கொண்டுதான் வருகின்ற தென்பதனைத் தப்பித்தவறியிருக்குமிந்தக் காக்காக்களும் பட்சிப் பறவைகளும் சவுண்டெழுப்பி இந்தப் பற்றியெரிந்து போன ஊருக்கு, அரவுண்ஸ், பண்ணவும், தொடங்கிவிட்டனவாம்??

இன்னும்தான் அசட்டைத்தனமாயிருந்தால் என்னவோ இயமனையும் பச்சடிபோட்டும் விட்ட பயத்தில் சாமம் சாமமாய் அடக்கிவைத்திருந்ததைக் கரடியார்க் கணவர் இந்தகட்டிலிலோ தன்னுடைய சீலை துணியிலையோ சுவாமி படத்தடியிலையோ செப்ப மாய்ச் செய்தும் தான் காட்டிவிடுவாரென்ற அவசரகால , எச்சரிக்கையில், அந்தச் சுட்டிநாக விளக்கைக் கொளுத்திவிட்டு கெதியாகக் கதவைத்திறந்து கொண்ட மனோன் மணி, கரடியாகை, கையில் கெட்டியாகப் பவுத்திரமாய், பிடித்தும் கொண்டு வெளியில் கூட்டிப் போகின்றார்? இந்த இருவருக்கும் முன்னால், வந்தனம் சொல்வதுபோல் வாலையாட்டி அனுங்கிச்சினுங்கித் தலையைத்தூக்கி மோப்பமிழுத்தபடியே் ஏ்தாவது மனப்புக்கிணப்பும்தான் தட்டுக்கிட்டும் படுகிறதோ எச்சரிக்கையோடு ஒரு பிறசிடன்ரின் விசுவாசமான மெய்ப்பாது காவலனாய் ரைகர் முன்னுக்கு, முன்னுக்காய் போய்க்கொண்டிருந்தது? ஆணையாள் சரியாகத் தெரியாதளவுக்கு நிலம், பூரணமாய் வெள்க்க வில்லை இருந்துவிட்டு யாரும் தீட்டி யும்தான் விட்டாலென்ற மகாபயமானது இரண்டுபேரையும் ஆட்கொல்லியாய் கட்டிப்பிடித்து கூச்சல்போட அங்காலை போனாலும் டேஞ்சர்?? இங்காலை இருந்தாலும் டெஞ்சர் ?? அப்பெங்கை ஆகாயத்திலையோ??? இப்படி இந்தவிதமாய் அலம்பிப் புலம்பிய



கரடியார் சாளைக்கு வெள்ளிக்கிழமை அள்ளிக் கொண்டுபோறதுக்கு சொன்னபடியேயந்த வெள்ளைக்காரன் நேரத்திற்கு செஞ்சிலுவைவாகனம் வந்துவிடப்போனிற்றதோஎன்று ஏங்கிவிழுந்து போய் நின்று விட்ட நேரமாய் ஒரு நாள் முந்தியர்க இன்றைக்கு வியாழக்கிழமையே....

(தொடரும்)



# மனிதம் காத்து இதமாய் வாழ்வோம்...

கவிதை

கிருஷ்னி உதயகுமார்

இருபத்தியோராம் நூற்றாண்டு
இது புதுயுக தொடக்கம்
புதுமை உலகு செய்யும்
புரட்சியாளன் ஆளும்
விந்தை உலகின் விநோத காலம்

நிஜங்கள் யாவும்
நிழலாய்க் கண்முன் கரைந்துபோகும்
நிலையற்ற வாழ்வின் நிரந்தரம் ஏதுமில்லை

மாண்புமிகு குணங்களால்
மாட்சி செய்யும் மனிதம் தவிர
ஏதுமில்லை
இங்கு இறையாட்சி செய்ய


உலகம் உருண்டோடி
உறவுகளும் உணர்வுகளும் பல சுமந்து
உறுதியாய் உருவம் பெற்று
உண்மை உரைக்க

உன்னைக் கேட்டால்
உரக்கச் சொல்லு

மனிதம் தவிர
மற்றெல்லாம் பொய் என்று
மண்ணுலக வாழ்வின் மகிழ்ச்சிக்கும்
உன்னத உறவுகளின் நீட்சிக்கும்
மனிதப் பண்பு கொண்டு
புது உலகு செய்வோம் என்று...

தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## ஓயாத மழை

தென் கிழக்கில் வங்களா விரிகுடா வில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் பெருமழையில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச கிராமங்களின் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளப்பாதிப்பும் ஏற்பட்டுள்ளதுடன் மழைநீர் தேங்கி நிற்பதால் டெங்கு உட்பட நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.
இந்த காலநிலை மாற்றம் காரணமாக கடல்சீற்றமும் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளதால் ஆழ்கடல் மீன்பிடியாளர்க ளுட்பட்ட கரைவலை மீன்பிடியாளர்களும் தொழிலுக்குச் செல்ல முடியாது வீட்டில் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

**இயற்கையின் சீற்றம் இது.**





## பிரச்சினைகளுக்குத் தீர்வு

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படுமென பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம் உறுதியளித்துள்ளார். பல்கலைக்கழக சுதந்திர ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்தார். சங்கத் தலைவர் ஏ.எம்.அன்வர் தலைமையில் பல்கலைக்கழக ஒலுவில் வளாக ஊழியர் மேம்பாட்டு மத்திய நிலையத்தில் கூட்டம் நடைபெற்றது.

**தீர்வே சுமுக நிலைக்கு இட்டுச் செல்லும்**

## அநீதி இழைக்கவில்லை

கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அநீதி இழைக்கவுமில்லை. இனிமேலும் அவ்வாறான நிலைப் பாட்டை நான் எடுக்கவும் மாட்டேன் என கல்முனை மாநகர மேயர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.
கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கு நான் துரோகமிழைப்பதாகவும் மாநகர நிர்வாகத்தில் புறக்கணித்து செயற்படுவதாகவும் இனவாதிகள் எனக்கெதிராக திட்டமிட்ட பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர் எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

**மனச்சாட்சி என்றும் ஒன்றிருக்கிறது**

## 12 கிடைக்குமாம்!

கிழக்கிலுள்ள முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரே சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டால் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று பேரம் பேசும் சக்தியை முஸ்லிம்கள் அதிகரிக்கலாமென கருத்து வெளியிடப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தலைவருமான எம்.ரி.ஹசனலி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
கிழக்கு முஸ்லிம் தலைமைகளை ஒன்றுபடுத்தி குறித்த இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கான முயற்சியை ஐக்கிய சமாதான கூட்டமைப்பு முன்னெடுக்க வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
அப்போ, கிழக்குக்கு வெளித் தலைமைகளான முன்னாள் அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் போன்றோரின் கதி, அதோ கதி தானோ?





## இருதய தினம்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தொற்றாநோய்ப் பிரிவு பன்னாட்டு இருதய தின நிகழ்வை கடந்த திங்கட்கிழமை நிந்தவூரில் நடத்தியது.
தொற்றாநோய்த் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம்.ஹாரிஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் மக்களை விழிப்பூட்டும் நடைபவனி ஒன்று இடம்பெற்றதுடன் வைத்திய கலாநிதி எம்.ஏ.நௌசாத் அலி இருதய நோய் தொடர்பான சிறப்பு விரிவுரையுமாற்றினார். நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர் கூடத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

**என் இருதயம் உங்கள் இருதயம்!**



## இளம்பயிர்கள் நாசம்

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழையால் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நெற்காணிகளில் மழை வெள்ளம் தேங்கி வெள்ளக் காடாகவே காட்சியளிக்கின்றது.
இதனால் விதைப்பு மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதகாலமேயான நெற்பயிர்கள் வெள்ளத்தில் அமிழ்ந்து காணப்படுவதால் நெற்பயிர்கள் பாதிப்படைவதுடன் நோய்த்தாக்க மேற்பட்டு அழிவுறும் அச்ச நிலமையும் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
மழை தொடருமானால் பெரும்போக நெற்செய்கை முற்றாகப் பாதிப்படையும் நிலையேற்படலாமெனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**இறைவன் விட்டவழி**



## கூட்டுக்குள் பிளவு

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்த லின்போது கூட்டுச் சேர்ந்து ஐக்கிய மக்கள் கூட்டமைப்பாக ஒன்றித்து இயங்கி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு என்பன அடங்கிய கூட்டுக்குள் தற்பொழுது பிளவும் பிரிவும் ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த கூட்டுக்குள் தற்பொழுது தமது ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு இல்லையென அதன் தலைவர் எம்.ரி.ஹஸனலி பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றாராம். ஹஸனலி வேறு திசைக்கு ஒருவரால் திசை திருப்பப்பட்டு வருவதாகவும் 'மொட்டு' பக்கம் அத்திசை காட்டப்பட்டுள்ளதாகவும் மற்றைய அணியினர் கூறி வருகின்றனர்.

**இவ்வளவு விரைவில் கூட்டுக்குள் பிளவு**


சிறுகதை

# யோசிப்பம்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

வரவேற்பறையில் இருந்தவாறே வீதியை அவதானித்துக்கொண்டிருந்தார் மித்திரன். வீதியில் நின்றிருந்த அவருடைய மனம் எதிர் காலத்துக்கும் இறந்தகாலத்துக்குமாக ஓடித்திரியத் தொடங்கியது. தனது வீட்டின் வறுமையைப் போக்கவென்று இளம் வயதிலேயே ஓமான் நாட்டுக்குச் சென்றவர் மித்திரன். வீட்டின் நிலையை நிமிர்த்திய பின்னர் அவரது கையில் பணம் நிறைந்துகொண்டிருந்தது. தன்னைச் சுட்ட வறுமை தனது ஊரில் மேலும் பலரை வாட்டிக்கொண்டிருப்பதை அவர் அறிவார். அவர்களுக்கு உதவும் வகையில் சிறுகைத்தொழில் நிலையமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். பாரம்பரியமாகக் கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பல பொருள்கள் இன்று செய்யப்படாது அருகி வருவதை கவனித்துக் கவலைப்பட்டுக்கொண்டி ருந்த அவர், அவற்றை அருகிவிடாது செய்வதற்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என எண்ணினார். அதைச்செயற்படுத்தியும் விட்டார்.

தொழிற்சாலையின் ஆரம்ப வைபவத்தின்போது அவரது சிறந்த நோக்கத்தைப் பலரும் புகழ்ந்தனர். அது பற்றிய அறிவும் தெளிவும் இல்லாதவர்கள் கூடத்தொழிற்சாலையின் அமைப்பையும் அழகையும் நவீனத்துவத்தையும் கண்டு பிர மித்துப் போய் பல நாள்களாக அவற்றைப் பற்றிப் பேசித்திரிந்த போது தன்னடக்கம் மூலம் அதை அடக்கிவிட முயன்றும் ஒரு பெருமிதம் அவருள்ளும் தோற்றம் பெற்றதென்னவோ உண்மை. ஆனால் முதலாம் ஆண்டு விழாவுக்காக ஓமானி லிருந்து வந்தபோது மனதினுள் அவ்வப்போது தலைநீட்டிய




"தொழிற்சாலை சரிவரக் கவனித்துப் பேணப்படவில்லை" என்ற எண்ணம் அந்தப்பெரு மிதத்தை மிதித்துக் கசக்கத் தொடங்கியது. நிர்வகிப்பவர்க ளுக்கு இதைக் கூறவேண்டும் என்று எண்ணியவற்றைச் சுட்டிக் காட்டிவிட்டுத் தான் திரும்பிச் சென்றார்.

மீண்டும் ஊருக்கு வரமுடியாத படி பல்வேறு காரணங்கள் அவ ரைத் தடுத்துவிட்டன. எனினும் அடிக்கடி தொடர்பு கொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்து தன்னுடைய அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் கூறுவதற்கு அவர் தவறவில்லை.

✦✦✦✦✦

தொழிற்சாலையின் ஐந்தாவது ஆண்டு விழாவுக்காவது அவர் வந்தேயாகவேண்டுமென்பது பலரின் கோரிக்கை. அவரும் தன் முயற்சியின் பலனைத் தரிசிக்க வேண்டும் என்ற பேராவல்கொண்டிருந்ததும் சேர்த்து அவரை இங்கே இழுத்துவந்துவிட்டன. விழாவுக் கிடையில் ஐந்து நாள்கள் இருக்கின்றன.எனினும் .உறவுகளைச் சந்திக்கவும் ஊரைச்சுற்றிப் பார்க்கவுமென்று விழாவுக்கு முன்னரும் பின்னரு மாகச் சில நாள்களை ஒதுக்கியிருந்தார். மித்திரனுக்கு உறவினரும் நண்பரும் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல. இலங்கையின் வெவ்வேறு ஊர்கள் நகரங்களிலும் இருக்கிறார்கள். அந்த இடங்களுக்கும் போய் வரும் உத்தேசத்துடன்தான் அவர் தன் பயணத்தைத் திட்டமிட்டிருந்தார்.

முதலில் திருகோணமலைக்குப் போய் மாமாவைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணம் வருவதே அவரது திட்டம். தங்கைமார் மூவரினதும் குடும்பத்தினர் கொண்டுவரு மாறு கேட்ட பொருள்களை வாங்கியதும் எண்ணத்தை அவர் மாற்றிக் கொண்டார். பொருள்களுடன் முதலில் யாழ்ப்பாணம் வந்தவர் நாளை திருகோணமலைக்குப் போகவிருக்கிறார்.

நேற்று தங்கச்சியின் வீட்டிலிருந்து பலதும் பத்தும் கதைத்துக்கொண்டிருந்தபோதுதான் தொழிற்சாலை பற்றிய அபிப்பிராயங்களும் இடைக்கிளம்பின "நீங்களென்ன ஓமானிலை உழைக்கிற காசிலையும் சேர்த்தோ சம்பளம் கொடுக்கிறனீங்கள்? அங்கை வேலை செய்யிறவை அதிஷ்டக்காறர்தான்" என்றார் மச்சான்.

அவரது பேச்சின் பின்னே ஏதோ இடறுப்படுவது மித்திரனுக்குப் புரிந்தது. "இதிலை பெரிய இலாபம் வராது.இப்பிடி அப்பிடி தான் கொண்டிழுக்க வேணும். எங்கடை கிராமப்புற உற் பத்தி களை ஊக்குவிக்கிறதும் எங்கடை பிள்ளையளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திறதும் அரச உத்தியோகமில்லாமலும் நல்லாய் வாழலாமெண்டதை அவை விளங்கிக்கொள்ள வைக்கிறதும்தான் இதைத்தொடங்கினதின்ரை நோக்கம்."

"ஆனால் எங்கடை ஆக்கள் அப்பிடியெல்லாம் நினைக்கிறவையாய் இருந்தால் நாங்களிப்ப எப்பிடி இருந்திருப்பம் தெரியுமே? எங்களுக்கு வேலை செய்யாமல் சம்பளம் கிடைக்கிற வேலை வேணும். இது எங்களுடைய நாட்டின்ரை சாபக்கேடு. வாங்கிற சம்பளத்துக்கு வேலை செய்ய வேணும். அது எங்க ளுடைய கடமை எண்ட எண்ணம் உள்ளவையை இப்ப காணக்கிடைக்கிறேல்லை. வேலை இல்லை. வேலை இல்லை எண்டு அழுதுகொண்டு திரியுங்கள். வேலை கிடைச்சால் வேலை செய்யாமல் சம்பளம் வாங்கப் பாக்குங்கள். .உங்கடை தொழிற்சாலையிலை வேலை செய்யிற ஆக்களும் வேலைநேரத்திலை வெளியிலை சுத்திறதை நான் கண்டிருக்கிறன்" மித்திரன் பேச்சை முடிக்கு முன்னரே மச்சான் தான் பூடகமாகச் சொல்லியதை வெளிப்படுத்தினார்.

ஏற்கனவே மித்திரனின் மனதுக்குள்ளே படிந்திருந்த ஓர் அபிப்பிராயம் மேலெழுந்து வந்து மச்சானின் கூற்றையும் இணைத்துக்கொண்டு கூத்தாடத் தொடங்கியது. அவர்களுக்கு முன்பாக அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளாவிட்டாலும் அந்தக் கூத்தாட்டம் தங்கச்சி வீட்டிலிருந்து வந்த பின்னரும் அடிக்கடி நிகழ்ந்து மனதை அலைக்கழித்தது. இப்போதும் வெளிக் காட்சி களில் விடுபடாமல் மனம் அந்தக் கூத்தாட்டத்தில்...

"எனது நோக்கம் எட்டப்படாது போய்விடுமா?"

மீண்டும் மீண்டும் அந்த வினா குடைந்து குடைந்து அந்தரிக்க வைத்தது. எனது திட்டமிடலில் எங்கே பிழை விட்டேன்? அல்லது நடைமுறைப்படுத்தலில் ஏதாவது தவறிழைத்து விட்டேனா? எண்ணக்கரு தன்னுள் உருவானதிலிருந்து இன்று வரையான அனைத்தையும் அணு அணுவாக ஆய்வு செய்யத் தொடங்கினார். தனது செயற்படுத்தலில் தவறேதும் அவருக்குத் தட்டுப் படவில்லை. எனது செயற்படுத்தலா? நடைமுறைப்படுத் திய வேளையில் நானிருக்கவில்லையே!

சில நியமனங்கள் அளவுக்கதிகம் எனக் கூறியபோது ஏதேதோ காரணங்கள் கூறினார்கள். சில மேலதிக மான நியமனங்கள் நடைபெற்றுள்ளதைப் பற்றி குல சேகரனிடம் கேட்டபோது அவனும் அதை ஒப்புக்கொண்டான்.

"தேவன் இரண்டு பேருக்கு வேலை குடுக்கவேணுமெண்டு நிண்டான்.சிலதைத் தவிர்க்கேலாது. அவன் தான் நிர்வாகத்துக்குப் பொறுப்பாய் இருக்கிறான். சரி எண்டு விட்டிட்டன்."

ஆரம்பம் முதல் மித்திரனுடன் இணைந்து செயலாற்றி அவர் ஓமான் சென்ற பின்னரும் இங்கிருந்து பொறுப்பாக கவனித்துவந்த நண்பன் குலசேகரன் அன்று கூறிய பதில் இது. இதே போல் தகுதியற்ற வர்களும் நியமிக்கப் பட்டார்களோ? இப்போது குலசேகரன் இங்கில்லை. கொழும்பில் நல்லதொரு பதவி கிடைத்ததால் சென்றுவிட்டான். அவனின் முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடாதல்லவா. இப்போது மூன்று வருடங்களாகத் தேவன் என்றழைக்கப்படும் தேவமனோகரன்தான் நிர்வகித்துவருகிறான். அவன் கூறுவனவற்றை அதீதமாக நம்பிவிட்டோமோ?

மனம் சஞ்சலிக்க இடையே அறிவு ஒன்றை உறுத்தியது. யாரோ கூறியதை வைத்துக் குழப்பமடைவது சரியானதா? ஐந்து நாள்கள் போனதும் நேரிலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இந்த முடிவுக்கு வந்து சிறிது ஆசுவாசமடைந்த வேளையில் முன்பொரு நாள் நண்பன் கூறியது ஞாபகத்துக்கு வந்து தொலைத்தது. அரச தலைவர் ஓரிடத்துக்கு வரவிருந்தா ராம்.அவசரஅவசரமாக அவர் வரவிருந்த பாதை சீராக்கப் பட்டதாம். எல்லாவற்றையும உடனடியாகச் சீர்செய்துவிட முடியுமா? சில இடங்களில் உடைந்து கிடந்த கட்டடங்கள் கண்ணில் தென்படாமல் தகரத்தை அடித்தோ வேறு வகையாகவோ மறைத்துவிட்டார்களாம். இது நரேன் கூறிய கதை. இதே போன்று ஒரு நாள் மட்டும் விழாவில் பங்குபற்ற வரும் எனது பார்வைக்குப் படாமல் எத்தனையோ விடயங்கள் மறைக்கப்படலாம்.

இது கவனிக்காது விடக்கூடிய விடயமல்ல என்பது மித்திரனுக்குப் புரிந்தது. இந்த நாட்டிலிருப்பவர்கள் வெளி நாட்டில் இருப்பவர்தானே பணத்தைக் கொட்டிக் கொடுக்க லாம் என எண்ணலாம். அவரது கடும் உழைப்பு தந்த பணம் இது. இரவும் பகலும் உறக்கமின்றி உழைத்த பணம். கடும் சட்டதிட்டங்களுக்கமைய ஓயாது வெலை செய்து சம்பாதித்த பணம்.

இங்குள்ளவர்கள் வேலை செய்யாமல் சம்பளம் எடுக்க நினைக்கிறார்களாமே? யாழ்ப்பாணத்தவர் திறமைசாலிகள்; உழைப்பாளிகள். வானம் பார்த்த பூமியிலும் வியர்வை சிந்தி முன்னேறியவர்கள் என்றெல்லாம் புகழப்பட்ட எங்களைப் பற்றி இப்படி ஒரு கருத்து வரு கிறதே!

சட்டென்று அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. விழா அன்றுதான் போகவேண்டும் என்பது விதியா?

இன்றைக்குப் போனால் என்ன? அதை எவரும் தடுக்க முடியாதே. சிந்தித்து முடிவெடுத்ததைச் செயற்படுத்த மித்திரன் தாமதிப்பது கிடையாது. முச்சக்கர வண்டியை அழைப்பதற்காக அலைபேசியை எடுத்தவரின் கரத்தை மூளை தாமதிக்க வைத்தது. "சிவேஸ் ஒரு இடத்துக்குப் போக சைக்கிள் தேவைப்படுகுது. வர ஒண்டு ஒண்டரை மணித்தியாலம் செல்லும்."

மித்திரன் உள்ளேயிருந்த மருமகனின் ஈருருளியை உபயோகிக்கும் உத்தேசத்துடன் கேட்டார்.

"அதுக்கென்ன மாமா. நீங்கள் கொண்டுபோங்கோ. எனக்குப் பின்னேரம் ஐஞ்சு மணிக்குத்தான் தேவை.இல்லையெண்டாலும் தம்பியின்ரை சைக்கிள் இருக்குத்தானே. சமாளிப்பம்."

சிவேஸின் பதில் சாதகமாக அமையவே உடை மாற்றிக் கொண்டு "தொழிற்சாலையடிக்குப் போட்டு வாறன்" என்று சொல்லியவாறு மித்திரன் புறப்பட்டார். ஈருருளிச் சாவியைக் கொண்டுவந்து கொடுத்த சிவேஸின் விழிகளில் ஆச்சரியம் பொங்கியது.

தொழிற்சாலை வளாகம் கண்களுக்குத் தென்படும் தூரத்தில் செல்லும் பொழுதே அதன் சுற்றுப்புறங்கள்

துப்புரவு செய்யப்படுவது தெரிந்தது. வாயிலில் போய் இறங்கினார்.காவலாளிக்கென அமைக்கப்பட்ட கட்டடம்' என்னை எவரும் பயன்படுத்துவதில்லை" என்று பல்லிளித்துக்கொண்டு நின்றது. சிறிது சென்றதும் மூன்றுபேர் கதைத்தக்கொண்டு நின்றார்கள்.இருவர் சாரமும் சேர்ட்டும் அணிந்திருந்தனர். ஒருவர் அணிந்திருந்தது தொழிற்சாலைப் பணியாள ருக்குரி யதாக இருக்கவேண்டுமென மித்திரன் ஊகித்தார். பணியாளர்களுக்கு ஒரே மாதிரி உடையை நிர்வாகமே தயாரித்துக் கொடுக்க வேண்டுமெனத் தான் கூறியது நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் அறிந்திருந்தாலும் உடையை நேரிற் கண்டதில்லை.இவர் வந்ததைப்பற்றி அவர்கள் அக்கறைப்படவேயில்லை. ஆனால் மித்திரன் அவர்களைப் பற்றி அக்கறைப்படாமல் இருக்க முடி யாதே. அவர்களை நெருங்கும்போது என்ன கதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யும் அவதானித்துக் கொண்டு சென்றார். ஏதோ சினிமாவிலோ நாடகத்திலோ வரும் காட்சி பற்றியதாக அது இருந்தது..

"பெரிய ஐயாவைச் சந்திக்கமுடியுமா?"

தொலைக் காட்சி நாடகத் தொடரைப் பார்த்து க்கொண்டிருக்கும் போது வந்த விருந்தினரைப் பார்ப்பது போல் மூவரும் அவரைப் பார்த்தார்கள்.தொழிற்சாலைப் பணியாளராக இருக்கவேண்டும் என மித்திரன் ஊகித்திருந்தவன் அருகே வந்து "எதுக்காகச் சந்திக்கப் போகிறீர்கள்?" எனக் கேட்டான்.

"வெளிநாட்டுக்கனுப்ப சில பொருள்கள் வாங்க வேண்டும்"

"ஆண்டு விழா நடக்கப்போகுது. ஐயா அந்த வேலை யளிலை ஓடித் திரியிறார். விழா வாற சனிக்கிழமை.திங்கள்... திங்களும் வேலையளிருக்கும். செவ்வாய் வாருங்கோ."

"எனக்குஅவசரமாய்ச் சாமான்கள் தேவைப்படுகுது." "அதுக்கென்ன செய்ய? இப்ப அவரைச் சந்திக்க ஏலாது." திடமாக அவன் கூறினான். "ஒருக்காக் கேட்டுப் பாருங்கோ." கெஞ்சும் குரலில் மித்திரன். "சங்கீதன் என்ன விசயம்? ஏன்ன வேணுமாம்?"

➡43

# யோசிப்பம்

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்புறமிருந்து ஒரு பெண்குரல் கேட்கவும் மித்திரன் திரும்பினார். அங்கே நின்றிருந்த பெண் தொழிற்சாலையில் பணியாற்றுபவளாக இருக்க வேண்டுமென அவரது மனம் ஊகித்தது. அவளது உடையும் தொழிறசாலைக்குரியதாக இருக்க வேண்டும்.

"சேரைப் பாக்க வேணுமாம்."

"என்னத்துக்காம்?"

""ஏதோ சாமான்கள் அவசரமாய் வாங்கவேணுமாம்""

""என்ன அவசரமாய் வாங்கப்போறீங்கள்"

இப்பொழுது அவளது கேள்வி மித்திரனை நோக்கியே நேரடியாக வந்தது.

"வேப்பம்பூ வடகம் வேறையும் உங்களிட்டைக் கிடைக்கக் கூடிய வடக வகைகள் ஊறுகாய் வகைகள் மற்றது.... உங்களின்ரை உற்பத்திப் பொருள்களைப் பார்த்துவிட்டுச் சொல்லுறன்."

"வேப்பம்பூ இப்ப சீசன் இல்லை. வேறை வடக வகைகள் எண்டு இல்லை. ஆண்டு விழாவிலை காட்சிக்கு வைக்க எண்டு வைச்சிருக்கிறதுகளை அண்டைக்கு வந்தால் பாக்கலாம். அடுத்தடுத்த நாள் அதுகளைத் தருவம்."

வேப்பம்பூ சீசனின் போது வடகத்தை விரும்பி வாங்குவதற்கு ஆட்கள் வருவதில்லை என்று தேவன் கூறியது. அவரது நினைவிலிருந்து கரைந்துவிடாது பளீரிட்டது. வந்தவரைத் திரும்பிப் போக வைக்கக் காட்டும் திறமையை அவரை வாடிக்கையாளராக்குவதில் இவள் ஏன் காட்டவில்லை? ஒரு வகைச் சோம்பேறித்தனமா? பயிற்சியின்மையா? ஊக்குவிக்கப்படாமையா?

மூளை தேடுதலில் தீவிரமானது. தன்னைத் திருப்பி அனுப்ப முயலும் பதில்களைத் துவம்சம் செய்ய மித்திரனும் கங்கணங் கட்டிக்கொண்டார்.

"அதுகளை இப்ப காட்டினீங்களெண்டால் நான் தேவையானதை ஓடர் செய்யலாம். பெரிய ஐயாவை நான் அவசரம் சந்திக்க வேணும். கொஞ்ச நேரம் இருந்தெண்டாலும் சந்திச்சிட்டுத் தான் போகப் போறன்"

கூறிக்கொண்டே தொழிற்சாலையை நோக்கி எந்த அனுமதியையும் எதிர் பார்க்காமல் மித்திரன் நடக்கத் தொடங்கினார்.

"இவங்கள் வேலை செய்யிறதைச் சுப்பர்வைஸ் பண்ணச் சொல்லி சேர் சொன்னவர். நான் அங்கை போறன்" என்றவாறு சங்கீதன் நழுவினான்.. அந்தப் பெண் மித்திரனைப் பின் தொடர்ந்தாள்.

"எங்களுடைய பிள்ளைகளுக்கு அயலவரை நேசிக்கப் பழக்கவேணும். தன்னுடைய ஊரை நாட்டை உலகத்தை நேசிக்கப் பழக்க வேணும். அப்பிடி வளர்ந்த பிள்ளை எதைச் செய்தாலும் மற்றவைக்கு நல்லதாய்ச் செய்ய வேணும் என்று செய்யும். ஏமாற்ற நினைக்காது. சுயநலம் உள்ளதாய் இருக்காது. சிறு வயதிலேயே செம்மைப்படுத்தாததாலைதான் இன்றைக்கு இவ்வளவு கேடும்"

மாமா ஒரு நாள் எதற்கோ சொன்னதும் மூளையின் தேடுதலில் தட்டுப்பட்டது. உண்மைதான் பயிற்சி கொடுத்தாலும் எல்லோரும் பயன்படுத்துவதில்லையே. ஊக்குவிப்பும் அப்படித்தான். குறுக்கு வழியில் தன்னைச் சாதனையாளனாகக் காட்டும் பலர் இருக்கிறார்கள். மனம் பண்பட்டிருந்தால்தான் இவைகள் பயன் தரும். "இந்தச் சாமான்களும் செய்து விக்கத் தொடங்கினனீங்களோ? பிள்ளையள் விளையாடுறதாயும் தெரியேல்லை." செடிகொடிகள் படர்ந்து கிடந்த இடத்தில் சிறுவர்கள் விளையாடும் ஊஞ்சல் முதலியவை இருப்பதைக் காட்டி அவர் கேட்டார்.

"ஏன் இதுகளும் வாங்க எண்டு வந்தனீங்களோ? இதுகளைப் பற்றியெல்லாம் விசாரிக்கிறிங்கள்"

மித்திரன் மேலிருந்த கோபத்தைத் தீர்க்கக் கிடைத்த வாய்ப்பை அந்தப்பெண் பயன்படுத்திக்கொண்டது அவருக்கு விளங்கியது.

"ஓ...செய்து தருவீங்களெண்டால் வாங்குவன்"

அவளுக்குப் பதில் கூறிக்கொண்டிருக்கையில் தொழிற்சாலைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கெனக் காப்பகம் ஒன்றை அமைத்துக்கொண்டிருந்த போது அவர்கள் விளையாடுவதற்கென அழகான கற்பனைகளுடன் தேடி அலைந்து இவற்றை வாங்கிவந்து நிறுவிய நினைவில் மனம் அந்தரித்தது. அவரது கற்பனைகள் துருப்பிடித்துக் கிடந்தன. எள்ளல் சிரிப்புடன் எங்கோ பார்வையை அலையவிட்டவாறு அந்தப்பெண் நடந்துவந்துகொண்டிருந்தாள்.

"இப்ப பாலர்காப்பகம் இங்கை நடக்கிறேல்லையோ?"

மித்திரனின் இந்தக் கேள்வி அவளது மூளையில் ஏதோ ஓர் அருட்டுணர்வைத் தட்டிவிடச் சட்டெனத் திரும்பிய விழிகளில் வினாவும் வியப்பும் கலவையிட்டுப் படர்ந்திருந்ததை அவரும் கிரகித்துக் கொள்ளத் தவறவில்லை.

"நடக்கிறதுதான்...."

பதிலளிக்கும் போதே அவரது அடுத்த வினா பற்றிய பயம் அவளின் உள்ளே மெல்ல ஊற்றெடுத்தது. அடுத்த கேள்விக்கு முன்னரே அவரது கவனம் திசை திரும்பியது. வாரார்ந்தாவில் கால் வைக்கும்போதே வரவேற்பறையை ஒரு பெண் சுத்தஞ்செய்துகொண்டிருப்பதை அவதானித்த அவரது கண்கள் அதை அளவீடு செய்தன.

இந்த வேலைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த ஆளணி அதிகம் என்று அங்கிருந்தவாறே மித்திரன் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். அதற்குத் தரப்பட்ட பதில் கட்டடங்களும் வளாகமும் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படுவதான எண்ணமொன்றை அவருள் ஏற்படுத்தியிருந்தது. வாராந்தாவில் ஏறித் திரும்பியவரின் கண்களை கட்டுக்கட்டாக நிலத்தில் போடப்பட்டிருந்த பத்திரங்கள் ஈர்த்துக் கொண்டன.. வற்றல் வகையொன்றின் பொதியின் மேல் ஒட்டுவதற்காக அச்சடிக்கப்பட்ட தாள்கள் கறையான் அரித்துக் கிடந்தன.

வரவேற்பறையின் மூலைகளில் இருந்தவண்ணம் நாம் துடைப்பத்தை ஏமாற்றிவிட்டோம் என்று கெக்கலித்த தூசுக் கூட்டத்தை அவர் திரும்பிப் பார்த்தார்.

"அன்றாடம் தூசு தட்டிக் கூட்டாததாலை கறையான் எழும்பி சிலந்தி வலைபிடிச்சுக்கிடக்கு" வயோதிப காலத்திலை அம்மா எப்போதோ கூறியதை மனம் இணைத்துப் பார்த்துக்கொண்டது. அங்கிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்துகொண்டார். அந்தப் பெண்ணின் முகத்தில் பதற்றம் அப்பிக்கொண்டது. அலைபேசியில் அவளது விரல்கள் விளையாடின. அதேவேளை மித்திரனின் மூளை குடைந்து குடைந்து முடிவொன்றைத் தேடிக் கொண்டிருந்தது. தேவனையோ காணவில்லை.

"பெரிய ஐயா வரமாட்டார்போலை."



"தெரியேல்லை"

மித்திரனின் கேள்விக்கு அந்தப் பெண் தயங்கித் தயங்கி பதிலளித்தாள். அவளது குரலில் இப்போது ஒரு பௌவியம் இருந்தது. அவர் எழுந்து புறப்பட்டார்.

✦✦✦✦✦

முன்பக்கம் சந்தடி கேட்டு வெளியே வந்த சிவேஸிடம் சாவியைக் கொடுக்கும்போது 'நாளைக்கு நான் திருகோணமலைக்குப் போகேல்லை எண்டு அம்மாவிட்டைச் சொல்லு.' என்று மித்திரன் சொல்லவும் அவன் காரணம் அறிய அவாவுவது போல் தயங்கி நின்றான்.

"தொழிற்சாலையிலை கொஞ்சம் வேலையளிருக்கு."

திருப்தி தராத பதிலொன்று சிவேஸைத் திரும்பிச் செல்ல வைத்தது. மறுநாள் காலையிலேயே மித்திரன் தொழிற்சாலைக்குச் சென்றுவிட்டார். உந்துருளியில் வந்திறங்கிய அந்தப் பெண் 'வணக்கம். வாங்கோ ஐயா. இருங்கோ.' என உபசரித்துவிட்டு வரவேட்டில் கையொப்பமிட்டாள்.

"விரல் பதிவு முறை இங்கை இல்லையோ?" மித்திரனின் வினாவுக்கு எள்ளலாகப் பதில் கூறுவது தவறாகிப் போய் விடலாம் என மனம் எச்சரிக்கவே "இல்லை ஐயா" என அவள் பதில் கூறிவிட்டு அலைபேசியையும் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள். மித்திரன் நடப்பவற்றைக் கவனித்தவாறு அமர்ந்திருந்தார்.

உந்துருளியில் வந்திறங்கி உள்ளே வந்த தேவன் திகைத்துப்போய்விட்டான்.

"நீங்களா சேர்! கூப்பிட்டிருந்தால் நானே வந்திருப்பேனே. ஏதாவது அவசரமான விசயமா சேர்?" விழாவுக்கு வேண்டிய எல்லாம் செய்துகொண்டிருக்கிறம். விழா நல்ல சிறப்பாய் நடக்கும்.. வேறை ஏதாவது செய்ய வேணுமா?" தேவன் பணிவாகப் பேசிக்கொண்டிருந்தாலும் படபடப்பு உள்ளே உதறியது. "ஓமோம். அதுதான் வந்தனான். விழாவைத் தள்ளிப்போடுவம்."

"ஏன் சேர்?" "விழா நடத்திற காசிலை பணியாளருக்கு பயிற்சியொன்று ஒழுங்கு செய்யப் போறன்."

"விழா..?"

"பயிற்சி முடிய யோசிப்பம்"

# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

மு.மாசிலாமணி

## செல்லப்பாவும் மாரிமுத்துவும்

கடந்த வாரம் செல்லப்பாவும் மாரிமுத்துவும் ஏறோப்பிளேன் பற்றிக் கதைச்சதிலை. செல்லப்பா தனது வெளிநாட்டுப் பணயம் பற்றியும் ஏறோப்பிளேன் பற்றியும் புளுகியதாலை ஏ்றோப்பிளேன் பற்றி இன்னும் பல கேள்விகளுடன் செல்லப்பா வீட்டிற்குச் செல்ல, செல்லப்பாவின் மனைவி பூமணி அவரை வரவேற்க. செல்லப்பா தனது நண்பன் மாரிமுத்துவுக்குப் பேட்டி கொடுக்க ஆயத்தமானார்.

அன்னை பிளேனுக்குப் பெற்றோல் தாங்கி எங்கை வைச்சிருக்கினம்'' எனக் கேக்க "பிளேன்ரை இறக்கை இரண்டும் தான் எரிபொருள் தாங்கியாகவும் இருக்குது. பிளேனுக்குப் பெற்றறோல் பாவிப்பதில்லை அதுக்கெண்டு ஒருவித அதிகம் எரியக் கூடிய மண்ணெண்ணை தான் பாவிப்பினம்" எண்டார். பூமணி கேட்டார், "அப்படியெண்டால் நிறைய மண்ணெண்ணை தேவைப்படுமெல்லோ?" "ஆயிரக்கணக்காண எண்ணை இரண்டு இறக்கைகளிலும்கொள்ளக்கூடியதாக அமைச்சிருக்கின்றார்கள் எனச்சொல்ல மாரிமுத்து வாயைப் பிளந்து கொண்டிருந்தார்.

செல்லப்பா விளக்கமாகச் சொல்லி ஆரம்பிப்பதில்லை ஏறோப்பிளேன் தாயாரிப்பிலை பல தொழில்நுட்பம் உதவினாலும் முதல் முதலாய் ரைட் சகோதரர்கள் தான் ஆகாய விமானம் உருவாக்குவதற்கு முன்னோடியாய் இருந்திருக்கினம் எனச் சொல்லி முடிக்க முதல் மாரிமுத்துக் கேட்டார் "அது சரி அண்ணை பிரயாணிகளின்ர பொதிகளை என்ன மாதிரி ஏத்தி பிறகு தரையிறகின பிறகு அவர்கள் பொதிகளைக் கொடுக்கினம்? " என. கேள்விக்கு விளக்கம் வழங்கினார் செல்லப்பா" பிளேனின் களுத்துப் பகுதியைத் தான் பெட்டிகள், பொதிகள் ஏற்றப்படும் பின்னர் தரையிறக்கின பிறகு அந்தப் பொதிகள் கென்வேயர் பெலிற்றிலை அடுக்கி ஓட விட அவர்கள் பெட்டிகளை தானே இனங்கண்டு எடுப்பினம் என்டார்.

பூமணி தன் கணவன் செல்லப்பாவைக் கேட்டார். முந்தி நீங்கள் அம்பாறையிலை படிக்கேக்கை பிளேனிலை ஏறிப் பலாலில இறங்கினான் எண்டு சொல்லுவியள் எனச் சொல்ல "ஓம் ஓம் அந்தக் காலத்திலை டக்கோட்டா எண்ட விசிறி பூட்டன பிளேன் தான் பிளேனில ஏறின உடனை இரண்டு காதுக்கும் பஞ்சு வைக்கச் சொல்லுவினம் எனச் சொல்ல மாரிமுத்து முந்திக்கொண்டு கேட்டார்.

"ஏன் அண்ணை பிளேன் எஞ்சின் அவ்வளவு சத்தம் போடுமா" எண்டு அதுக்கும் விளக்கம் சொன்னார் செல்லப்பா சத்தத்துக்கும் பிளேனுக்குள்ளை அமுக்கம் காதின்ர காதுச் சவ்வை அமுக்குவதால் காதுகள் வலிக்கும் என்பதாலை பஞ்சு வைக்கவேண்டி வரும் எண்டார். பூமணி கேட்டார் "இப்பவும் அப்படித்தானோ" என்று "இல்ல இப்ப உன்ன தொழில் நுட்பத்தாலை ஆகாய விமானம் பறக்கும் போது விமானத் துக்குள் உள்ள அமுக்கத்தைச் சீராக வைப்பார்கள். இருந்தும் விமானம் 35ஆயிரம் அடி உயரத்திலிருந்து மெல்ல மெல்ல இறங்கும் போது பிளேனுக்குள் இருக்கும் குழந்தைகள் அளுவதை அவதானிக்கலாம்" என முடிக்க முதல் மாரிமுத்து சொன்னார்.

"அண்ணை நாங்கள் போர்க் காலத்திலை குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு போறதெண்டால் கொம்படி ஊரியான் கிழாலி எண்டு பயந்து பயந்து போனேம் எண்டு பத்திரிகைகளில செய்தி வருது" எனக் கூற பூமணி குறுக்கிட்டு போர் முடிந்து இவ்வளவு ஆண்டுகள் கடந்தது தான் மிச்சம். சீமெந்து பற்றரி. பரந்தன் சோடா பற்றரி எல்லாம் கிடந்த மாதிரியே கிடக்கு. அரசியல்வாதிகள் மக்களை எத்தனைகாலம் தான் ஏமாத்துவார்களோ எனப் பேட்டியை முடித்தார்.




இரண்டரைக் கோடிப் பண வேட்டையில் சாகசம் செய்யும் எதிர் நாயகனின் கதையே 'ஜானி' என்று இந்தப் படத்தின் கதையை ஒரு வரியிலும் சொல்லிவிடலாம். 'கத்தி'யின் எதிர் நாயகன் நீல் நிதின் முகேஷ் நடிப்பில் ஹிந்தியில் வெளியாகிப் பெரு வரவேற்பைப் பெற்றிருந்த 'ஜானி கத்தார்' படத்தைத் தமிழில் இயக்குநர் வெற்றிச்செல்வன் மறு ஆக்கம் செய்திருக்கிறார்.



**கதை**

பிரபு, ஆனந்த்ராஜ், அஷுதோஷ் ராணா, பிரசாந்த், ஆத்மா பேட்ரிக் ஆகிய ஐவரும் வியபாரக் கூட்டாளிகள். சீட்டு ஆடும் கிளப், மதுபானக்கூடம் எனப் பல தொழில்களைச் செய்து வரும் இவர்கள் பணத்துக்காகச் சில சட்டவிரோதச் செயல்களையும் செய்கின்றனர். இரண்டரைக் கோடி ரூபாய் பணம் தயார் செய்தால் கையில் விலை உயர்ந்த போதைப்பொருள் கிடைக்கும் என்று பிரபுவின் நண்பர் சாயாஜி ஷிண்டே கூறுகிறார். இதற்காக ஐவரும் இணைந்து ஆளுக்கு ரூ.50 இலட்சத்தைத் திரட்டுகிறார்கள். பணத்தை சாயாஜி ஷிண்டேவிடம் யார் கொடுப்பது, பொருள் வாங்குவது எப்படி? பயணமுறை, என எல்லாம் சரிவரத் திட்டமிடப்படுகிறது. ஆனால், பணத்தை எடுத்துச் செல்லும் ஆத்மா பாட்ரிக் கொல்லப்படுகிறார். அதற்கடுத்து பிரபு, சாயாஜி ஷிண்டே, ஆனந்த் ராஜ், அ{தோஷ் ராணா என நால்வரும் அடுத்தடுத்துக் கொல்லப்படுகிறார்கள். இந்தக் கொலைகளைச் செய்பவர் யார், அந்தக் கொலைக்கான பின்னணி என்ன, பிரசாந்த் எப்படி இதில் சிக்கி மீள்கிறார், துரோகி யார் போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

**பாத்திரங்கள்**

'சாஹசம்' படத்துக்குப் பிறகு இன்னும் கொஞ்சம் அதிக எடையுடன் வந்து திரையை ஆக்கிரமிக்கிறார் பிரசாந்த். பயம், பதற்றம், பீதி, குற்ற உணர்ச்சி, சோகம், வெறி, ஆவேசம், தயக்கம், அப்பாவித்தனம் என எல்லா உணர்வுகளுக்கும் ஒரே மாதிரியான முக பாவனைகளால் சலிப்புக்கு உள்ளாக்குகிறார். கதையின் முக்கிய காட்சிகளில் பிர சாந்தின் வெளிப்பாடுகள் படு சொதப்பல். பிரபு வழக்கமான நடிப்பைக் கொடுக்கத் தவறியிருக்கிறார். அ{தோஷ் ராணாவும், ஆனந்த்ராஜும் நடிப்பில் இரசிக்க வைக்கிறார்கள். ஆத்மா பாட்ரிக், கலைராணி, தேவதர்ஷினி ஆகியோர் பொருத்தமான பாத்திர வார்ப்புகள். கதாநாயகிக்கான பங்களிப்பு கவர்ச்சிதான் என்று சஞ்சிதா ஷெட்டி எப்படி நம்பினார் என்று தெரியவில்லை. அவரின் தாராளம் முகச்சு ளிப்பை ஏற்படுத்துகிறது. சாயாஜி ஷிண்டேவின் தமிழ் அவ்வளவு உவப்பாக இல்லை. நடிப்பிலும் தளர்வு தெரிகிறது.

> **“ பயம், பதற்றம், பீதி, குற்ற உணர்ச்சி, சோகம், வெறி, ஆவேசம், தயக்கம், அப்பாவித்தனம் என எல்லா உணர்வுகளுக்கும் ஒரே மாதிரி யான முக பாவனைகளால் சலிப் புக்கு உள்ளாக்குகிறார். கதையின் முக்கிய காட்சிகளில் பிர சாந்தின் வெளிப்பாடுகள் படு சொதப்பல்.**

**பலம் பலவீனம்**

தியாகராஜனின் வசனங்கள் படத்தின் பரபரப்பைக் குறைத்து கிச்சுகிச்சு மூட்டுகின்றன.; கொலைக்கான காரணங்களை நியாயப்ப டுத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது. அது சரியாகச் சொல்லப்படாததால் அதுவே படத்தின் பலவீனமான அம்சமாகிவிடுகிறது. எந்தப் பாத்திரம் சொன்னாலும் அப்படியே ஆமாம் சாமி போட்டுப் பிரசாந்த் ஒப்பிக்கிறார்.

இது நம்பும்படியாக இல்லை. பிரசாந்தும் யாரையும் தேடிப் போய் குழப்புவது, பிரச்சினையைச் சொல்வது என்று தேடலுடன் இல்லை. அவர் பாட்டுக்குச் சும்மா இருக்கிறார். இதனால் நாயகனுக்கான சவாலே இல்லாமல் போகிறது. இந்த இடத்தில் மட்டும் திரைக்கதை சறுக்குகிறது.

எம்.வி.பன்னீர்செல்வத்தின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம் சேர்க்கிறது. ரஞ்சன் துரைராஜ் பின்னணி இசை படத்துடன் பொருந்திப் போகிறது. பாடல்கள் இல்லாதது மிகப்பெரிய ஆறுதல். குளோரோ பார்ம் மூலம் மயக்கம் வரவழைப்பது, ஜானி பெயர் பயன்படுத்தும் இடம், பாக்யராஜ் படம் பார்த்துவிட்டு அதற்கேற்ப திட்டமிடுவது என வெற்றிச்செல்வன் சில அம்சங்களைப் படத்தில் நுட்பமாகப் பயன்படுத்தி இருக்கிறார்.

பிரசாந்தின் முந்தையப் படங்களைக் காட்டிலும் 'ஜானி' அவரின் திரை வாழ்க்கைக்கு அவ்வளவுக்கு முன்னேற்றத்தைத் தராது என்பது மாத்திரம் உறுதி.



# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

கவிதை
வி.கிருசிகேசன்



கட்டுத்தறியும் கவிபாடிடும்
கம்பன் கொண்ட தேன்மொழியே
யாதுமூரே யாவரும் கேளீர் என
யாத்த மொழியே தமிழ் மொழியே

கருவில் சுமந்து கற்பகம் சொரிந்து
கனவில் வளர்க்கும் தாய் உயிரன்றோ
பிறப்பில் கலந்து உயிர்தெழுந்து
புவியில் உயர்த்தும் தமிழ் உரித்தன்றோ

கலைகள் பலவும் தன்னகம் கொண்டு
கவிகள் படைக்கும் காவியம் இதுவே
அறங்கள் யாவும் ஊடே புகுந்து
அழகாய் உதிக்கும் நம் மொழி தமிழே

ஆயிரம் வலிகள் சுமந்து நின்றாலும்
ஆகமம் கூறும் நெறியில் நின்றிடுவோம்
துரோகம் வாழும் குகையில் இருந்தாலும்
துயரின்றி வீரச்சாவு காத்திடுவோம்

அரக்க நெறியில் விதிகள் உடைத்து
அடக்க நினைக்கும் வன்மமே கே
தனித்து உதித்து உலகம் போற்றும்
தமிழது எங்கள் உயிருக்கு நேர்...

# இதம் தரும் இயற்கை...



காலைப் பனியும் கனல்மறை சாரலும்
காற்றின் சேர்க்கையில் காதல் ஒலிகளும்
தேடிக் கிடைத்திடா தேன் பொழில் சோலையும்
தேவன் அவன் தன் பேர் சொல்லும் நித்தமும்

பாட்டுடன் பரதமும் பயின்றிடும் பறவைகள்
பாரினில் நடத்திடும் பண்ணிசைத் தேர்வுகள்
வில் கொண்டு தாவிடும் விண்புடர் வான்முகில்
விந்தை கொள் இயற்கையை விதந்துதான் கூறுமே

தட்டுக்கள் தாங்கிடும் தரணி சூழ் ஆழியும்
தப்பாமல் தந்திடும் நற்பலன் நாழியும்
திசைகளில் பரவிடும் தீஞ்சுவை கானமும்
திக்கெட்டும் சொரியுமே தெம்மாங்கு ராகமும்

முல்லைக்கும் பாலைக்கும் முந்நூறு காவியம்
முத்தாகச் சேர்த்திடும் கவிஞர்கள் ஆயிரம்
எல்லைக்குள் அடங்கிடா எப்பெரும் சாகரம்
எமக்காக இறைவனவன் ஈர்ந்திட்ட ஓவியம்

உயிருக்கு நேராய் எம் உடல் தாங்கிக் கொள்வதும்
உணர்வுக்கு உரம் தந்து உறம் தேற்றி மகிழ்வதும்
இன்பமாய் இதம் தந்து தலைகோதி விடுவதும்
இறைவா வரம்சேர் நல் இயற்கையின் குணங்களே...

கவிதை
பு.தர்சன்



**சிறுமிகள் மீதான பாலியல் வன்முறை குறித்தும், அப்படி வன்முறை நிகழ்த்திய குற்றவாளிகளுக்குச் சாவு சிறந்த தீர்வாகாது என்பது குறித்தும் அக்கறை விதைத்த விதத்தில் இயக்குநர் தினேஷ் செல்வராஜின் 'துப்பாக்கி முனை' முயற்சியை வரவேற்கலாம்.**

ஒரு குற்றவாளியைச் சுட்டுக் கொல்வதற்காக மும்பையிலிருந்து ராமேஸ்வரத்துக்குப் பயணமாகின்ற பொலிஸ் அதிகாரி, அதே நபரைக் காப்பாற்றுவதற்குப் போராடினால் அதுவே 'துப்பாக்கி முனை'.

**கதை**

ராமேஸ்வரம் தீவில் 15 வயதுடைய சிறுமியை ஆசாத் ('மிர்ச்சி' ஷா) என்கிற மாவோயிஸ்ட் வன்புணர்வு செய்து கொன்றுவிட்டதாகப் பொலிசாருக்கு வழக்குப் பதிவாகிறது. ஆசாத்தைச் சுட்டுக் கொல்வதற்காகப் பொலிஸ் அதிகாரி போஸ் (விக்ரம் பிரபு) மும்பையிலிருந்து ராமேஸ்வரம் விரைகிறார். கொலையான சிறுமியின் தந்தை உய்யா (எம்.எஸ்.பாஸ்கர்) விக்ரம் பிரபுவிடம் நடந்தது என்ன? என்பதைச் சொல்கிறார். கோபமும் வேகமுமாகப் விரையும் விக்ரம் பிரபு சுட்டுத்தள்ள வேண்டிய அவரைக் காப்பாற்றுவதற்குப் போராடுகிறார். அது ஏன்? சிறுமிக்கு நேர்ந்த கொடூரத்துக்கு யார் காரணம்? துப்பாக்கி தோட்டாக்களில் மட்டுமே பேசும் விக்ரம் பிரபு ஏன் முதன்முறையாக ஒரு குற்றவாளிக்காக மனம் இரங்குகிறார் போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

**பாத்திரங்கள்**

விக்ரம் பிரபு இதற்கு முன்பு பொலிஸ் அதிகாரியாக நடித்திருந்தாலும் இதில் 'என்கவுன்ட்டர் ஸ்பெஷலிஸ்ட்' என்ற பாத்திரத்துக்குச் சரிவரப் பொருந்துகிறார். பார்க்கிற இடங்களில் எல்லாம் குற்றவாளிகளைச் சுட்டுத் தள்ளும் முரட்டு அதிகாரிக்கே உரிய கம்பீரத்தையும், மிடுக்கையும் சரியாக வெளிப்படுத்துகிறார். அம்மாவின் அன்புக்காக ஏங்குவதும், தான் செய்வது தவறில்லை. இதுவும் ஒரு அறம் தான் என்பதைப் புரிய வைப்பதுமாகப் படம் முழுதும் பக்குவமான நடிப்பை வழங்கியுள்ளார். நீண்ட மாதங்களுக்குப் பிறகு ஹன்சிகாவைப் படத்தில் பார்க்க முடிகிறது. கதாநாயகிக்கு உரிய அம்சங்களில் ஹன்சிகாவின் கதாபாத்திரம் கட்டமைக்கப்படவில்லை. முக்கிய திருப்பங்களுக்கு அவர் பயன்பட்டாலும் குணச்சித்திரக் கதாபாத்திரமாகவே அமைந்துவிடுகிறது. ஆடுகளம் நரேன், வேல ராமமூர்த்தி நம்புக்கள் எடுபடவில்லை. ஆசாத் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'மிர்ச்சி' ஷா அப்பாவியான நடிப்பில் மனதை அள்ளுகிறார். எம்.எஸ்.பாஸ்கர் மகளை இழந்த தகப்பனின் தவிப்பைக் கண்முன் நிறுத்துகிறார். எங்கேயாவது ஒரு பெண் வன்புணர்வு செய்யப்பட்டால் அந்தச் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் ஒவ்வொரு ஆணும் வெட்கப்பட்டுத் தலைகுனிய வேணும் என்று தழுதழுத்த குரலில் சொல்லும்போது கண்ணீரை வரவழைக்கிறார்.

**ஒளிப்பதிவு இசை - காட்சித் தொகுப்பு**

ராசாமதி கதைக்குத் தேவையான நிலப்பரப்பைத் தன்னுடைய கமரா மூலம் கண்களுக்குள் கடத்துகிறார். ராமேஸ்வரம் தீவு குறித்த காட்சிகளில் அவரின் உழைப்பு பளிச்.

முத்து கணேஷின் இசையில் பாடல்கள் பரவாயில்லை ரகம். பின்னணி இசை படத்தின் முக்கிய இடங்களில் பலமாகவும், சில காட்சிகளில் ஒத்திசைவாக இல்லாமல் துருத்திக்கொண்டும் உள்ளது.

புவன் சீனிவாசனின் படத்தொகுப்பின் நேர்த்தி படத்தின் எதிர்பார்ப்பைக் குறையாமல் பார்த்துக் கொள்கிறது. வசனங்கள் மூலம் இயக்குநர் தினேஷ் செல்வராஜ் கவனிக்க வைக்கிறார்.




**பலம் - பலவீனம்**


விக்ரம் பிரபு அம்மாவிடம் தன் அன்பைப் புரிய வைக்க 5 ஆண்டு காலம் தேவையா, அவரின் கையில் இரண்டு விரல்கள் எப்படித் துண்டானது, ஒரு பொலிஸ் அதிகாரி என்கவுன்ட்டர் செய்யப் போவது பொதுமக்களுக்குத் தெரியும்படியா செயல்படும், டெல்லி வரை செல்வாக்கு இருக்கும் வேல ராமமூர்த்தி மகனைக் காப்பாற்ற பெரும் முயற்சிகள் ஏதும் எடுக்காமல் வாய்ச்சவடால் மட்டும் விடுவாரா போன்று சில கேள்விகள் எழுகின்றன.

நாயகன் விக்ரம் பிரபுவுக்கு படத்தில் இருவிதமான நோக்கங்கள் உள்ளன. ஒன்று குற்றவாளி என்று முத்திரை குத்தப்பட்ட மிர்ச்சி ஷாவைக் காப்பாற்ற வேண்டும். மற்றொன்று உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன்பு தண்டிக்க வேண்டும். படம் முழுக்க குற்றவாளிகளை தன் தோட்டாக்களுக்குப் பலியாக்கும் விக்ரம் பிரபு ஏன் அந்த 4 குற்றவாளிகளை நெருங்கவோ, தேடவோ, தண்டிக்கவோ செய்யாமல் ஒதுங்கிக் கொள்கிறார். அந்த வேலையை எம்.எஸ்.பாஸ்கர் செய்வதால் இரண்டாம் பாதியின் மொத்த மதிப்பும் அவருக்கே போய்ச் சேர்கிறது. இதனால் விக்ரம் பிரபு கதாபாத்திரத்துக்கான நோக்கம் முழுமையடையாமல் போகிறது.

படத்தில் காதல், டூயட் என்று இயக்குநர் அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதது ஆரோக்கியமான அம்சம். வடமாநிலத் தொழிலாளர்கள் என்றாலே குற்றப் பின்னணி உடையவர்கள் என்று போலியாகக் கட்டமைக்கப்படும் பிம்பத்தை இயக்குநர் தகர்த்திருப்பது அவரின் பொறுப்புணர்வைக் காட்டுகிறது.

சிறுமிகள் மீதான பாலியல் வன்முறை குறித்தும், அப்படி வன்முறை நிகழ்த்திய குற்றவாளிகளுக்குச் சாவு சிறந்த தீர்வாகாது என்பது குறித்தும் அக்கறை விதைத்த விதத்தில் இயக்குநர் தினேஷ் செல்வராஜின் 'துப்பாக்கி முனை' முயற்சியை வரவேற்கலாம்.

# தடைகள் தமிழனைத் தடுத்திடாது



தன்மானம் மிக்கவன் தமிழன்
மண்மானம் மிக்கவன் அவன்
உழைத்து உண்பதில் பிரம்மச்சாரி
இழந்தது ஏராளம் என்றாலும்
ஈட்டுவான் தேட்டத்தை உழைப்பினால்
தமிழனாய் பிறப்பதே போராட்டம்
தமிழனாய் வாழ்வதும் போராட்டம்

உழைத்திட தடைகள் ஆயிரம்
கற்றிடத் தடைகள் வேலை
பெற்றிடத் தடைகள் மண்ணில்
வாழ்ந்திடத் தடைகள் எம்மை
ஆண்டிடத் தடைகள் உரிமை
கேட்டிடத் தடைகள் மறைவான
அரசியல் தடைகள் தமிழனுக்கு
அனைத்திலும் ஏராளம் தடைகள்

தடைகள் தமிழனைத் தடுத்திடாது
விடை கொடுப்பான் விதியை வென்று
மதியைப் பலவேளை இழந்தாலும்
கதியிது என்று இருந்திடான்
அடக்குமுறைக்கும் பயந்ததில்லை
ஆற்றாமை ஓடி மறைந்ததில்லை
வேரை அழித்திட முனைந்தால்
போரால் புடமிடப் பட்டவன்
உணவை ஒறுத்துப் போராடி
உடலை வருத்திப் போராடி
உரிமைக்காகப் போராடி
ஒவ்வொரு தடவையும் ஏமாந்து
ஆயுதமேந்தி முடியாமல் போனதை
அறிவால் ஈட்டுவான் ஒருகாலம்
அனைத்தும் அரசியல் தந்திரங்கள்
மனத் துணிவே அதற்கு மந்திரங்கள்


கவிதை

அபிர்ராஜன் அன்ரனிபீற்றர்


BabyPriya@urs_priya



என் கவலையெல்லாம் என் பிரார்த்தனைகளின்போது கடவுள் 'ஹெட்செட்' அணியாமல் இருக்க வேண்டும் என்பதுதான்




# ராட்சசனுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம்



பொழுதுபோக்குப் படங்களின் மத்தியில், ஒரு சில திரில்லர் சினிமாக்கள் மக்களிடையே மிகப்பெரிய அதிர்வுகளை உண்டாக்கும். அந்த வகையிலான ஒரு திரைப் படம் தான் 'ராட்சசன்'. இந்தப் படத்தின் வித்தியாசமான கதையமைப்பால் மக்களிடையே பெரும் வரவேற்புப் பெற்று இருக்கிறது.

இந்தப் படம் தமிழ்நாடு முழுவதும் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றதோடு, வணிக ரீதியாக அதிக வசூல் செய்த படம் என்று நிரூபணம் ஆகியுள்ளது. இது தமிழ் சினிமாவுக்குப் பெரும் அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது. 'ராட்சசன்' படத்தின் பெருமைகளுக்கு மகுடம் சூட்டுவது போல, தற்போது இந்தப் படம் 'IMDB' தரவரிசையில் இந்தியாவின் சிறந்த படங்களின் வரிசையில் இரண்டாவது மிகச்சிறந்த படமாக மதிப்பிடப்பட்டுள்ளது. தென்னிந்தியதிரைப்படங்களின்வரிசையில்முதல்இடத்தை பிடித்திருக்கிறது. இது ஒட்டுமொத்த தென்னிந்திய சினிமாவுக்கே புத்துணர்ச்சி அளித்திருக்கிறது.

மேலும் 'IMDB' தர வரிசையில் தென்னியந்திய சினிமாக்களில் ராம்சரணின் 'ரங்கஸ்தலம்', விஜய்சேதுபதியின் '96' மற்றும் கீர்த்தி சுரேஷ் நடித்த 'மகாநதி' ஆகிய படங்களும் சிறந்த படங்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

ஆட்டை வெட்டி கறி உண்ணும் நாம், அது எம் வீட்டுச் செடியின் இலையைக் கூட உண்பதற்கு நாம் அனுமதிப்பதில்லை!

வெகுதூரத்தில் தெரியும் பச்சை நிற 'டிராபிக் சிக்னல்', பக்கத்தில் சென்றதும் சிவப்பாகிவிடும்! இதுதான் 'இக்கரைக்கு அக்கரை பச்சை'!

பல்லக்கிலிருந்து இறங்கும் வரை தெரிவதில்லை, பாதை இவ்வளவு மோசம் என்று.



சுகமோ, வலியோ… எல்லாமும் மனதில் இருந்துதான் தோன்றுகிறது!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி நிலை உருவாகும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** நல்லவர்களின் நட்பு மனநிறைவைத் தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உணர்ச்சி வசப்படுகின்ற சூழல் ஏற்படலாம். குடும்ப விடயங்களைப் பிறரிடம் விவாதிக்க வேண்டாம். கடின உழைப்பு தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற உதவும்.

**கடகம்:** சொந்த பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். செயல் நிறைவேற ஒருமுகத் தன்மை அவசியம். தொழிலில் சராசரி உற்பத்தி விற்பனை இருக்கும்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற, தகுந்த மாற்றம் செய்வீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி:** செயலில் திறமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி மன மகிழ்வைத் தரும். மேலதிக வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சி படிப்படியாக நிறைவேறும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** திதானித்து செயல்படுவது நல்லது. நண்பர்களோடு சச்சரவில் ஈடுபடவேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சீரான அளவு பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** மனதில் நம்பிக்கையும், பெருமிதமும் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். நிலுவைப் பணம் வசூலாகும்.


**மகரம்:** சிலர் நெருக்குதல் தன்மை உருவாக்குவர். குடும்பத்தில் ஒற்றுமை அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி புரிவீர்கள்.

**கும்பம்:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு விலகும். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** சிறிய செயலும் கடினமாகத் தோன்றலாம். நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கையைத் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.



என்னடா பதவி போச்சேன்னு அழுறியா?



இப்ப அழுதது அவன் இல்ல, நான்..

எம் வாழ்க்கை பயணத்தில் "சந்தோசம்" என்ற பெயர் பலகை இன்னும் எத்தனை மைல்கள் தொலைவில் இருக்குதோ?

**வாழ்க்கை ஒரு பயணமாமே...**

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | 3 | | |
| 1 | | | 5 | | | | | |
| 9 | 5 | 7 | | | | | 6 | |
| 4 | | | | | 2 | | 9 | 5 |
| | | | 6 | | | | 1 | |
| 5 | 1 | | 7 | | | | | 2 |
| | 6 | | | | | 2 | | 1 |
| | | | | | 4 | | | 3 |
| | | 1 | | | 3 | | 7 | 6 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 6 | 3 | 7 | 5 | 1 | 2 | 9 |
| 1 | 3 | 7 | 2 | 9 | 8 | 6 | 5 | 4 |
| 9 | 2 | 5 | 1 | 4 | 6 | 8 | 7 | 3 |
| 2 | 9 | 8 | 7 | 5 | 1 | 4 | 3 | 6 |
| 7 | 1 | 3 | 6 | 2 | 4 | 5 | 9 | 8 |
| 5 | 6 | 4 | 9 | 8 | 3 | 7 | 1 | 2 |
| 3 | 5 | 2 | 8 | 6 | 7 | 9 | 4 | 1 |
| 6 | 4 | 1 | 5 | 3 | 9 | 2 | 8 | 7 |
| 8 | 7 | 9 | 4 | 1 | 2 | 3 | 6 | 5 |

## எங்கே செல்லும் இந்தப் பாதை...



கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

# குழப்பத்தை நீட்டித்த கூட்டமைப்பு!

கொடாக்கண்டன் விடாக்கண்டன் நிலைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதேபோல, குனியக்குனியக் குட்டுபவனும் மடையன்: குட்டக்குட்டக் குனிபவனும் மடையன் என்னும் சந்தர்ப்பங்களையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். நிலையான முடிவை இன்னும் எட்டாத அரசியல் சூழ்நிலை, நாட்டில் ஆறு வாரங்களுக்கு மேலாக நீடித்த இந்த நிலையில் மேற்சொன்ன இரண்டு நிலைகளும் இந்த நாட்டின் தற்போதைய சிக்கலுடன் நன்கு பொருந்திப்போகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இனியொரு பொழுதிலும் தலைமை அமைச்சர் பதவியை வழங்கமாட்டேன் இது அரசதலைவரின் உடும்புப்பிடி. ரணில் விக்கிரமசிங்கவை தவிர எவரையும் தமது கட்சியிலிருந்து நாம் தலைமை அமைச்சராகப் பிரேரிக்கப்போவதில்லை. அவரும் தான் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குப் போதுமான ஆதரவுத் தளத்துடன் இருக்கிறார். இது ஐக்கிய தேசியக் கட்சி தரப்பினரின் உடும்புப்பிடி. இந்த இரண்டு தரப்பினரினதும் முரண் நிலைவரத்துடன் நாடு மற்றொரு வாரத்தினுள் நுழைகிறது.

கடந்த வியாழக்கிழமை வெளியான உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிராமல் அரசதலைவர் நாடாளுமன்றைக் கலைத்தது சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறித்த அறிவிப்பு, சில புதிர் முடிச்சுக்களை அவிழ்த்திருந்த நிலையில், புதிய புதிர்முடிச்சு இந்த வாரத்தில் இடப்பட்டிருக்கின்றது.

### புதிய எதிர்க்கட்சித் தலைவர் யார்?

கடந்த 12ஆம் திகதி நாடாளுமன்றில் நடைபெற்ற ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கை தீர்மானத்தின் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்திருந்தனர். இந்த நடவடிக்கை, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்வது தொடர்பில் புதிய வியாக்கியானத்தைக் கோரி நிற்கிறது. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆளும் தரப்பு கலந்துகொண்டிராத நிலையில், ரணிலுக்கு ஆதரவு தெரிவிக்க ஜே.வி.பி. கைவிரித்திருந்த நிலையில், கூட்டமைப்பின் துணையுடன் 117 பேரின் ஆதரவை ஆவணப்படுத்தியிருந்தார் ரணில் விக்கிரமசிங்க. ஆக, நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான ஆகக்குறைந்த 113 பேர் என்கிற கணக்கைக் காட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தங்கியிருக்கிற நிலைவரம் ரணிலுக்கு ஏற்பட்டிருக்கிறது. ரணிலுக்குப் பச்சைக்கொடி காட்டி அவர் தலைமையிலான அரசுக்கு ஆதரவு கொடுத்ததன் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுக்கட்சி நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை எதிர்கொண்டிருந்தார். அப்போதும் அதில் தனது ஆதரவினைச் சம்பந்தனது அணி வழங்கியிருந்தது. ஆனால், அப்போது தேசிய அரசு என்ற பெயரில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவர்கள் அரசில் பங்குவகித்திருந்தனர். அதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு பிரிவான ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவதில் முரண்பாடு இருந்தது. ஆனால், இப்போதோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள், எவரும் அரசின் பங்காளியாக இல்லாத நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தினை உரிமை கோரக்கூடிய பெரும்பான்மையை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடுமிடத்து குறைவான பிரதிநிதிகளை கொண்டியங்கும் சம்பந்தன், தமது ஆசனத்தையும் அலுவலகத்தினையும் ஜனநாயகப் பண்புகளுக்கு மதிப்பளித்து கையளிக்க வேண்டி நேரலாம். எனினும் இந்த விவகாரம் இதுவரை சூடுபிடிக்காமல் இருக்கிறது.

சனநாயக செயன்முறைகளை முன்னிறுத்தியும் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் சார்ந்தும் கூட்டமைப்புக் கடைப்பிடித்துவரும் உறுதியான போக்குகளே நாட்டில் ஏற்பட்ட குழப்பம் தொடர்வதற்குப் பங்களிப்பு செய்கின்றன என்றால் அதற்கு மாற்றுக்ருத்து இல்லை. சிவசக்தி ஆனந்தனைத் தவிர்த்து ஒன்றாக இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒக்ரோபர் 26க்கு உடனடிப் பின்னான சூழ்நிலையில் மகிந்த ராஜபக்சவுக்குப் பின்னால் தமது ஆதரவை எறிந்திருப்பின் இன்றைக்கும் தொடரும் குழப்பம் எப்போதோ முற்றுப்பெற்றிருக்கும். எனினும் ஒக்ரோபர் 26 இல் நிகழ்ந்த குழப்பத்தை ஜனநாயக விரோதப் போக்கென்று அறிக்கையிட்ட கூட்டமைப்புத் தொடர்ந்தும் அந்த நிலைப்பாட் டினை அடியொற்றி செயற்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைத் தொடரில் அது தனது உறுப்பினர் ஒருவரை பறிகொடுத்த நிலைவரமும் கவனத்துகுரியது.

### முந்திக்கொண்டு தட்டிக்கேட்ட கூட்டமைப்பு!


முதிர்வுக்கு முந்தியதாக நாடாளுமன்றத்தைக் கலைக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பரிசோதிக்காமல் அரச தலைவர் களத்தில் இறங்கிய விதத்தினை நீதித்துறையின் முன் கேள்விக்குட்படுத்த துணிந்த மனுதாரர்களுள் கூட்டமைப்பு முன்னிடத்தினை வகித்திருந்தது. குறித்த விடயத்தை உயர்நீதிமன்றத்திடம் பாரப்படுத்தியதும் அது தொடர்பில் முதலில் இடைக்காலத் தடையும் பின்னர் இப்போது சட்டவிரோதம் என இறுதி முடிவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கை, தோன்றியுள்ள குழப்பத்தைக் கால நீடிப்பு செய்யும் ஒரு செயற்பாடாக தோற்றமளிப்பினும் தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளுக்கு தாம் அமைதியாக அமையமாட்டோம் என்பதை உரக்கச் சொன்னது.

ஒக்ரோபர் 26க்கு முந்தைய நிலைவரத்தினை திருப்பு




பிரதேச வாரிக்கட்சியாகவும் ஒரே ஓர் இனக்குழுமத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாகவும் கூட்டமைப்பு அடையாளப்படுத்தப்பட்டாலும், கொழும்பு அரசியல் தளத்தில் அதனது வகிபாகம் இப்போதைய நிலைவரத்தில் பிரகாசமானதாக விளங்குகின்றது என்பதே உண்மை.

வதே மெலெழுந்திருக்கும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வெனக் கருதும் கூட்டமைப்பு, முதலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தது. அதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியால் தலைமை அமைச்சராக அமர்த்தப்படவிரும்பும் நபர் தொடர்பிலான தீர்மானம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இப்போது வெளிப்படையாக ரணிலை ஆதரித்து வாக்களித்திருக்கிறது. அது, பொதுஜன பெரமுன தரப்பினரின் சினத்தை பரிசாகப் பெற்றிருக்கிறது. அவர்கள், கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான புதிய ஒப்பந்தங்கள் தொடர்பில் தமது படைப்பாற்றல் திறனை ஈடுபடுத்தியுள்ளனர். பிரதேச வாரிக்கட்சியாகவும் ஒரே ஓர் இனக்குழுமத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாகவும் கூட்டமைப்பு அடையாளப்படுத்தப்பட்டாலும், கொழும்பு அரசியல் தளத்தில் அதனது வகிபாகம் இப்போதைய நிலைவரத்தில் பிரகாசமானதாக விளங்குகின்றது என்பதே உண்மை.



நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான ஆகக்குறைந்த 113 பேர் என்கிற கணக்கைக் காட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தங்கியிருக்கிற நிலைவரம் ரணிலுக்கு ஏற்பட்டிருக்கிறது. ரணிலுக்குப் பச்சைக்கொடி காட்டி அவர் தலைமையிலான அரசுக்கு ஆதரவு கொடுத்ததன் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுக்கட்சி நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.



நித்திய சுகம் 403

உடலே கோயில்

# நீரிழிவு நோய் தொடர்பான உண்மைகளும் தவறான கருத்துக்களும்

எம்.அரவிந்தன்



நீரிழிவுநோய்மற்றும்அதன்சிகிச்சை முறை தொடர்பாக எம்மவர்கள் மத்தியிலே பல தவறான அபிப்பிராயங்கள் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

**தவறான கருத்து:** நீரிழிவு நோய் தொடர்பான பரிசோதனைகளை 40 வயது கடந்த பின்னரே மேற்கொள்ள வேண்டும்.

**உண்மை நிலவரம்:** நீரிழிவு நோயானது இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இள வயதிலேயே ஏற்படும் அபாயம் அதிகமாகும். எனவே,நீரிழிவுஏற்படுவதற்கானஅபாய அறிகுறிஉள்ளவர்கள்(உடல்பருமனாக இருத்தல், நெருங்கிய குடும்ப உறவினர்களுக்கு நீரிழிவு இருத்தல், நீரிழிவு நோய்க்கானஅறிகுறிகள்இருத்தல்) இள வயதிலேயே நீரிழிவு நோய் இருக்கின்றதா,இல்லையாஎன்பதைக்கண்டறிந்து கொள்வது அவசியமாகும்.

==========

**தவறான கருத்து:** நீரிழிவு நோயானது ஒருவருக்கு குணங்குறிகளுடன் மாத்திரமே வெளிப்படுகின்றது.

**உண்மை நிலவரம்:** நீரிழிவு நோயானது பொதுவாக சிறுநீர் வெளியேறுதல், அடிக்கடி அதிகளவில் தாகம், பசிமற்றும் உடல் மெலிவடைதல் போன்ற குணங்குறிகளுடனேயே வெளிப்படுகிறது. எனினும் நீரிழிவு நோயானது எந்தவொரு அறிகுறிகள்இன்றியும்ஒருவருக்குஏற்படலாம். எனவேதான் நீரிழிவு நோய் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பது மிகவும் அவசியமாகும். எமது நாட்டைப் பொறுத்தவரை 35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் நீரிழிவு நோய் இருக்கின்றதா அல்லது இல்லையாஎனப்பரிசோதித்துப்பார்ப்பது மிகவும் அவசியமாகும். எனினும் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான அபாய அறிகுறிகள் உள்ளவர்களும், நீரிழிவு நோய்க்கான குணங்குறி கள் உள்ளவர்களும் மிக இள வயதிலேயே இந்தப் பரிசோதனையை மேற்கொள்வது அவசியமாகும்.

==========

**தவறான கருத்து:** நீரிழிவு நோயானது பணக்காரர்களுக்கே பொதுவாக ஏற்படுகின்ற நோயாகும்.

**உண்மை நிலவரம்:** உலகளாவிய ரீதியில் 2/3 வீதமான நீரிழிவு நோயாளர்கள் வளர்முகநாடுகளிலேயேகாணப்படுகின்றனர். நீரிழிவுநோயானதுவர்க்க பேதமின்றி அனைவரையும் தாக்குகின்ற ஒரு நோயாகும்.

==========

**தவறான கருத்து:** நீரிழிவுநோயானது இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்பதைக் கண்டறிவதை இயன்றவரை பிற்போடுவது நல்லது. நீரிழிவு நோய் இருக்கின்றதா என்பதை ஆரம்பித்திலேயே கண்டறிந்தால் தேவையின்றிப் பல பிரச்சினைகள் ஏற்படுவதோடு மன உழைச்சலும் ஏற்படலாம்.

**உண்மை நிலவரம்:** நீரிழிவு நோய் ஒருவருக்கு இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்பதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொண்டால், அதற்குரிய விதத்தில் உணவுப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு மருத்துவ ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொண்டு அதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். இதனூடே நீரிழிவால் ஏற்படக்கூடியநீண்டகாலப்பாதிப்புக்களைதவிர்க்கவோ அல்லது பிற்போடவோ முடியும். நீரிழிவு நோயானது கண்டறிப்படாது உரிய சிகிச்சை வழங்கப்படாதவிடத்து, 'கண் குருடாதல், சிறுநீரகம்செயலிழந்து போதல்,நரம்புத்தொகுதிப்பாதிப்புமற்றும் மாரடைப்பு' போன்ற பிரச்சினைகள் ஏற்பட நேரிடலாம்.

==========

**தவறான கருத்து:** நீரிழிவு நோய் கண்டறியப்பட்ட ஒருவருக்கு வழங்கப்படும் "மெற்போமின்" குளிசையால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுகிறது.

**உண்மை நிலவரம்:** இது எம்மவரிடையே இருக்கின்ற தவிர்க்கப்பட வேண்டிய தவறான கருத்தாகும். பன்னாட்டளவில் நீரிழிவுநோயாளர்ஒருவருக்குவழங்கப்படுகின்ற முதல்தர மருந்து "மெற்போமின்" ஆகும்.இது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துவதோடு,உடல்பருமனானவர்களின்உடல் நிறையைக் குறைக்க உதவுகின்றது.

ஒருகுறிப்பிட்டஅளவுக்குச்சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைந்தவர்களுக்கு மாத்திரம்மெற்போமின்மருந்தின் அளவைக் குறைக்கவோ, நிறுத்தவோ வேண்டி ஏற்படுகின்றது. நீரிழிவு நோயாளியொருவருக்குக் குறிப்பிட்ட காலத்துக்கொரு முறைசிறுநீரகப்பாதிப்புஏற்பட்டுள்ளதா?, இல்லையா? என்பதைக் கண்டறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

==========

**தவறான கருத்து** : நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஆங்கில மருந்துகளைத் தவிர்த்து "கசாயம்" போன்ற மருந்துகளை உள்ளெடுப்பதே சிறந்ததாகும்.

**உண்மை நிலவரம்:** பன்னாட்டளவில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு "ஆங்கில மருந்துகள்" ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டேபயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்தில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகின்றோம். அதை இல்லாமல் விரட்டி விடுகிறோம் என்ற பெயரில் பலவிதமான "கசாயங்களும்" அங்கீகரிக்கப்படாத மருந்துகளும் சில நீரிழிவு நோயாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

எவ்வளவோ பணத்தைச் செலவழித்துப் பெறப்படும் இவ்வகையான மருந்துகளின் உள்ளடக்கம் என்ன என்பது பற்றியோ, அதனால் எற்படுகின்ற நீண்ட காலப்பாதிப்புகள்என்னஎன்பதுபற்றியோ ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

எனவே நீரிழிவு நோய் தொடர்பாகப் பயிற்சி பெறாத 'போலி மருத்துவர்களையோ' அல்லது 'போலி மருந்துகளையோ' உள்ளெடுப்பதைத் தவிர்ப்பது மிகவும் அவசியமாகும்.

============

**தவறான கருத்து:** நீரிழிவு நோயாளர் ஒருவர் ஆட்டா மா, ஓட்ஸ் போன்றவற்றையே அதிகமாக உண்ண வேண்டும்.

**உண்மை நிலவரம்:** நீரிழிவுநோயாளியொருவரின் உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பாகபலவிதமானதப்பபிப்பிராயங்கள் எமது மக்கள் மத்தியில் உள்ளன.

நீரிழிவு நோயாளியொருவர் சீனிச் சத்து நிறைந்த உணவுப் பதார்த்தங்களைத் தவிர்த்து, மாச்சத்து அதிகமாக உள்ள உணவுகளைக் குறைத்து உண்பது மிக அவசியமானதாகும்.

எமது மக்கள் மத்தியில் அரிசி மா, ஆட்டா மாசேர்ந்தஉணவுஎன்றால்எவ்வளவும் உண்ணலாம் என்ற பிழையான எண்ணக் கருத்து உள்ளது.

எந்தவொருமாச்சத்துள்ளஉணவையும் குறைவாக உண்பதே நல்லது. நீரிழிவு நோயாளியொருவரின் உணவுத் தட்டில் கால்பங்குக்கு மேற்படாத மாச்சத்தை உள்ளெடுக்க வேண்டும். "ஓட்ஸ்" போன்றவற்றில்நார்த்தன்மைஉள்ளபோதிலும் அதிகளவுமாச்சத்தும்காணப்படுகின்றது. எனவேஎமக்குஇயற்கையில்கிடைக்கக் கூடிய, மலிவான எவ்வளவோ பிரதியீடானஉணவுகள்கிடைக்கின்றன. இது சம்பந்தமான விவரங்களை உங்கள் குடும்ப மருத்துவரிடமிருந்துஅறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்.

==========

**தவறான கருத்து:** நீரிழிவு நோயாளியொருவருக்கு குருதியில் கொலஸ்ரோலின் அளவு குறைவடையும்போது கொலஸ்ரோல் மருந்தை நிறுத்துவது அவசியமாகும்.

**உண்மை நிலவரம்:** நீரிழிவுநோயாளியொருவருக்கு மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகும். எனவே நீரிழிவு நோயளியொருவரின் "கொலஸ்ரோல்" அளவைக் கட்டுப்பட்டினுள் வைத்திருப்பது மிகவும் அவசியமானதாகும். 40 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயாளியொருவருக்கு "கொலஸ்ரோல் அளவு" சாதாரணமாக இருந்தாலும், கொலஸ்ரோல் மருந்தை உள்ளெடுப்பது அவசியமாகும்.

40வயதுக்குக் குறைந்த நீரிழிவு நோயாளியொருவருக்கு மருத்துவரின் ஆலோசனைப்படி தேவையேற்படின் "கொலஸ்ரோல்' மருந்தை உள்ளெடுக்க வேண்டியிருக்கும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களை உங்கள் குடும்ப மருத்துவரிடமிருந்து அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

============

**தவறான கருத்து:** நீரிழிவு நோயாளியொருவருக்கு "இன்சுலின்" ஊசி மருந்து போடுவதை இயன்றளவு தவிர்த்துப் பிற்போடுவது அவசியமாகும்.

**உண்மை நிலவரம்:** நீரிழிவு 'வகை-2' நோயாளருக்கும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் குளிசை மருந்துகள் தொழிற்பட முடியாதநிலைமைஏற்படுகின்றது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்குஇன்சுலின்மருந்தே மிகவும் அவசியமானதாகும்.

மேலைத்தேய நாடுகளைப் போன்று, நாமும் இன்சுலின் பயன்பாட்டை உரிய காலத்தில் ஆரம்பித்தால் நீரிழிவால் ஏற்படுகின்ற நீண்டகாலப் பாதிப்புக்களைத் தவிர்க்கவோஅல்லதுபிற்போடவோமுடியும்.

இன்சுலின் மருந்துப் பயன்பாடு மிகவும் இலகுவானதாகும். இது தொடர்பான விளக்கங்களை மருத்துவரிடமிருந்தோ அல்லது தாதியரிடமிருந்தோ பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மேற்குறிப்பிட்ட பல்வேறு தவறான எண்ணக் கருத்துக்களைக் களைந்து கொள்வதன் மூலம் நீரிழிவு நோயை நாம் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கக் கூடியதாக இருக்கும்.





***கட்டுரையாளர்:***
***நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர்,***
***யாழ்.போதனா மருத்துவமனை.***

# இறைவன் இலங்கைத் தீவை பாதுகாத்து வழிநடத்துவாராக

## திருவருகைக்கால சுற்றுமடலில் யாழ்.ஆயர்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தம் செய்யும் காலமான திருவருகைக் காலம் பற்றி இறைமக்களுக்கு விடுத்துள்ள திருவருகைக்கால சுற்றுமடல் பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது. ஓர் ஆண்டில் வருகின்ற சிறப்புக் காலமான கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு ஆயத்தம் செய்யும் காலமான திருவருகைக் காலம் மற்றும் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவுக்கு ஆயத்தம் செய்யும் காலமான தவக் காலம் ஆகியவற்றுக்கு இவ்வாறான சுற்றுமடல்கள் வெளிவருவது வழக்கம்.



**ஆண்டவராகிய இயேசுவே வாரும்**

கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே என விளிக்கும் ஆயர் தனது சுற்றுமடலில் தெரிவித்ததாவது: மீண்டுமொரு திருவருகைக் காலத்தோடு ஒரு புதியதொரு திருவழிபாட்டு ஆண்டில் கால் பதிக்கின்றோம். எங்கள் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவில் இறைவன் வெளிப்படுத்திய மீட்பின் மறைபொருளை ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டிலும் முழுமையாக வாழ்கின்றோம். நாம் ஆரம்பிக்கும் திருவழிபாட்டு ஆண்டு வெற்றுச் சடங்குகளோடு கடந்து போகும் ஒரு வருடமாக அமையாமல் மீட்பின் செயல்முறையில் நாம் முழுமையாகப் பங்குபற்றி ஆன்மிக ரீதியாக பயன்பெறுகின்ற காலமாக அமைய வேண்டும். மீட்புத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகிய இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புக்கு தகுந்த விதத்தில் ஆயத்தம் செய்ய திருவருகைக்காலம் அழைப்பு விடுகின்றது. இறந்த காலத்தில் நிகழ்ந்த இயேசுவின் திருவருகையை நினைவு கூர்ந்து வரவிருக்கின்ற இரண்டாம் வருகையை எதிர்நோக்கி இறைவார்த்தை அருளடையாளங்கள் வழியாகவும் ஏழைஎளியவர் துன்புறுபவர் வடிவிலும் அடையாளம் கண்டுவாழ திருவருகைக் காலம் அழைக்கிறது. ஆண்டவராகிய இயேசுவே வாரும் என்கின்ற தொடக்க கிறிஸ்தவர்களின் வேண்டுதல் எமது நாவுகளிலும் இந்தக் காலத்தில் ஓங்கி ஒலிப்பதாக.

இன்றைய நாட்டின் குழப்பநிலை

அண்மை நாள்களாக நாட்டில் எழுந்துள்ள அரசியல் சிக்கல் அனைவரினதும் கவலையையும் கரிசனையையும் ஈர்த்துள்ளது. அதிகாரம் இருந்தால் சட்டத்தை கையிலெடுத்துக் கொள்ளலாம் என்ற போக்கின் தொடர் வளர்ச்சி நிலையானது நாட்டின் அதியுயர் சட்டமாகிய அரசமைப்பையே கையிலெடுத்துக் கொள்ளும் மனப்பாங்கையும் நாடாளுமன்றை கேலிக்குள்ளாக்கி நாட்டின் நிர்வாகத்தையே முடங்கச் செய்து ஜனநாயக விழுமியங்களை கேள்விக்குள்ளாக்கும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. தீமையிலிருந்து நன்மையை வருவிக்க வல்லவர் இறைவன் என்பது வேதம் எமக்குக் கற்றுத் தரும் பாடம். ஒவ்வொரு சவாலையும் எதிர்காலத்திற்குரிய சந்தர்ப்பங்களாக மாற்றித் தருபவர் இறைவன். ஆகவே இந்த நாள்களில் அவரிடம் நாம் உருக்கமாக மன்றாடுவோம். அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை மீட்பின் அடையாளமாக மாற்றிய இறைவன் எமது நாட்டையும் இன்றுள்ள அவல நிலையிலிருந்து மீட்டு வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு தளராது வேண்டுவோம்.

**2018-இளையோர் ஆண்டு**

நடப்பாண்டை இளையோர் ஆண்டாக அறிவிப்புச் செய்திருந்தோம். அந்த ஆண்டிலேயே பங்குகளிலும் மறைக் கோட்டங்களிலும் மறைமாவட்ட மட்டத்திலும் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. இந்த ஆண்டை இளையோருக்கு பயனுள்ள ஆண்டாக பயன்படுத்த முயற்சிகள் எடுத்த அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் அவர்களுக்கு ஆன்மிக உளவியல் பலம் தேவைப்படுகிறது. இளையோரை வளப்படுத்துவது எதிர்காலத்தை வளப்படுத்தவதாகும். எதிர்வரும் ஜனவரி 12ஆம் திகதி இளையோர் ஆண்டை முடிவுறுத்தி அழைத்தல் ஆண்டை ஆரம்பிக்கவுள்ளோம்.

**2019-அழைத்தல் ஆண்டு**

இறை அழைத்தல் என்பதுமே குருத்துவ துறவற அழைப்புக்களைப் பற்றிமட்டுமே நாங்கள் சிந்திப்பதுண்டு. பொது நிலை அழைப்பை நாம் அழைப்பாகவே கருதுவதில்லை. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கருத்துப்படி எந்த நிலையிலும் பணிப் பொறுப்பிலும் இருப்பினும் கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் அனைவரும் கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கும் அன்பின் நிறைவுக்கும் அழைக்கப் பெற்றிருக்கிறார்கள் (திருவழிபாடு 40) ஆகவே இந்த ஆண்டிலே பொது நிலை அழைப்பை ஆழப்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம். இன்று திருச்சபையில் மிகப் பெரும்பான்மையினராக இருக்கும் பொது நிலையினர் திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் செயற்பாடுடனான பங்களிப்பை வழங்குவதைக் காண்பது அரிதாகவே உள்ளது. திருச்சபை ஆட்சியாளர்களோடு கூட எங்கு உண்மையான பொது நிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ அங்கு திருச்சபை உண்மையாகவே நிறுவப்படவுமில்லை. முழுமையாக வாழப்படவுமில்லை. மனிதர் நடுவே கிறிஸ்துவின் அடையாளமாக துலங்கவுமில்லை எனச் சொல்லலாம் என திருச்சபையின் நற்செய்திப் பணி என்னும் சங்க ஏடு (இலக்கம் 21) குறிப்பிடுகிறது. திருச்சபையில் பொதுநிலை அழைப்பின் முக்கியத்துவம் பற்றி இதைவிட ஆணித்தரமாக குறிப்பிட முடியாது என்பது உண்மை. ஆகவே இந்த ஆண்டிலே திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் பொதுநிலையினரின் பங்கேற்பை அதிகரிக்கக் கூடிய செயற்திட்டங்களை முன்னெடுக்குமாறு பங்குத் தந்தையர்களையும் ஆலய அருட்பணிச் சபையினரையும் ஆணைக்குழுக்களையும் அன்போடு பணிக்கின்றேன்.

**பொதுநிலையினரின் பங்கை அதிகரிக்க பக்திச் சபைகள்**




பாரம்பரியமாக திருச்சபையில் பொது நிலையினரின் பங்களிப்பை அதிகரிக்க பக்திச் சபைகள் பெரும்பங்காற்றி வருகின்றன. மரியாயின் சேனை. வின்சன்டிபோல் சபை. திருப்பாலத்துவ சபை போன்றவை ஆன்மிகத்தையும் பணியையும் ஒருங்கே பொதுநிலையினர் மத்தியில் வளர்க்கத் தக்கவை. இல்லாத பங்குகளில் இவற்றை உருவாக்குவதும் தளர்ந்து போயிருக்கக் கூடியபங்குகளில் இவற்றுக்கு புத்துயிர் அளிப்பதும் அவசியமாகும். மேலும் பொருத்தமானதும் பயன்தரத்தக்கதுமான புதிய பக்திச் சபைகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அதிகமான பொதுநிலையினரை பங்கேற்பு நிலைக்கு உயர்த்துவதற்கு அன்பியங்களை அறிமுகப்படுத்துதல் மிகச் சிறந்த வழியாகும். சில காலங்களின் முன் உற்சாகமாக எமது பங்குகளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அன்பிய வாழ்வு படிப்படியாக தளர்வடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. அயலிலுள்ள கிறிஸ்தவர்கள் இணைந்து இறைவார்த்தையின் ஒளியிலும் இறைவேண்டலின் துணையிலும் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள அன்பியங்கள் வழிசமைக்கின்றன. ஆகவே பின்னடைவுக்கான காரணிகளை நுணுகி ஆராய்ந்து அவற்றை நிவர்த்திசெய்து அன்பியங்களை மீளஎழுச்சிபெற உழைப்பது அருள்பணியாளர்களின் முக்கிய கடமையாகும். எமது மேய்ப்புப்பணி மாநாட்டில் முன்னுரிமைப் பணியாக தெரிவுசெய்யப்பட்ட அன்பிய வாழ்வை கட்டியெழுப்புவது எமது கடமையாகும். ஆகவே சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பையும் இந்த விடயத்தில் கவனத்தைக் குவிக்குமாறு பணிக்கின்றேன்.

**அருள்பணிப் பேரவைகளை உருவாக்க வேண்டும்**

ஆலயத் திருச்சபை, பங்கு, மறைக்கோட்டம், மறைமாவட்டம் என்கின்ற நான்கு நிலைகளில் அருள்பணிப் பேரவைகளை உருவாக்க வேண்டும் என்பது எமது மறைமாவட்ட திட்டமாகும். பல ஆலயத் திருச்சபைகளில் இவை உருவாக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன. ஆனால் பங்குமட்ட மறைக்கோட்டமட்ட அருள்பணிப் பேரவைகள் போதியளவு சிறப்பாக இயங்கவில்லை. பங்குத் தந்தையர்களும் மறைக்கோட்ட முதல்வர்களும் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து தமது பங்குகளிலும் மறைக் கோட்டங்களிலும் பேரவைகளை உருவாக்கி வழிநடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். எல்லா மறைக் கோட்டங்களிலும் பேரவைகள் உருவாகியிருந்தாலே மறைமாவட்ட பேரவையை உருவாக்க முடியும். பொதுநிலையினருக்கு சிறந்த பங்கேற்பு வாய்ப்பை ஏற்படுத்தும் அருள் பணிப் பேரவைகளை இந்த ஆண்டிலே சிறப்பாக இயக்குவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

பொதுநிலையினர் தமது மாண்பை உணர்ந்து திருச்சபையில் பணியாற்றுவதற்கு நற்கருணைப் பணியாளர்களை உருவாக்க வேண்டுமென நாம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகிறோம். ஆயினும் பல பங்குகளில் பொதுநிலையினர் தமக்குரிய மாண்பை உணராததனாலே இந்த விடயத்தில் தயக்கம் காட்டுகின்றனர். ஆகவே தமக்கு தரப்படும் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர்களை தமது பங்குகளில் உருவாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொதுநிலையினர் உருவாக்கம்**

பொதுநிலையினர் தமக்கே உரித்தான வகையில் புனிதப்படுத்தும், போதிக்கும், வழிநடத்தும் முப்பணிகளில் பங்கெடுக்க அவர்களுக்கு தகுந்த உருவாக்கம் தேவைப்படுகிறது. ஆகவே பொதுநிலையினர் கழகம், புனித



யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி போன்றவை இந்த ஆண்டில் சிறப்புத் திட்டங்களை வகுத்து பொதுநிலையினர் இறையறிவில் முன்னேறச் செயற்பட வேண்டிக் கொள்கிறேன்.

“உலகுசார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு உழைக்குங்கால் அவற்றைக் கடவுளின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்க தேடுவது தங்களது தனிப்பட்ட அழைப்பால் பொதுநிலையினரைச் சார்ந்தது (திருச்சபை31)” இவ்வாறு கூறும் இரண்டாம் வத்திக்கான் சங்கம், குடும்பம், பணியிடம், சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு வாழ்நிலைகள் என்பவற்றில் பொதுநிலையினர் கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து இறையாட்சியை அழைக்க உழைப்பதன் மூலம் தமது நற்செய்தியறிவிப்பு பணியை நிறைவேற்ற வேண்டுமென அழைப்பு விடுக்கிறது. ஆகவே பொதுநிலையினரின் எழுச்சியே திருச்சபையின் வளர்ச்சி என்பதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டுக்குரிய செயல் திட்டங்களை

ன். பிறக்க இருக்கும் பாலக இயேசு எம்மை வழிநடத்துவாராக. அன்னை மரியின் பரிந்துரை எமது அனைத்துப் பணிகளிலும் துணையிருப்பதாக-என 2018ஆம் ஆண்டு கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு ஆயத்தம் செய்யும் காலமான திருவருகைக் காலத்திற்குரிய சுற்றுமடலை யாழ் ஆயர் நிறைவு செய்கிறார்.

விளையாட்டு


பிரகாஸ்

# கிங்ஸ் லெவன் பஞ்சாப் பயிற்சியாளராக கம்பீர்?



கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற கவுதம் கம்பீர், தனது இரண்டாவது இன்னிங்ஸை ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்பின் பயிற்சியாளராகத் தொடங்க உள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய அணியில்கடந்த16 ஆண்டுகளாகஇடம்பெற்றுவிளையாடிய கவுதம் கம்பீர், கடந்த வாரம் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் முடிவை அறிவித்தார். இந்திய அணிக்காக 58 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள கம்பீர் 4 ஆயிரத்து 154 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இதில் 9 சதங்கள், 22 அரைச் சதங்கள் என்பன அடங்குகின்றன. 147 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள கம்பீர் 5 ஆயிரத்து 238 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இதில் 11 சதங்களும், 34 அரைச் சதங்களும் அடங்குகின்றன. தனது ஓய்வுக்குப்பின் கருத்துத் தெரிவித்த கம்பீர் "பயிற்சியாளராக விரும்புகிறேன், வர்ணனையாளராக விரும்பவில்லை" என்று தெரிவித்திருந்தார். இந்த நிலையில், ஐ.பி.எல். தொடரில் சிறப்பாகச் செயல்பட்டும் இன்னும் கிண்ணம் வெல்ல முடியாத கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு பயிற்சியாளராகச் செல்ல கம்பீர் திட்டமிட்டுள்ளார் என்று தெரிகிறது. கம்பீரின் ஓய்வுக்குப்பின் தனது கீச்சகத்தில் வாழ்த்துத் தெரிவித்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, விரைவில் அடுத்த இன்னிங்ஸ் தொடங்கட்டும், எதிர்காலம் சிறக்க வாழ்த்துக்கள் என்று தெரிவித்திருந்தது. அதற்கு பதில் தெரிவித்த கம்பீர், என்னை வாழ்த்திய கிங்ஸ் லெவன் அணிக்கு நன்றி, விரைவில் சந்திப்போம் என்று தெரிவித்திருந்தார். அதற்குப் பதில் தெரிவித்த கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, உங்களை நாங்களும், எங்களின் சிங்கங்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன என்று தெரிவித்தது.



## ஆஸி. ரென்னிஸ் ஜனவரி 14இல் ஆரம்பமாகிறது!

ப்ன்னாட்டு அந்தஸ்து பெற்ற ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர் ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடர்களாக நான்கு தொடர்கள் உள்ளன. ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர், அமெரிக்கப்பகிரங்கத்தொடர்,விம்பிள்டன் தொடர், பிரென்ஞ்தொடர்என்பனவேஅந்தப் பகிரங்கத் தொடர்களாகும். ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர்தான் வருடத்தில் நடைபெறும் முதலாவது பகிரங்கத் தொடராக அமைந்துள்ளது. இந்தத் தொடருடன்தான் ஏனைய தொடர்களும் ஆரம்பமாகின்றன.

## பேர்த் பேசுபொருளாவது ஏன்?

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்தை விட ஆட்டம் நடைபெறும் ஆடுகளம் பற்றிய பேச்சுக்கள்தான் தற்போது உச்சக்கட்ட அளவில் உள்ளன.

பேர்த் ஆடுகளம் உலகின் அதிவேக ஆடுகளம் என்று அறியப்படுகிறது. இந்த ஆடுகளத்தில் ஒரு இன்ஞ் அளவுக்குப் புற்கள் வளர விடப்பட்டிருக்கும். இதனால் பந்தில் இயல்புக்கு அதிகமான சறுக்கல் தன்மை, மேலெழும்பல், உட்திரும்பல், வெளித்திரும்பல் என்பன இருக்கும். பேர்த் ஆடுகளத்தின் இயல்பே இவ்வாறுதான். இவ்வாறிருக்கையில் இந்த ஆடுகளம் தற்போது மேலும் மெருகேற்றப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் இருந்து மண் கொண்டுசெல்லப்பட்டு பேர்த் ஆடுகளம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த ஆடுளம் மேலும் அபாயகரமானதாக விளங்குகிறது. இந்த ஆடுகளத்தில்தான் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் தற்போது விளையாடி வருகின்றன.





இந்திய அணியின் இளம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷா, தனது உடல்தகுதியை தற்போது நிரூபித்துள்ளார். இதனால் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஷா களமிறங்குவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

## 2020 ஆசிய கிண்ணத்தை நடத்துகிறது பாகிஸ்தான்!

2020ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணத்தை நடத்தும் உரிமத்தைப் பெற்றது பாகிஸ்தான்.


ஆசியக் கிண்ணத் தொடர் அண்மையில் நடைபெற்றது. இந்தத் தொடர் இந்தியாவில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் பாகிஸ்தான் இந்தியாவுக்குச்செல்வதற்கு மறுப்புத் தெரிவித்ததால் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றது. இதையடுத்து 2020ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணத் தொடரை நடத்தும் உரிமம் தற்போது பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தியா பாகிஸ்தானுக்குச் செல்ல கட்டாயம் மறுப்புத் தெரிவிக்கும். இதனால் 2020ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணத் தொடரும் ஐக்கிய அரபுஇராச்சியத்திலேயேநடைபெறவாய்ப்புள்ளதுஎன்றுகருதப்படுகிறது.



# மரண அறிவித்தல்

## இளையதம்பி சந்திரன்

*(உரிமையாளர், மருதடி விநாயகர் ரெக்ஸ், 446, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.)*



**தோற்றம்**
**23.05.1953**

**மறைவு**
**14.12.2018**

சங்கானை ஓடக்கரையைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட இளைய தம்பி சந்திரன் நேற்றுமுன்தினம் (14.12.2018) வெள்ளிக்கிழமை மதியம் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் கலஞ்சென்ற தம்பிராசா செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமக னும் ஜெயமலரின் அன்புக்கணவரும் தர்சனன், சயந்தன், சர்மிலன், சர்மியா, சஜிந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் துசியந்தி, மயூரி ஆகியோரின் அன்புமாமனும் தரணிகா. கரிஸ், தனுஸ்கா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சுப்பிரமணியம், சிவபாக்கியம், அருமைநாயகம் மற்றும் மயில்வாகனம், செல்வநாயகி, இராசலெட்சுமி, ஞானலெட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரரும் சந்திரமலர், இந்திரமலர், ரஞ்சிதமலர், செல்வமலர் ஆகி யோரின் மைத்துனரும் ஜெயராஜசிங்கம் (சந்திரன்), கலாவதி (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 242 5223, 077 978 9832, 077 6854 831, 076 8463 850**

தகவல்
**குடும்பத்தினர்**

# புதிய அமைச்சரவையைத் தவிர வேறு வழியில்லை

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

புதிய அமைச்சரவையை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அரச சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. அதற்கு எதிராக மகிந்த தரப்பு உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தது. மகிந்த தரப்பின் மேன்முறையீட்டை கடந்த வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்று நிரா கரித்ததுடன், அடுத்த மாதம்வரை வழக்கை ஒத்தி வைத்தது. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன புதிய அமைச்சரவையை உடனடியாக நியமிக்க வேண்டும். மகிந்த தரப்புத் தவிர்ந்த மற்றொரு தரப்பை அமைச்சரவைக்கு நியமிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.(ந-5,10)






## வேலை ஆள் தேவை

புத்தகக் கடைக்கும், போட்டோக் கொப்பி அடிக்கவும் தெரிந்த / பழக விரும்பும் வேலை ஆள் தேவை.

077 209 6310 / 075 038 4092

## தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும் ரெஸ்ரோறன்ற் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர், சமையல் உதவியாளர், டெலிவரி போய் ஆகியோர் வேலைக்குத் தேவை.

077 735 2165

## வாடகைக்குண்டு

நாவலர் வீதியில் 1500 சதுர அடி கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

077 665 9736, 021 222 3479

## தேவை

தரமான ஒடியல், புழுக்கொடியல் தேவை. உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும். இடைத்தரகர் தேவை இல்லை. நல்ல விலை தரப்படும்.

தொடர்பு: 076 727 5846


# வருஷாப்திகமும் சமாராதனையும்



வேலணை சரவணை
பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோயில்
ஸ்தானீக குருவும், யாழ் அத்தியடி பிள்ளையார்
கோயில் முன்னாள் பிரதம குருவும் ஆகிய

**சிவஸ்ரீ**
**நாகலிங்கம் ஐயர்**
**யோகீஸ்வரக்குருக்கள்**

அவர்களுடைய ஓராண்டு
நிறைவினைமுன்னிட்டு
(வருஷாப்திகம்)
இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல்11.30 மணியளவில்
சிரார்த்தம் இல்லத்தில் நடைபெற்று
நூல் வெளியீடும், சமாராதனையும்,
தலைமையகம், சர்வதேச இந்துக்குருமார்
ஒன்றியம் (குருகுலம்) பருத்தித்துறை
வீதி, ஆனைப்பந்தியில் நடைபெறும்.
அந்தண சமூகத்தினர் குடும்ப
சகிதமாக கலந்துகொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**
433, 431, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 222 9450/
021 221 5529

# இராசையா சற்குணநாதன்



உரும்பிராய் மேற்கு உரும்பிராய் மூன்று கோயிலடியைச் சேர்ந்த இராசையா சற்குணநாதன் 14.12.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கேதாரகௌரியின் அன்புக் கணவரும் விஸ்ணுவர்த்தன், ராமகிருஸ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோவின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி - நவரட்ணம், வடிவாம்பிகை - சர்வானந்தம் மற்றும் ஜெயலக்ஸ்மி - தேவசிகாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் வேம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய், மூன்றுகோயிலடி.**
(CS 21828) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 016 6014**

# கனத்த நினைவுகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 07 . 06 . 1952



ஆண்டவன் அடியில் 06 . 01 . 2017

# அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் முகம் காணாது
நித்தம் புலம்புகின்றோம்
வருடங்கள் பல சென்றாலும்
நீங்கள் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருப்பீர்கள் !
உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தில் பசுமரத்தாணிபோல்
என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நீங்கா நினைவோடு

**219 நாவலர் வீதி,**
**பண்டாரிக்குளம், வவுனியா.**
(IN 8714) (14.17)
**குடும்பத்தினர்.**



# திருமதி செல்லம்மா பரமானந்தம்

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பரமானந்தம் கடந்த 13.12.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பரமானந்தம் ஆகியோரின் அன்புத் துணைவியும், வாகினி (பிரான்ஸ்), பங்கயன் (பிரான்ஸ்), பிரியவதனி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற தயாளன் (பிரான்ஸ்) மற்றும் ஆரணி (பிரான்ஸ்), உதயநேசன் (இலங்கை) ஆகியோரின் மாமியும், விதுஷன் (பிரான்ஸ்), அபிசாய் (பிரான்ஸ்), நிறோஜா, பானுஜா, அனோஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, தங்கமுத்து, அம்பலவாணர் (உரிமையாளர் இலட்சுமி பவான், கொழும்பு), கந்தப்பு மற்றும் நடராசா, காலஞ்சென்றவர்களான முத்தையா, சவுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மங்களஸேஸ்வரி, நாகம்மா சந்திரசேகரம் மற்றும் விசாலாட்சி (லண்டன்), காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சோமசுந்தரம், சிவயோகம் மற்றும் புவனேஸ்வரி, கிருஸ்ணவதி, முத்தையா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் கனகாம்பிகை (கனடா), பூபாலசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் சகலியும், காலஞ்சென்றவர்களான சதாமதேவா, நாகராசா மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 434 3866**
(cs.21838) (13.17)

# கண்ணீர் அஞ்சலி



**திருமதி யோகேஸ்வரி சிவராசா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**சிவா நறுமணப் பூங்கா**
**உரிமையாளரும், ஊழியர்களும்**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பேசி: 021 222 2567**

(IN/8723)(10)

# அறிவித்தல்

## காரைநகர் களபூமி சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

**காலம் : 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : முற்பகல் 10.00 மணிக்கு**
**இடம்:** J/42 கிராம சேவையாளர் நிலைய கட்டடம் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில், காரைநகர் கிழக்கு பிரதான வீதி களபூமி)

களபூமி சனசமூக நிலையம் 1990ஆம் ஆண்டுக்கு பின்னர் இயங்காத நிலையில் உள்ளதால் மீண்டும் இதனை களபூமி சனசமூக நிலையத்தினை 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு களபூமி J/42 கிராம சேவையாளர் நிலைய கட்டடத்தில் இயங்க வைப்பதற்கு களபூமி மக்களின் ஆதரவினை எதிர்பார்த்து உள்ளோம். ஆகையால் அன்றைய தினம் அனைவரும் வருகை தந்து ஒத்துழைப்பை வழங்குமாறு தாழ்மையுடன் அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:**
மறைந்த முன்னாள் களபூமி நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் மறைந்த களபூமி வாழ் மக்களின் நினைவாக அன்றைய தினம் மரக்கன்றுகள் வழங்கப்படும்.

**களபூமி வாழ் இளைஞர்கள்**

(CS/21829)(10)

# SharmilaTravels

TICKETS | HOTELS | HOLIDAYS | VISA | INSURANCE

## எமது நிறுவனத்தில்

- **Marketing Staff**
- **Ticketing Staff**

போன்ற வெற்றிடங்களுக்கு A/L சித்தியடைந்த ஆர்வமுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. Pettah@sharmilatravels.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

எமது நிறுவனத்தில் நியாயமான விலைக்கழிவுகளுடன் விமானப்பயணச்சீட்டுக்களை வழங்குவதுடன் குறைந்த கட்டணத்துடன் பயணச்சீட்டு திகதி மாற்றங்கள் மற்றும் சுற்றுலாவிசா (கட்டார், டுபாய், வியட்நாம், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், சீனா, மாலைதீவு) களும் சுற்றுலா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

**இந்தியா விசா பெற்றுக் கொடுத்தல்**

**Tourist Visa - 3 Months Visa - 3800/=**
**6 Months Visa - 5500/=**
**Medical Visa 2200/=**

தொடர்புகளுக்கு: **Sharmila Travels**
**289, Stanley Road, Jaffna.**
**021 222 0266 / 021 222 0267**

# British Business College

**BBCஇன் புதிய அனுமதிகள்**

BBC பாலர் பாடசாலையின் 20ஆம் வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன் 2019ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

Where Students Come First

BBC Early Learning Schools

சர்வதேச தரத்தினாலான Canada கல்லூரியின் பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

No Admission Fees
No Monthly Fees

**நடன வகுப்புக்கள்**



- பிரபல பரதநாட்டிய ஆசிரியரினால் நடாத்தப்படும் அனைத்து மாணவர்களுக்குமான பரதநாட்டிய வகுப்புக்கள்
- எமது யாழ் மற்றும் மானிப்பாய் வளாகங்கள்
- மாணவர்களின் வசதிக்கேற்ற நேரங்களில் வார மற்றும் வார இறுதி நாட்களில்

**2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2 + முதல் 3 வரை | 3 + முதல் 4 வரை | 3 + முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்

நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | கோப்பாய் | புத்தூர் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951

# நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி



**Discount**
**5,000/= to 50,000/=**

We Accepted MasterCard VISA


**நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.**

SATISFACTION 100% GUARANTEE

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் . கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.



**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**



வீடு . தொழிற்சாலை . உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.



**நீச்சல் தடாக வடிவமைப்பு**

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து . நிறுவி . பராமரித்துத் தரப்படும்.



# Everpure Hi-Tec (Pvt) Ltd.

Jaffna: No.341, K.K.S Road, Jaffna. Tel: 021 222 6888 | 077 362 6230 Kilinochchi: 677, A9 Road, Kilinochchi. Tel: 021 228 4888 | 075 3313302

TELESOON
MAKING GREAT THINGS POSSIBLE
Phone Shop & Textiles
Mega
Year End offers



10.11.2018 தொடக்கம் 31.12.2018 வரை நீங்கள் Telesoon இன் அனைத்து கிளைகளிலும் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு 10000/= மேற்பட்ட கொள்வனவுக்கும் குலுக்கல் முறையில் தேர்வுசெய்யப்படும் முதல் மூன்று வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.

அத்துடன் அனைத்து கொள்வனவுக்கும் 10% to 25% வரை விலைக்கழிவும் உண்டு.

1st Prize




Telesoon Textiles

2nd Prize



3rd Prize

3rd Prize
Telesoon GIFT VOUCHER 10000/=

Toys for Kids



Head Office
259C, Power House Road, Jaffna.
☎ 021 221 7995

Branch
First Floor Cargills Square Jaffna. ☎ 021 221 5793
K.K.S Road, Chunnakam. ☎ 021 224 1552
Telesoon and Jeyling - Chunnakam ☎ 071 190 7466



**மீள்குடியேற்ற வீடுகளை அமைப்பவர்களினதும் புதிதாக வீடுகளை அமைப்பவர்களினதும் அவதானத்திற்கு**

மேற்குறிப்பிட்ட படி வீடுகளை அமைக்கும் போது அவ்வீட்டுக் கூரைகளுக்கு உஷ்ணத்தை தவிர்த்து குளிர்ச்சியை தரக்கூடிய சுகாதார பாதுகாப்புடைய முக்கியமாக புற்றுநோயை உண்டு பண்ணாத 100% இயற்கை வளங்களைக் கொண்டு தயாரிக்கும் களிமண் கூரை ஓடுகளை பாவித்து பயன் பெறுங்கள்.

மேற்குறிப்பிட்ட கூரை ஓடுகளை வாங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.

01. நடமாடும் ஓடு வியாபாரிகளிடமிருந்து ஓடுகளை வாங்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் 2ஆம் 3ஆம் தர ஓடுகளை கலந்து விற்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

02. பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஓடு விற்பனை செய்யும் முகவர்கள் ஊடாக சிறந்த ஓடுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

03. தரம் 01 (No.01) ஓடுகள் வடமாகாணத்தில் 50.00 ரூபா ஆகவோ அல்லது அதற்கு மேலாகவோ உண்மையான விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் அதற்கு குறைவான விலையில் ஓடுகள் விற்பனை செய்பவர்களிடம் கவனமாக இருங்கள்.

04. நேரடியாக ஓட்டுத் தொழிற்சாலைகளுக்குச் சென்று தரமான ஓடுகளை நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

05. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் சங்கத்தை தொடர்பு கொண்டு நியாயமான விலைக்கு நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் ஓடுகளைப் பெற்றுக் கொள்வதனூடாக உங்கள் ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

**இது அகில இலங்கை களிமண் ஓடு உற்பத்தி தொழிற்சாலைகள் சங்கத்தினால் ஓடு நுகர்வோரை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் விழிப்புணர்வு.**

மேலதிக தொடர்புகளுக்கு :
**077 627 4117/ 077 756 4578/ 077 756 1548**

(CS 32172)(04.17)



Arunthathee
Online Matrimony | Wedding Magazine | Wedding Planner

மாற்று மோதிரம்

DECEMBER
28 29 30
CHELVA PALACE, JAFFNA

**திருமண கண்காட்சியும்**
அழகு சாதனப் பொருட்கள் மற்றும் புடவைகளின் மலிவு விற்பனையும்

BRIDAL SHOW COMPETITION
18 வயதிற்கு மேற்பட்டவர்கள்

மணபெண் முக அலங்காரம் (45 நிடத்தில்)
பதிவுக்கட்டணம் 2000/=
முதல் மூன்று வெற்றியார்களுக்கு தங்க பெண்டன் பரிசாக வழங்கப்படும்

December 29th மாலை 4.00 மணி முதல்
BRIDAL FASHION SHOW
பதிவுக்கட்டணம் 5000/=
அனைத்து மாவட்டங்களிலும் இருந்து பங்கு பற்றலாம்
தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்

Closing Date for Registration
23rd of December

Further information 076 182 8522

## மரண அறிவித்தல்



பிறப்பு 07 . 10 . 1934

இறப்பு 14 . 12 . 2018

### திருமதி தவரஞ்சிதமலர் பொன்ராசா

யாழ்ப்பாணம், கீரிமலை வீதி, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவரஞ்சிதமலர் பொன்ராசா 14.12.2018 வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்ராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr.கனகசிங்கத்தின் சகோதரியும் குலேந்திரராணி(கனடா), இரஞ்சிதராணி(ஜேர்மனி), குலசிங்கம்(ஜேர்மனி), ஜெயராசசிங்கம்(இலங்கை), துரைராசசிங்கம்(ஸ் ரீபன் - பிரான்ஸ்), இரட்ணசிங்கம்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சற்குணசிங்கம்(கனடா) காலஞ்சென்ற வசந்தகுமார்(ஜேர்மனி) மற்றும் குலதேவி(ஜேர்மனி), இராசமலர்(இலங்கை), ரூத்(பிரான்ஸ்), ஜெனித்தா(இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் போல்சனா - தர்சிகா, கிறிஸ் ரீனா, நிறோஜன், அஞ்சலி, அனோஜன், கிறிஸ் ரீனா, யூலியா, ஜொனாத்தன், ஜெசாந்தன், கிரிசாந்தன், ஜெசிக்கா, துஷானி, சுமன் - நிஷானி, விதுஷன், நிஷாந்தன், யதுஷன், சாமுவேல், நிவேதா, நிதுஷா, நிக்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜஸ்சுவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கீரிமலை வீதி,**
**சித்தன்கேணி.** (CS 21643) (14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**
**குலசிங்கம் (லிங்கம்)**
**ஜெயராசசிங்கம் (ஜெயம்)**

## மரண அறிவித்தல்



### திருமதி யோகேஸ்வரி சிவராஜா

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சிவராஜா 13.12.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், சிவராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரநாதன் - ருக்குமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவனேஸ்வரி (அராலி), மகேஸ்வரி (ஜேர்மனி), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), மகேந்திரன் (பிரான்ஸ்), அனுசியாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரஜீவ்குமார் (பிரான்ஸ்), சிவசகிலா, சர்மிளா, சிவதர்சினி, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபிகிருஸ்ணன், ரமேஸ்குமார், ஜனகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சகானா, லக் ஷனா, சந்தோஸ், தேவேஸ், ஜனுதிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி மத்தி,**
**வட்டுக்கோட்டை.** (CS/21821)(11,17)


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 893 5299, 0033 751 031 731 (மகன்)**

## மரண அறிவித்தல்

# கோவிந்தி முருகேசு சிவப்பிரகாசம்

*(முன்னாள் லிப்ரன் பிரதிநிதியாளர்)*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மணற்காடு, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தி முருகேசு சிவப்பிரகாசம் 14.12.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சவுந்தரத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவனேசன், சிவசம்பு மற்றும் சிவபாக்கியம்(மலேசியா), நவரட்ணம்(கனடா) காலஞ்சென்றவர்களான சிவஞானம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவானந்தன் (நொச்சிகாமம்), சிவகுமாரன் (A.R.M அரிசி ஆலை, சண்டிலிப்பாய்), சிவமலர் (ஆசிரியை -வவுனியா), சரவணபவன் (ஜேர்மனி), தேவமலர் (காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரன் (நவதானியம் ரேடேஸ், கிளிநொச்சி), கனகேஸ்வரன்(மல்லாவி), நாகேஸ்வரி(திருநெல்வேலி), கிருஸ்ணரூபி (யாழ்ப்பாணம்), சிவதர்சினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் நிஷாந்தன், சுலக் ஷன், விதுன், செந்தூரன், கபிலன், பவிதரன், கோபிதரன், ஹம்ஷிதரன், சாருகா, கிருஷா, மிதுஸ், தனோஸ், கேசனா, தனனிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மணற்காடு;**
**காரைநகர்.** (CS 21819) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 225 2051/ 072 785 0550 (சிவகுமாரன்)**

## பணம் இன்றி பணம் உழைக்க வழி வேண்டுமா ?

- வீட்டிலிருந்து பணம் உழைக்க வழிகாட்டுகின்றோம்.
- திருமணசேவை செய்பவர் ஆயின் வருமானத்தை அதிகரிக்க வழி காட்டுகின்றோம்.
- உறவுகளின் திருமணத்தை உடன் நிறைவேற்ற வழி காட்டுகின்றோம். பதிவுக் கட்டணம் இல்லை.
- மணமக்களின் பிறந்த ஆண்டு, மாதம், திகதி, நேரம் மட்டும் தரப்பட்டால் கணினியின் உதவியுடன் சாதகம் எழுதி பொருத்தம் பார்த்து முடிவு உடனுக்குடன் இலவசமாக தெரிவிக்கப்படும். (CS 21830)(04.17)

**076 170 2851**


## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்
**திரு.சி. திருவாகரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### கணபதிப்பிள்ளை சிவகுருநாதன்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
(CS 21843)(04.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் ஆறுமுகம் சிவநாயகி**
**(பவானி அம்மா)**
*திதி :வளர்பிறை நவமி*




தோற்றம் **09.04.1930**
மறைவு **27.12.2017**

ஆண்டு ஒன்று வந்தாலும்
அன்னையே நீங்கள் இருந்த இடம் எல்லாம்
இருள் ஆகிவிட்டதே அம்மா
எத்தனை தீபம் ஏற்றியும்
உங்கள் புன்னகை வெளிச்சம் என்னும் வரவில்லையே

என்றும் நினைவில்
**44/15, மணல்தரை வீதி, கந்தர்மடம்.**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.**
(CS 21727)(04.17)

ஓம் ஸ்ரீ விக்னேஸ்வராய நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசையா தங்கராசா (விஜிபத்தர்)

தோற்றம் **15.12.1939** மறைவு **27.12.2017**

**திதி: பூர்வபட்ச நவமி 16.12.2018**

ஆண்டு ஒன்றானதோ எம் குடும்பத் தலைவனைப் பிரிந்து
அன்புடன், பண்புடன் எம்மை வழி நடத்திய
எம் ஆருயிர் தெய்வமே!
எப்போது காண்போம் உம் இனிய முகத்தை!
உங்களை எந்நாளும் நினைத்து
ஆறாத்துயரினால் தவிக்கின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மாலுசந்தி அல்வாய் தெற்கு, அல்வாய்.**
(AS.874) (13.17)
**என்றும் நினைவில் குடும்பத்தினர்.**


மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.
**Jan.2019 முதல் வாரம் ஆரம்பம்.**

**NVQ Level Courses**
- Aluminum Fabricator ( Level-3 ) - 6 Months
- Draughts Person ( Level-4 ) – 1Year

**Diploma Course**
- Information and Communication Technology(ICT) – (8 Months Full Time)

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*
- Computer Application Assistant(CAA)-NVQ Level 3(Accredited)
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & Power-Point)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- AutoCAD 2D & 3D Modeling
- Computerized Accounting Packages – AccPAC, Tally & Quick-Book
- Computer Programming –JAVA and C++ Programming

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி - Refrigeration & Air-Conditioning Mechanic
- மின் இணைப்பும் நிர்மாணமும் - Electrical Wiring
- மோட்டார் வாகனம் திருத்துதல் - Motorcycle & Light Engine Mechanism

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
**(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Hostel & Sports**

For More Information : DIRECTOR
**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.
Tel : 0766967473/0213213139/0212250975
E-mail: ejcit@sltnet.lk


## கண்ணீர் அஞ்சலி

எமது கோயிலில் பரம்பரையாக பூமாலை கட்டி வழங்கும் தொண்டை ஆற்றுகின்ற குடும்பத்தைச் சேர்ந்த உரும்பிராய் மேற்கு மூன்று கோயிலடியில் வசித்த

### இராசையா சற்குணம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து வருந்துகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கந்தவேள் பெருமான் பாதம் பணிந்து வணங்குகின்றோம்.

**நீர்வேலி கந்தசுவாமி கோயில்** **கோயில் குருக்களும், பரிபாலன சபையினரும்.**

## மரண அறிவித்தல்



திருமதி.

### வாலாம்பிகை குமாரசுந்தரம்

அளவெட்டியைச் சேர்ந்தவரும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. வாலாம்பிகை குமாரசுந்தரம் அவர்கள் 14.12.2018 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற குமாரசுந்தரத்தின் மனைவியும் அமரர்களான ராசப்பா தம்பதிகளின் மகளும் பக்கிரிசாமி தம்பதிகளின் மருகளும், அமரர் சிவபாக்கியம், சுப்ரமணியம், தனலக்ஷ்மி, நாகராஜா, கமலாவதி, சாமிநாதன், லோகநாதன், (UK) ஆகியோரின் சகோதரியும், ரதி, வதனி (இசை ஆசிரியை), ரஞ்சனி, தர்மவதி (Australia), வாசஸ்பதி (ஆசிரியை யா/ ஸ்டான்லி கல்லூரி), ஹேமவதி(ஆசிரியை கொ/ இசிபத்தன கல்லூரி) நீதிமதி (ஆசிரியை தெஹிவளை தமிழ் மகா வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமாரதாஸ், ஸ்ரீதரன், சந்திரதாஸ், (Australia) ரஜீந்திரன், கபிலதாஸ், யோகராஜன், ஆகியோரின் மாமியாரும், சங்கீதா, தீபா, பவப்பிரியா, நாகதீபன, கார்த்தீபன், கீர்த்தனா, குரபரன், உசேனி, சிந்துபைரவி, அர்ச்சனா, தூயவன், ஸ்வரசாஹித்தியன், பார்க்கவி, எழில்க்குமரோன், கௌமாரன், வைசாலி, ஆகியோரின் பேத்தியும், ராகவி, லக்சன், ஆருத்ரா, தரணிகா சசாங்கன் சாதுர்யன் தேவ்வர்மா பிரவஸ்மா, விவர்த்தனி, சர்வஸ்மன், ஆதிரன், ஆரணன், அட்சயன், ஆகர்ஷன், ஆகதன், ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 17.12.2018 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 2.00 மணியளவில் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவல் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: பிள்ளைகள் **(0770337572 , 0718569954)**


**இப்பொழுது திரையில்**
**RIO FILMS Proudly presents**




வடக்கு, கிழக்கு

| | |
|---|---|
| Majestic Jaffna. 10.00, 7.30, 10.30 pm [021 222 7712] | Chelva Jaffna. 10.30, 2.30, 6.30 pm [021 222 7973] |
| Raja 1 Jaffna. 10.30, 2.30, 6.30 pm [021 222 7332] | Salu Cinema Point Pedro. 10.30, 2.30, 6.30 pm [021 226 5000] |
| Saraswathy Trinco. One Show [026 222 2221] | Nahams Chunnaham. 10.30, 2.30, 6.30 pm [0772 186 646] |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

## Room வாடகைக்கு

நல்லூர் பின்வீதியில் பெண்களுக்கு Attached Bath Room உடன் Room வாடகைக்கு உண்டு (CS 21851)

**T.P: 077 308 3007**

## விற்பனைக்கு

மலேசியன் செவிளை தென்னங்கன்று 6அடிக்கு உட்பட்ட சவுக்கங்கன்றுகள், தேசி, தோடை, மாங்கன்று மற்றும் பல இன மரக்கன்றுகளும் பழமரக்கன்றுகளும், பூஞ்சாடி, பூங்கன்று வகைகளும் மேலும் பலகன்றுகளும் விற்பனைக்குண்டு.

**நியூ லங்கா பாம்**
[illegible]
**077 612 9343**
**கிளை** K.K.S றோட், இணுவில்.
(CS 21796)(04.17)

## விற்பனைக்கு

மகேந்திரா கெப் ரக வாகனம் **PU XXXX** - தொடர் இலக்கம் கொண்ட வாகனம் உடன் விற்பனைக்கு.

**078 524 9886** (CS/21788) (11.17)

## ஜேசி இன பசு மாடுகள் விற்பனைக்குண்டு

கன்று ஈனும் நிலையிலுள்ள மாடுகள் சராசரி **120,000/-**,
கன்னி மாடுகள் சராசரி **100,000/-**,
ஜேசி இன நாம்பன் மாடுகள் சராசரி **80,000/-**
உடனடி விற்பனைக்குண்டு.

**புதூர் சந்தி, புளியங்குளம்.**
**075 597 2565**

## வேலையாள்கள் தேவை

பிரபல தங்குநர் விடுதிக்கு நடத்துனர் தேவை. (CS 21803)(04.17)

**077 112 3739/075 790 5975**

## மணமகள் தேவை

R.C. 40 வயதுடைய அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு R.C மணமகள் தேவை.

**077 477 9925** (CS/21766) (11.17)

## கடை விற்பனைக்குண்டு

பருத்தித்துறை பிரதான வீதியில் 122 (84) இலக்கம் கொண்ட கடை 2.9/16 குழி விற்பனைக்குண்டு. (கூடிய விலை கோருவோருக்கு முன்னுரிமை)

**077 949 3023** (CS/20519)

## வீடு வாடகைக்குண்டு

இல.404, திருநகர் தெற்கு (மஞ்சுளா பேக்கரிச் சந்தி), கிளிநொச்சியில் சகல நவீன வசதிகளுடன் புதிய வீடு வாடகைக்குண்டு.

**077 052 1167, 077 652 9607**

## கடை வாடகைக்கு

பிரதான வீதி, நெடுங்கேணியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக புதிதாக அமைக்கப்படும் கடை வாடகைக்கு உண்டு. (CS 21804)(04.17)

**077 112 3739/075 790 5975**

## பணியாளர்கள் தேவை

நெல்லியடியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றிற்கு சிட்டை எழுதுனர் மற்றும் பணியாளர் உடன் தேவை.
(வடமராட்சியில் வசிக்கும் 25 - 45 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டுமே)

T. P : 077 7422 604

## விற்பனைக்கு

யாழ். பொற்பதி வீதியில் மருத்துவ பீடத்துக்கு அண்மையாக மாணவர் விடுதி அமைக்க உகந்த 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
076 121 4255 jaffnarealestate.com

## For RENT வாடகைக்கு

யாழ் நகரப்பகுதியில் யாழ்இந்துக்கல்லூரிக்கு அண்மையில் 5 அறைகள், 2 வரவேற்புக்கூடம், 2 சமையலறைகள், 2 குளியலறைகள், 3 வாகனங்களுக்கான தரிப்பிடம் சகல வசதிகளுடனான வீடு நிறுவன உபயோகத்திற்கு மட்டும் வாடகைக்கு உள்ளது (Institutions/Companies)
தொடர்புகளுக்கு - 071 415 9809, 077 860 6167

## போட்டோ பிரதி இயந்திரம் விற்பனைக்கு

- றொசிபா france Used Black & White 256,306
- றிக்கோ கலர் மெசின் C 2050,C2051, C3002
- செரக்ஸ் 5890, 5865 நியூ ஸ்றொக் (நிமிடத்திற்கு 95 கொப்பிகள்)

1 வருட உத்தரவாதம்

தொடர்பு: 077 418 9217
கந்தர்மடம் ஆலடிச்சந்தி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

1981, யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் P.R. உடைய (கணக்காளர்) மணமகனுக்குப் படித்த அழகிய மணமகள் தேவை.
(தை மாதம் இலங்கை வரவுள்ளார்)
077 528 4718 (CS/21812)(11,17)

## காசாளர் தேவை

எமது நிறுவனத்துக்குப் பெண் காசாளர் தேவை. A/L, வர்த்தகம், கணிதம் பயின்றவர் விரும்பத்தக்கது.

ஆர்க் தளபாட நிலையம்
1169, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
077 300 1763 (CS/21837)(11,17)

## வீடு வாடகைக்குண்டு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு - 077 209 4869

## வேலையாள்கள் தேவை

1. **Room Cleaner** (விடுதி அறை துப்புரவாளர்)
2. **Cook** (சமையல் செய்பவர்)
3. **பாதுகாவலர்**

தகைமை உடையவர்கள் கீழ்க்குறிப்பிடும் விலாசத்தில் உங்கள் கிராம சேவகர் நற்சான்றிதழ் மற்றும் சுயவிவரக்கோவை (CV) யுடன் நேரில் வரவும்.

SAI HOLIDAY INN
132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடுவளவு விற்பனைக்கு

ஊர்காவற்றுறை முகாம் வீதி,
32 ஆம் இலக்க வீடு விற்பனைக்குண்டு.
3 அறைகள், ஹோல், பாத்றூம், சமையலறை, கிணறு மற்றும் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
விலை ரூபா 37,00 000.00
076 673 8894/ 076 879 4061

# VACANCY

St John's college Jaffna and St John's Academy and college of Technology

Applications are called from qualified persons to teach the following subjects :

*NVQ Pre School Teacher -Level 3 - (English Medium)
*NVQ Computer Hardware Technician -Level 4
*NVQ Information & Communication Technology -Level 4
*Sinhala as a Second Language -Grades 6 - A/L
*Special Education (Autism and others) -Primary&Secondary
*Science for Technology - A/L
*General Information Technology (G.I.T)& Information&Communication Technology (I.C.T) -(English Medium & Tamil Medium) - A/L
*Logic &Scientific Methods -A/L

Applications are also called for :

*Journalist cum Editor -College Publications (English)

Qualified persons are requested to send complete CVs including the Contact details of two non-related referees by post on or before 20th December 2018 to the address below . Only shortlisted candidates will be called for an interview

Principal-St.John's College, Jaffna


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி இராசரத்தினம்



செருக்கப்புலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் அரசடி வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கமலாதேவி இராசரத்தினம் 14.12.2018 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், றாஜ்மோகனின் அன்புத் தாயாரும், நிறோஜினியின் அன்பு மாமியாரும், அபிரனின் பாசமிகு பேர்த்தியும், காலஞ் சென்ற சுந்தரலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம், நகுலாதேவி, கனகமணி, கணேசலிங்கம், முத்துலிங்கம், காலஞ்சென்ற நேசலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசையா, காலஞ்சென்றவர்களான செல்வ ரத்தினம், சிவபாதம், வீரசிங்கம் மற்றும் இந்திராணி, சபாலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உயரப்புலம், அரசடி வீதி,**
**ஆனைக்கோட்டை**


(CS/21825)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

077 659 0428

---

பிறப்பு
04 . 08 . 1947



இறப்பு
14 . 12 . 2018

## கணபதிப்பிள்ளை தம்பு

விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும், பெரிய நாவலடி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தம்பு கடந்த (14.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் சரவணமுத்து குல்ரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் கணேசு காலஞ்சென்ற பராசக்தி மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற தெய்வநாயகியின் அன்புக்கணவரும் தணிகாசலாம் (லண்டன்), மகேஸ்வரி, யோகேஸ்வரி, லோகநாதன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சற்குணநாயகம் மற்றும் மங்களேஸ்வரி, மங்கையற்கரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாளினி (சமுர்த்திவங்கி உத்தியோகத்தர், கொடிகாமம்), மகீசன் (லண்டன்), றஜனி(லண்டன்), யசோகா(அசோகன், பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவரஞ்சன் (தபாலகம், கோப்பாய்), சிவசேந்தன் (லண்டன்), லோஜினி (லண்டன்), மீரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் டினெக் ஷன், டிலக் ஷனா, அபிராம், அக்ஸயா, அபிசாஜி, மதுராங்கினி, யோகவிந்தன், அனிஸ், ஆதினா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2018) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெரியநாவலடி, கொடிகாமம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
077 634 1227

---

# மரண அறிவித்தல்



## நல்லதம்பி முத்துக்கிருஸ்ணன்

*(தியாகு - முன்னாள் ப.நே.கூ. சங்க முகாமையாளர்)*

புளியங்கூடலைப்பிறப்பிடமாகவும், மாங்குளத்தைவசிப்பிடமாகவும்கொண்ட நல்லதம்பி முத்துக்கிருஸ்ணன் நேற்று (15.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சிதம்பரம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான் செல்லதுரை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வராணியின் அன்புக்கணவரும் தலைவர் நாகராசாவின் அன்புச்சகோதரரும் தயாளன் (கனடா), தயாளினி (ஆசிரியை, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாசாலை), காலஞ்சென்ற குணாளனி மற்றும் நல்வதனி (லண்டன் ) ஆகியோரின் அன்புத்தந்தையும் நளாயின் (கனடா), சிவநாதன் (சிவன் கிறீம் 'ஹவுஸ், திருநெல்வேலி), விஜயன், சிவபரன் (லண்டன்), ஆகி யோரின் அன்பு மாமனும் மகாராஜன், மனோகரி (கனடா), காலஞ்சென்ற குகராசன் ஆகியோரின் சிறிய தந்தையும் தேனுஷா, அபிஷா, கபிஷா, சாதனன், கீதப்பிரியா, விற்பரன், வித்[illegible], அட்சயா, பிருந்தன், டனுஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான ஜெகதாம்பிகை, இராசதுரை மற்றும் இராசேந்திரம், செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆ வார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் புளியங்கூடலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

தொழில் உறுதி

TVEC

## St. John's Academy & College of Technology

TVEC Registration No.P25/0076

Boys & Girls Apply Immediately! ADMISSION 2019

Closing Date for Applications: 02.01.2019
Course Duration : Six Months
Course Commencement : 9th January 2019

G.C.E. O/L = NVQ 3
G.C.E. A/L = NVQ 4

**Available NVQ Courses**

- Computer Hardware Technician – NVQ Level – 03 & 04
- Information and Communication Technology – NVQ Level -03 & 04
- Electrical Wiring - NVQ Level - 03
- Plumbing - NVQ Level – 03
- Radio ,T.V. & Allied Equipment Repairer – Mobile Phones
- Hotel & Restaurants Management (Front Office Operations)
- Additional Subjects for NVQ 3 Students: English Language, Mathematics, Sinhala Language

St. John's College Continuing Education (TVEC Reg No: P25/0077)

- Pre School Teacher NVQ Level – 03
- Introduction to Working in an Office – NVQ Level - 03
- Spoken Sinhala Certificate Course (for office staff & students)

**AAT**

Take AAT in English Medium or Tamil Medium parallel to Advanced Level

- Stage 1 Course Commences in January – Exams Following January
- Stage II Course Commences in February – Exams July (Same Year)
- Stages III Course Commences in August – Exams Following January
- For more details, contact, Mr.S.Gobinath, The Director, St. John's Academy & College of Technology, 446 Main Street Chundikuli Jaffna.

Tel: 021 222 24 32, 071 856 12 52

# Job opportunity

## *Community Association for Child Protection and Development (CACPD)-ITHAM*

**We are seeking applications from potential candidates for the following positions.**

**Project Coordinator with Psychosocial skill (01),**
**Counsellor (02), Field officer (03), Finance Officer (01),**

**Job Location:** Karainagar, Kayts and Velanai DS Division

**Contract:** One year with possibilities of extension (up to year 2020)

**Area of work:** To increase the capacity and skills of families with persons with disability, Women Headed Households, Children and Governance with Pradeshashaba members to participate in reconciliation, reconstruction and disability inclusive development and support the wellbeing and positive mental health through counseling skill.

**Knowledge and Skills:**

- Relevant academic background(Finance officer needed to know Tally accounting package)
- At least 2 years' experience working in the field along with Disability/Community Development.
- Good writing and interpersonal communication skills, including knowledge in spoken and written English.
- Knowledge and experience in training curriculum development, training needs assessment, facilitation etc.
- Capacity to transfer skills and knowledge.
- Good writing, communication and analytical skills.
- Computer skills in Word, Excel and PowerPoint
- Psychosocial background knowledge and counselling skill will be an added advantage.

**Applicants must possess:**

- Minimum 3 years working experience in the relevant field.
- Minimum 2 years' experience in worked with disability & WHH
- Counselling skills and therapeutic methods (Counsellors & project coordinator Required this Skills and knowledge)
- Computer literacy ( MS office is essential)
- Good report writing Skill (In English specially the Project Coordinator)
- Driving license - Type AD license (motor bike) is essential


**CACPD is an equal opportunity employer**

Interested candidates should forward their **complete resume** and **a motivation letter** with contact details along with two referees to reach us on or before the 21.12.2018. Sort listed candidates only will be invited for an interview. Except Finance officer others are field based.

Send your CV with a motivation Letter to:
The Chairman,
Itham CACPD,
Uppukula Road,
Kayts.
Or
**Managementitham2012@outlook.com**

(CS 21844)(10)

## விழிநீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
*சி. மாலினி* அவர்களின் அன்புத்
தந்தை

### கணபதிப்பிள்ளை சிவகுருநாதன்

நேற்று (15.12.2018) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**உதவி ஆணையாளர், சகஉத்தியோகத்தர்கள் ,**
**யாழ் மாவட்ட கூட்டுறவு திணைகள உத்தியோகத்தர்,**
**நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.11.2018 சனிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத்தலைவர்
அமரர்

### வைத்திலிங்கம் கருணாகரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (17.12.2018) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடை-பெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**அரசடி வீதி,**
**வடலியடைப்பு**
**077 926 3916**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 08 . 08 . 1929

மறைவு 16 . 11 . 2018

16.11.2018 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### அமரர் துரையப்பா தம்பிமுத்து

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 15.12.2018 நேற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (16.12.2018) ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**புலோப்பளை கிழக்கு,**
**பளை.**

**குடும்பத்தினர்.**

## கூட்டமைப்பின்...

தடை அடுத்த மாதம் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக மகிந்த ராஜபக்ச நேற்று அறிவித்தார்.

தனது பதவி விலகல் கடிதத்தில் கையெழுத்திட்ட பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**தேர்தலுக்கான போராட்டம்**

தேர்தல்களை நடத்தாது செயற்படும் அரசியல் கட்சிகளுடனேயே எமது போராட்டம் தற்போது காணப்படுகின்றது. கடந்த அரசு மாகாண சபைத் தேர்தலை காலவரையறை இன்றி ஒத்திவைத்தது. நீதிமன்றத்தை நாடியேனும் தேர்தலை நடத்துவதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார். அவரின் அந்த அறிவிப்புக் காரணமாக உள்ளூராட்சித் தேர்தலை விரைவாக நடத்த முடிந்தது.

நாட்டு மக்களுக்கு பொதுத் தேர்தல் இல்லாமற்போயுள்ளது. நவம்பர் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தை அரச தலைவர் கலைத்தார். இதற்கு எதிராகவும், தேர்தலை நடத்தாது தவிர்க்கும் வகையிலும் நீதிமன்றம் சென்றனர். ஐக்கிய தேசியக் கட்சி, சபாநாயகரின் ஒத்துழைப்பைப் பெற்று கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அமர்வை நடத்தி, தமக்குப் பெரும்பான்மை உள்ளதாகக் காண்பித்தனர்.

**கூட்டமைப்பிடம் பிடி**

இதன் உண்மை நிலையை கடந்த 12ஆம் திகதி நாட்டுமக்கள் உணர்ந்தனர். ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுவே அவர்களின் தேவையாகக் காணப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குமாறு 117 பேரின் வாக்குகள் காணப்பட்டன. இதில் 14 தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குமாறு வாக்களித்தாலும் மாவை சேனாதிராசா முக்கிய அறிவிப்பொன்றை விடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் எதிர்க்கட்சியிலேயே செயற்படும் என்று அறிவித்தார். 103 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பங்காளியாக்கிக் கொண்டே செயற்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யோசனைகளின் பிரகாரம் ஆட்சியைத் தொடராவிடின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சியதிகாரம் இல்லாமற்போய்விடும் என்பதே இந்த இருதரப்பு பிணைப்பின் முக்கியமான அம்சமாகும்.

**நாடு துண்டாடப்படும்**

நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்னர் புதிய அரசமைப்புத் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தியிருந்தார். புதிய அரசமைப்பின் வரைபு ஊடகங்களில் வெளிவந்துள்ளது. அந்த அரசமைப்பின் ஊடாக நாட்டில் கூட்டாட்சி (சமஷ்டி) கொண்டுவரப்பட்டு நாட்டை ஒன்பது பிரிவுகளாகத் துண்டாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும்.

மறுபுறம் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் அரச தலைவர் தேர்தல் இடம்பெறாது. அதேபோன்று நாடாளுமன்றத் தேர்தல் முறைமையும் புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றமடையும். எல்லை நிர்ணய விவகாரத்தை மையப்படுத்தி மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைத்துள்ளது போன்று 2020இல் நாடாளுமன்றத் தேர்தலையும் ஒத்திவைக்க முடியும். அதற்கான தயார்ப்படுத்தல்களையே தற்போது முன்னெடுக்கின்றனர்.

**பெரும்பான்மை**

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஆளுந்தரப்பில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெளியேறியதால் அரசமைப்புக்கு அமைவாக கூட்டு அரசு தானாகவே இல்லாமற் போனது. அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் எம்முடன் இணைந்ததால் கூட்டு எதிரணி நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மையைப் பெற்றது. 1994ஆம், 2000ஆம், 2001ஆம், 2004ஆம் மற்றும் 2015ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களின் பின்னர் ஆட்சியமைப்பதற்கான அதிகாரம் தெளிவான பெரும்பான்மை இல்லாத போதிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுதலாகக் காணப்பட்ட தரப்பு ஆட்சி அதிகாரத்துக்கு உரித்துடையதாக இருந்தது. இதன் பின்னரே பெரும்பான்மையை அவர்கள் நிரூபித்தனர்.

**இடைக்கால அரசு**

ஒக்ரோபர் 26ஆம் திகதி அரசை நாம் அமைத்த போது, அரச தலைவர் பொதுத்தேர்தலுக்கான அழைப்பை விடுத்தார். ஜனவரி 5ஆம் திகதி இடம்பெறவிருந்த பொதுத்தேர்தல் வரையில் ஒரு இடைக்கால அரசை முன்னெடுக்கும் நோக்கிலேயே ஒக்ரோபர் 26ஆம் திகதி தலைமை அமைச்சராகப் பதவியேற்றேன். கண்ணெதிரே நாடு அழிந்து கொண்டு செல்கையில் அரச தலைவரால் அதனை வேடிக்கை பார்க்க முடியாது. இதற்கமைவாக பொதுத்தேர்தலை நடத்தும் வரை இடைக்கால அரசை நிறுவ அழைப்பு விடுக்கப்பட்ட போது அதனை நிராகரிப்பது மாற்று அரசாக செயற்படுகின்ற எம்மால் இயலாத விடயமாகும்.

**ஆபத்து**

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இல்லை. நாட்டுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை ஓரளவு தடுக்க முடியும். ஆனாலும் இந்தக் கூட்டணியால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் அதிகமாகும். 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது, அப்போதைய அரச தலைவர் சந்திரிக்காவுக்கு ரணில் தெரியப்படுத்தவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

**வடகிழக்கு கட்சிகளும் கைகோர்க்கும்**

நாட்டு மக்கள் விரும்பிய ஆட்சிமாற்றம் தற்போது சற்றுக் காலந்தாழ்த்தப்பட்டுள்ளது. ஆனாலும் அவர்கள் விரும்பிய அந்த மாற்றம் நிச்சயமாக அவர்களை வந்தடையும். அதனைத் தடுப்பதற்கு எவராலும் முடியாது. கூட்டு எதிரணியையும், அரசில் அங்கம் வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் ஒன்றிணைத்து நோக்குகையில் நாட்டின் மொத்த வாக்கு வங்கியில் 54 சதவீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலான பலம் வாய்ந்ததொரு அரசியல் ஒருங்கிணைப்பு உருவாகியுள்ளது. அத்தோடு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் எம்மோடு இணைந்து கொள்ளும். எதிர்காலத்தில் எவராலும் தடை செய்ய முடியாத மிகப் பெரியதொரு எழுச்சி பெற்ற அரசியல் அணியாக நாம் முன்வருவோம் - என்றார். (5,10,61)

## கூட்டு...

சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதுடன், செவ்வாய்க்கிழமைக்குள் புதிய அமைச்சரவையும் சத்தியப்பிரமாணம் செய்யும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத்தை வெற்றி கொண்டமைக்கான வெற்றிக்கொண்டாட்டம் நாளை ஒரு மணிக்கு காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படவுள்ளது. மக்களின் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயகத்தையும் வெற்றி கொள்ள நாங்கள் மக்களுடன் இணைந்து பெரிய போராட்டத்தை முன்னெடுத்தோம். கட்சி பேதங்கள் இல்லாது அனைவரும் எம்முடன் இணைந்து செயற்பட்டனர். மக்களின் எழுச்சியால்தான் இந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இது கட்சியின் வெற்றியல்ல. ஜனநாயகத்துக்கும் மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

நீதிமன்ற சுயாதீனத்தால் அரசமைப்பையும், மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க முடிந்துள்ளது. அன்று யானை வேறு பலமில்லாதுதான் இருந்தது. ஆனால், இன்று யானை பலமடைந்தது மாத்திரமல்ல என்றுமில்லா சக்தி எமக்கு கிடைத்துள்ளது. எந்தவொரு தேர்தலுக்கும் எம்மால் முகங்கொடுக்க முடியும். நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணியின் அரசையே அமைப்போம். அது தொடர்பிலான பேச்சுக்களே நடத்தப்படுகிறது. 30 இற்குள் அமைச்சுகள் மட்டுப்படுத்தப்படும். ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராகப் பதவியேற்றபின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். 30 அமைச்சுகளுக்கு மேல் செல்ல வேண்டும் என்றால் நாடாளுமன்றில் அனுமதியைப் பெறவேண்டும்.

கூட்டமைப்புடன் எவ்வித உடன்படிக்கையும் நாங்கள் செய்து கொள்ளவில்லை. ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வை அவர்கள் கோரியுள்ளனர். அபிவிருத்தியை அங்கும் முன்னெடுக்க வேண்டும். மக்கள் மத்தியில் எடுப்படாத பொய்யான பரப்புரைகளை அவர்கள் தொடர்ந்து கொண்டுசெல்கின்றனர். எதனைச் செய்ய வேண்டும் என்றாலும், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். அவ்வாறு இல்லாது எதனையும் செய்ய முடியாது. திருட்டுத்தனமாக எதனையும் கொடுக்க முடியுமா?. அவர்களின் கருத்துகள் முட்டாள்தனமானவை- என்றார். (5,10)

## கொண்டாட்டமாக...

நேற்றுக் கோலாகலமாகக் கொண்டாடினார். மகிந்த ராஜபக்சவின் விஜேராம மாவத்தை இல்லத்தில் இந்த நிகழ்வு நடந்தது. சுபநேரத்தில் தனது பதவி விலகல் கடிதத்தில் அவரது ஆதரவாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ச கையெழுத்திட்டார்.

புதிய தலைமை அமைச்சரை அரச தலைவர் நியமிப்பதற்கு இடமளிப்பதற்காகவே, பதவியில் இருந்து விலகியுள்ளதாக, மகிந்த ராஜபக்ச கூறினார் என்று அவரது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஷெகான் சேமசிங்க தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி இரவு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால், சர்ச்சைக்குரிய வகையில் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்தராஜபக்ச, 50ஆவது நாளில் பதவியை விட்டு விலகியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்காத, அலரி மாளிகையில் வசிக்காத - மேன்முறையீட்டு நீதிமன்றினால், தலைமை அமைச்சராகச் செயற்பட முடியாமல் தடுக்கப்பட்ட தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச இந்த 50 நாள்களையும் கழித்துள்ளார். (5,10)

## கூட்டமைப்புக்குக்...

துக்கொள்கின்றோம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றியமைக்கமைய ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியவுடன் புதிய அரசமைப்பைக் கொண்டு வந்தே தீரும். இனப்பிரச்சினையால் ஆயுதப் போராட்டத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்கியே தீரும். அந்தத் தீர்வு நாட்டின் மூவின மக்களும் ஏற்கும் தீர்வாக அமையும்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நாட்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சூழ்ச்சி நடவடிக்கையால் அதிகாரத்துக்கு வந்தவர்கள் அதியுயர் சபையான நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை உதறி எறிந்துவிட்டு அராஜகம் புரிந்தார்கள். நீதிமன்றத்துக்கும் சவால் விடும் வகையில் அவர்கள் செயற்பட்டார்கள். ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் இவர்களுக்கு உரிய பாடம் புகட்டித் தீர்ப்பை வழங்கியுள்ளது. அதிகார வெறி பிடித்தவர்களில் முக்கிய புள்ளியாக இருந்தவர் தனக்கு ஏற்பட்ட அவமானத்தையடுத்து பதவியைத் துறந்துள்ளார். இனிமேலாவது இவர்கள் திருந்தி நடக்க வேண்டும்.

அரச அதிகாரத்தை பலவந்தமாக கைப்பற்றியதும் எதிர்தரப்பு அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டது போன்று நாங்கள் தாக்குதல் நடத்தப் போவதில்லை. அரசமைப்பை அனைவரும் பாதுகாக்க வேண்டும் என்பதே தீர்ப்புக்கள் மூலம் கூறப்பட்டுள்ளது. நாங்கள் நாட்டின் தற்காலிகப் பொறுப்பாளர்கள். அரச தலைவர், நாடாளுமன்றத் தேர்தல்களின் போது எவரும் மாறலாம். நாம் சிறந்த முன்மாதிரியான அரசாகப் பயணிக்கத் தீர்மானித்துள்ளோம். இடம்பெற்ற தவறுகளைப் புரிந்து கொண்டு சரியான பாதையில் பயணிக்கவுள்ளோம்.

அதேவேளை, அரச தலைவரின் ஆலோசனைகளையும், கருத்துகளையும் அறிந்துகொண்டு சக்திவாய்ந்த அரசாக பயணிக்க உள்ளோம். அவருடன் கைக்கோர்த்துப் பயணிப்போம். கடந்த மூன்றரை ஆண்டுகளாக அரசினுள் பிளவுகளை ஏற்படுத்த சூழ்ச்சித் திட்டமொன்று இடம்பெற்று வந்தது. ஒக்ரோபர் மாதம் 26 அரசு உடைந்தது. மீண்டும் இணைந்து பயணிக்க முடியாது என்றனர். இன்று என்ன நடந்துள்ளது. உண்மை வெற்றிக்கொண்டுள்ளது. எதிர்தரப்பு சதித்திட்டத்தின் மூலம் அரச அதிகாரத்தை கைப்பற்றி அரச பயங்கரவாத ஒடுக்குமுறையில் ஆட்சியைக் கொண்டு செல்ல பார்த்தனர். அனைத்து அபிவிருத்திகளையும் இடைநிறுத்தினர். மக்களைப் படுகுழியில் தள்ளினர். இவை அனைத்தும் இன்று சட்டத்தால் முறியடிக்கப்பட்டுள்ளன.

பிரிக்க முடியாத பிளவுபடாத நாட்டில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவோம். ஒற்றையாட்சியை ஒருபோதும் மாற்ற மாட்டோம். புலிகளால் கொல்லப்பட்டு, உயிர் தியாகத்தை செய்த தலைவர் எமது கட்சியைச் சேர்ந்தவர். இந்த நாட்டுக்கு புத்தசாசன அமைச்சை ஏற்படுத்தியவர்கள் எமது கட்சியின் தலைவர்களே. மக்களுக்கு பொய்யான வீடயங்களை கூறி மக்களிடமிருந்து எம்மை பிரிக்க முடியாது. நாம் எவருடனும் உடன்படிக்கையை செய்யவில்லை. ஆனால், இன,மத,பேதங்கள் கடந்து அனைவருக்கும் ஒரே மட்டத்தில் சலுகைகள் வழங்க வேண்டும். இனங்களுக்கிடையில் உள்ள கசப்பான அனுபவங்களை சுமூகமான உறவுப்பாலத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 220 இலட்சம் மக்களுடன் ஒரு சமூக உடன்படிக்கை உள்ளது. வேறு எந்த உடன்படிக்கையும் இல்லை.

தேசிய சகவாழ்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுத்து நாங்கள் செய்யும் வேலைக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் அவர்கள்தான் தேசத்துரோகிகள் - என்றார். (5,10,61)

## வரலாற்றுக்கால...

இராணுவக் கல்வியியற் கல்லூரியின் 93 ஆவது பயிற்சி நிறைவு விழாவில் நேற்று முற்பகல் கலந்துகொண்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாய் நாட்டின் எதிர்கால நன்மை கருதி அரசியல் கட்சி சார்பின்றி கடமைகளை நிறைவேற்ற அனைத்து மக்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். நாட்டில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பலப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்ற நான் தயாராக உள்ளேன்.

வரலாற்றுக் காலங்களில் எமது நாடு முகங்கொடுக்க நேர்ந்த படையெடுப்புகளை விட முற்றிலும் வேறுபட்ட அந்நிய நாடுகளின் செல்வாக்கு தற்போது எமது நாட்டின் மீது செலுத்தப்படுகின்றது. அத்தகைய சவால்களை கண்டறிந்து தாய் நாட்டின் எதிர்காலத்துக்காக ஆற்ற வேண்டிய பணிகளை அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து மக்களும் அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டும் - என்றார்.


சுதேசியக் கொள்கைக்கும், வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையிலான மோதல் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## ரணில்...

வருகிறது.

அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க, 5ஆவது தடவையாக தலைமை அமைச்சராகப் பதவியேற்கவுள்ளார். இந்தப் பதவியேற்பு நிகழ்வில் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமைச்சரவை நாளைய தினமே பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)



# இலங்கை அணி சுமார் ஆரம்பம்!

## பலம் காட்டினார் மத்தியூஸ்


நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் தொடரின் முதலாவது நாளில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. டிக்வெல்ல 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார்.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக குணதிலக மற்றும் கருணாரத்ன. சவுத்தியின் வேகத்தில் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் குணதிலக. தனஞ்சய டி சில்வா 1, குசல் மென்டிஸ் 2 என்று அடுத்தடுத்து பவிலியன் திரும்பினார்கள். 9 ஓட்டங்களில் 3 இலக்குகளை இழந்து தடுமாறியது இலங்கை அணி. கருணாரத்ன, மத்தியூஸ் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டெடுத்தனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது இலங்கை. அணி 142 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. அவரை வெளியேற்றினார் வாக்நெர். அணித் தலைவர் சந்திமலால் முடிந்தது வெறும் 6 ஓட்டங்களே. 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மத்தியூஸ். பின்வரிசையில் பலம் காட்டினார் டிக்வெல்ல. அவர் தனக்கே உரிய பாணியில் அடித்தாடினார். நாள் முடிவில் இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றுள்ளது இலங்கை அணி. டிக்வெல்ல 73 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)

### நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்

# தலைவராக மலிங்க அணியில் மத்தியூஸ்



நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடருக்கான இலங்கை அணிக்கு மலிங்க தலைவராக நியமிக்கப்பட்டார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் அணியில் இருந்து புறக்கணிக்கப்பட்டிருந்த மலிங்க அண்மையிலேயே மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டார். அவரிடம் தற்போது தலைமைத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும் ஒரு ரி-20 ஆட்டமும் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடர் ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணி விவரம்; மலிங்க (தலைவர்), டிக்வெல்ல (உபதலைவர்), மத்தியூஸ், குணதிலக, குசல் ஜெனித் பெரேரா, சந்திமல், அசல குணதிலக, குசல் மென்டிஸ், தனஞ்சய டி சில்வா, திசர பேரேரா, தசுன் சானக, சன்டகன், சிகுகே பிரசன்னா, சமீர, ராஜித, பிரதீப்.

இலங்கை அணியின் தலைவராக இருந்த மத்தியூஸ் ஆசியக் கிண்ணத் தொடரில் ஏற்பட்ட தொடர் தோல்வியின் எதிரொலியாக பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அவரின் இடத்துக்கு சந்திமல் நியமிக்கப்பட்டார். தற்போது சந்திமல் நீக்கப்பட்டு மலிங்க நியமிக்கப்பட்டார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 16

**கலைமதியின் கால்பந்தாட்டம்**

நண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் தனது வீரர்களுக்கு இடையில் நடத்திவரும் கலைமதி பிறீமியர் லீக் கால்பந்துத் தொடரின் ஆட்டங்கள் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி ரைகோர்ஸ் அணியை எதிர்த்து கலைமதி லயன்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி ரெட் றோசஸ் அணிய எதிர்த்து கலைமதி ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**விடியல் கழக கால்பந்தாட்டம்**

புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக பி அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து உதயம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# சமநிலை

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பார்சிலோனா - டொட்டென்ஹோம் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் தலா ஒரு கோலைப் பெற்றதை அடுத்தே ஆட்டம் சமநிலையிலானது. பார்சிலோனாவின் சார்பாக 7ஆவது நிமிடத்தில் டெம்பிலி கோலைப் பதிவுசெய்தார். டொட்டென்ஹோமின் சார்பாக லூகாஸ் 85ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்தார். (ம)







குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் அஜந் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 21 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் எஸ்.எம்.எஸ் அணியை எதிர்த்து அல்வாய் யுத் அணி இன்று மோதவுள்ளது. புலோலி இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ம23)

# ஹசில்வூட், ஸ்ராக்கின் பவுன்சர்களை கச்சிதமாக எதிர்கொண்டார் கோக்லி!

## ரகானேயும் நேர்த்தியான விளையாட்டு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று நிறைவில் இந்திய அணி 3இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுள் ளது. பெரும்பாலும் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று கிரிக்கெட் வல்லுனர்கள் கணித்துள்ளனர்.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் உலகின் அதிவேக ஆடுகளமான பேர்த் ஆடுகளத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 6 இலக்குகளை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதல்நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பெய்ன் 16 ஓட்டங்களுடனும், கம்மின்ஸ் 11 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். 19 ஓட்டங்களுடன் உமேஸ் யாதவின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் கம்மின்ஸ். ஸ்ராக் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் பெய்ன் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆஸ்திரேலிய அணி 326 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் இசாந் சர்மா 4 இலக்குகளையும், பும்ரா, உமேஸ் யாதவ், விகாரி மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ராகுல் மற்றும் முரளி விஜய். இருவருமே தடுமாறினார்கள். அதிலும் போல்ட் முறையில் ஆட்டமிழந்து இந்தியாவுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தினார் முரளி விஜய். ஸ்ராக் வீசிய பதிவானதும் சறுக்கல் தன்மையுடையதுமான பந்தை கணிக்கத் தவறி போல்ட் ஆனார் முரளி விஜய். ராகுலும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 8 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்களை இழந்து தடுமாறியது இந்திய அணி. புஜாரா, கோக்லி இணைந்து இந்திய அணியைச் சரிவில் இருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அடுத்தடுத்து நான்கு பவுண்டரிகளுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார். கோக்லி. பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. அணி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் புஜாரா. எனினும் ரகானே தனது கடமையை நேர்த்தியாகச் செய்தார். இந்த இணையை ஆஸியின் வேகப்பந்து வீச்சாளர்களால் தகர்த்துவிட முடியவில்லை. இருவரும் நீண்டு நிலைபெற்ற னர். ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்தனர். இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் முடிவுக்கு வந்தது. கோக்லி 82 ஓட்டங்களுடனும், ரகானே 51 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இவர்கள் தமக்கிடையே இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களைப் பகிர்ந்துள்ளனர். (ம)











# ஜடேயாவை அணியில் சேர்க்காதமை தவறே!

## கவாஸ்கர் சொல்கிறார்

“ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் ஜடேயாவைச் சேர்க்காதமை பெரும் தவறு” என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர். இரண்டாவது ஆட்டத்தில் காயம் காரணமாக அஸ்வின் விளையாடவில்லை. இதனால் அவருக்குப் பதிலாக ஜடேயா சேர்க்கப்பட வாய்ப்புண்டு என்று கருதப்பட்ட நிலையில் உமேஸ் யாதவ் அழைக்கப்பட்டார். இதையடுத்துக் கருத்துத் தெரி விக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் சுனில் கவாஸ்கர். “காயமடையா மல் இருந்திருந்தால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அஸ்வின் விளையாடி யி ருப்பார். ஆக, பேர்த் ஆடுகளத்திலும் சுழல்பந்து வீச்சு மிகமிக அவசியமே. இத்தகையதொரு நிலையில் சுழல்பந்து வீச்சே இல்லாமல் கோக்லி விளை யாடும் பதினொருவர் அணியைத் தெரிவுசெய்தமை பெரும் தவறு. ஜடேயா வுக்கு அணியில் இடம் கொடுத்திருக்க வேண்டும். ஜடேயாவாலும் அஸ்வினுக்கு நிகராகச் செயற்பட முடியும். சில ஆட்டங்களில் அஸ்வினை விடவும் ஜடேயா சிறப்பாகச் செயற்பட்டுள்ளார்” என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

# மீண்டும் வந்தார் ஆமிர்

பாகிஸ்தான் டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பி டித்தார் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சா ளர் மொகமட் ஆமிர்.

பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரி லும், ஒரு ரி20 ஆட்டத்திலும் இந்த இரண்டு அணி களும் விளையாடவுள்ளன.

முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம் பமாகிறது. இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் மீண்டும் ஆமிர் சேர்க்கப்பட்டார். ஆசி யக் கிண்ணத் தொடரில் வெளிப்படுத்திய மோச மான பெறுபேற்றின் காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்ட ஆமிர், தற்போது மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## பௌதீகவியல்

**2021 A/L பௌதீகவியல்**

T.K.கஜன் B.Sc (Physics)

ஆரம்பம்:- 18.12.2018 (5.00pm)

முத்தட்டை வீதி, கோண்டாவில் மேற்கு. T.P: 077 653 1177

## தேவை

SB travels and tours pvt ltd. Air ticketing இல் அனுபவமுள்ள வேலையாளர்கள் தேவை. ஒரு வருடத்திற்கு மேல் அனுபவமுள்ளவர்களுக்கு 18000/= + Commission சம்பளமாகும்.

**தொடர்பு: 021 222 9555**

No 212, Kasthuriyar Road, Jaffna.

Send CV to : sbtravelsjaffna@gmail.com

## உடன் விநியோகம்

யாழ்ப்பாணத்தில் அழைத்தவுடன் உ ங்கள் வீட்டுக்கு சமையல் எரிவாயு கொண்டு வந்து தரப்படும். (12.5 Kg Rs.1850 Only)

**ஒரு Miss Call :072 950 0062**

## காணி விற்பனைக்கு

வத்தளை அல்லிஸ்டவுன் Charry Land இல் இருக்கும் 8 Perch காணி விற்பனைக்கு உண்டு. ஒரு Perch 12 லட்சம் ரூபா பெறுமதியானது.

(தரகர்கள் தேவை இல்லை)

**076 231 3548**

(AJA/21666 (11.17)

## விற்பனை பிரதிநிதி தேவை

PVC விநியோக நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதி தேவை

தொடர்புகளுக்கு - 077 920 4157, 077 043 1692

விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

## பணி நிலை வேண்டுகை

- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (ஆண் / பெண்)
- தட்டச்சாளர்கள் (ஆண் / பெண்)

**முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.**

(17.12.2018 திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில்)
காலை 10 மணி தொடக்கம்
மாலை 3 மணி வரை நேரில் வரவும்

- நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நேரம் கவனத்திற் கொள்ளப்படும்.

**Harikanan** Printers of the North

1st Floor, K.K.S. Road, Jaffna.

## விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**தொழில் நுட்பப் பிரிவு A/L 2021 ஆரம்பம்**

- பொறியியல் தொழிநுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
- தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி

20.12.2018 வியாழக்கிழமை காலை 8.30

தொடர்புக்கு :077 248 7774

## www.AusTamilMatrimony.com.au

ஆஸ்திரேலியா. இலங்கை மற்றும் உலக நாடுகளில் வாழும்தமிழ் மணமக்களை இணைக்கும்சேவை.



Register before 31/01/2019 to get 3 months FREEmembership for Brides/Grooms living in Sri Lanka/Canada/UK/Europe

Ph: +61 415 150 483

## A/L 2K21

(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)

ஜனவரி 05

காலை 9.00 மணி

**DMI JAFFNA**

## SAMSUNG Galaxy A9



**World's 1st Quad Camera**

Telephoto Zoom Lens | Ultra Wide Lens

Product images shown are for representational purpose only, actual may vary.

பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Telecom

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

அ.கூ.சி.வி. 95.690/-

SamsungLankaOfficial
SamsungLankaOfficial

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இப்படத்தில் காண்பிக்கப்படும் பொருளின் விலை எவ்வித முன்னறிவிப்புமின்றி மாறுபடக்கூடும். இங்கு காண்பிக்கப்பட்டுள்ள பொருளின் படங்கள், அம்சங்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகள் ஆகியன கட்புலனுடான தெளிவுப்பாட்டை வழங்கும் நோக்குடனே அமைந்துள்ளன. உண்மையான பொருள் இதிலிருந்து மாறுபடக்கூடும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.